
இந்திரா
சௌந்தர்ராஜன்
ஏழாம் சக்தி

# ஏழாம் சக்தி

## (பிராகாமியம்)

இந்திரா சௌந்தர்ராஜன்

மின்நூல் ஆக்கம்: தமிழ்நேசன்

# ஏழாம் சக்தி

## 1

*அஷ்டமா சித்து வரிசையில் பிராகாமியம் என்னும் கூடு விட்டு கூடு பாயும் சக்தி ஒரு விந்தையான ஒன்றாகும்.*

*கூடு விட்டு கூடு பாய்தல் என்றாலே பளிச்சென்று நம் ஞாபகத்திற்கு வரும் ஒரு நபர் விக்கிரமாதித்தன்தான். விக்கிரமாதித்தன் கதை ஒரு புனை கதை. அது உண்மை கிடையாது என்று கூறும் சிலரும் உண்டு. இல்லை.. அவன் காடாறு மாதமும் நாடாறு மாதமும் ஆண்டது உண்மை. அவன் ஒரு அதிசய அரசன். அவனது சாகஸங்கள் உண்மையானவை என்பாரும் உண்டு*

*எது எப்படியோ?*

*விக்கிரமாதித்தன் அஷ்டமாசித்துக்களில் ஒன்றான பிராகாமியம் என்னும் கூடுவிட்டு கூடுபாயும் வித்தை தெரிந்தவன் என்றே வைத்துக் கொண்டு, அவனைப் பார்க்கும்போது அவன் நிறைய சிந்திக்க வைக்கிறான்.*

*இந்த வித்தையை ஒரு மந்திர சித்துவாக அவன் பெற்றானா..? இல்லை பயற்சியினால் அடைந்திருப்பானா என்றெல்லாம் கேள்விகள் எழும்புகின்றன. விக்கிர மாதித்தன் கதையை முழுவதும் அறிந்தவர்கள், அவன் அதை அன்னை காளியை யாசித்தே பெற்றான் என்பர். இல்லையில்லை அதெல்லாம் இடைச்செருகல்கள்.. விக்கிர மாதித்தன் அதை ஒரு பாடம் போலத்தான் கற்றிருக்க வேண்டும் என்றும் ஒரு கருத்து உண்டு.*

*மொத்தத்தில் கூடுவிட்டு கூடுபாயும் ஒரு சித்தி நமக்குள் பல சிந்தனைகளை தோற்றுவிப்பது மட்டும் நிச்சயம்.*

*இறந்த ஒரு உடலைத்தான் கூடு என்கிறோம். அது இயங்கிக் கொண்டிருந்தவரை அதில் உயிர் என்று ஒன்று இருந்தது. இதை ஆன்மா, பிராணன், ஜீவன் என்று பல பெயர்களில் விளித்தாலும் பொருள் ஒன்றுதான். இதுதான் உடலை அதனுள் இருந்தவரை ஆட்டி வைத்தது. இது விலகிய நிலையில் உடல் அப்படியே செயலற்றுப் போய் விடுகிறது.*

*உண்மையில் உயிர் பிரிந்து விட்டது என்பதை ஊர்ஜிதம் செய்ய, சுவாசம் அற்றுப் போவதைத்தான் கணக்கில் கொள்கிறோம். சுவாசம் அற்ற உடனேயே வெப்பமும் விலகி மற்ற பஞ்சபூதக் கலவைகளான நீர், நிலமாகிய சதை, ஆகாயமாகிய மனம் என்று எல்லாமே செயலற்றுப் போய் விடுகிறது. உருமாறவும் தொடங்கி விடுகிறது.*

*அப்படி என்றால் உடம்பை விட்டுப் பிரிந்த காற்றுதான் உயிராக இருந்ததா? இதுதான் இன்னொரு உடலில் நுழைந்து அந்த உடம்பின் இயக்கத்தை துரிதப் படுத்துகிறதா?*

***கேள்விகள் எழுகின்றன...***

*ஜெ*ட் ஏர்வேஸின் அந்த சிறிய விமானத்தில் இருந்து அவர்கள் நான்கு பேரும் உதிர்ந்தார்கள்.

இடம்: மதுரை விமான நிலையம்

நேரம்: காலை 8:15

வெளியே வந்தவர்களுக்காக காத்து கொண்டிருந்தது. அவர்கள் தங்களுக்கென வைத்துக் கொண்டிருக்கும் பொது வான பெயரான 'மிஸ்டிக் ஃப்ரண்ட்ஸ்' என்னும் பெயர் எழுதப்பட்ட வாடகைக் கார்.

உற்சாகமாக ஏறி அமர்ந்தார்கள். காரும் அவர்கள் முன் ஏற்பாட்டின்படி புக் செய்யப்பட்டிருந்த, பசுமலை தாஜ் ஹோட்டல் நோக்கி ஓடத் தொடங்கியது. நால்வரில் டிரைவர் சீட்டுக்கு அருகில் அமர்ந்தபடி சிகரெட் பிடிக்கத் தொடங்கி யிருக்கும் ஜெகதீஷ், ஒரு சுங்க இலாகா அதிகாரியின் மகன். செல்வாக்கான குடும்பத்து பிள்ளை. பின் வரிசையில் இடது கதவு ஓரம் அமர்ந்திருப்பவன் பிருத்வி! பிரபல சினிமா நடிகை தீபிகாவின் தம்பி. தீபிகாதான் தமிழ்நாட்டின் நம்பர் ஒன் கவர்ச்சி நடிகை. மார்புக்கு மட்டுமே ஐம்பது லட்சம் இன்ஷ்யூர் செய்து வைத்திருப்பவள். அப்படியானால் சம்பாத்யம் எவ்வளவு இருக்கும் என்று சொல்லத் தேவையே இல்லை. அக்காவின் சம்பாத்யத்தை தம்பி பிருத்வி, பீர் குடித்தே அழித்துக் கொண்டிருக்கிறான். இப்பொழுதுகூட அவன் கையில் ஒரு பீர் பாட்டில்தான் இருக்கிறது.

நெக்ஸ்ட் ரகுவீர். சினிமா ஹீரோ ஆக வேண்டும் என்கிற ஆசையில், உடம்பை பார்த்துப் பார்த்து வளர்த்து வைத்திருப் பவன். ஃபிலிம் இன்ஸ்ட்யூட்டில் நடிப்போடு, காமிராவுக்கும் சேர்ந்து படித்திருப்பவன்.

அதென்னவோ தெரியவில்லை.

நடிக்க சான்ஸே வரவில்லை.

காமிராவுக்குத்தான் வேலை வந்திருக்கிறது. அவன் மடிமேல் ஒரு மினி மூவி கேமரா!

வலது ஓரமாக வித்யாசமாக பீடி பிடித்தபடி அமர்ந்தி ருக்கும் கண்ணன். ஒரு ஸ்கிரிப்ட் ரைட்டர். டெல்லியில் தரப் படும் விருதுகளுக்கென்றே சிந்திப்பவன்.. சின்னதாய் ஆட் டுத்தாடி வைத்து பின்னால் ஐயர் போல குடுமி வளர்த்திருப் பான். (எழுத்தாளர்னாலே இப்படி வித்யாசமா கோணல் மாணலாத்தான் இருக்கணுமா என்ன?) நான்கு பேரும் அதி தீவிர சிந்தனையில் இருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒருவரும் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளவேயில்லை. ஏதோ நான்கு சண்டைக்காரர்கள், வேறு வழியில்லாமல் ஒன்றாக அமர்ந்து வந்து கொண்டிருக்கிறார் போல் இருந்தது. அது அந்த கால் டாக்சி டிரைவர் மாணிக்கத்தையே உறுத் திற்றோ என்னவோ.. மெல்ல வாய் திறந்தான்.

''சாருங்கல்லாம் மெட்ராஸ்ல இருந்து வர்றீங்களோ?''

நால்வரில் ஒருவர்கூட அவன் கேள்விக்கு பதில் சொல்ல வில்லை. வெளியிலேயே பார்த்துக் கொண்டு வந்தார்கள்.

''என்ன சார்... கேக்கறேன். எதுவுமே பேச மாட்டேங்கறீங் களே...?'' சன்னமாக வருந்தினான்.

போனால் போகிறதென்று அவனுக்கு பக்கத்தில் அமர்ந் திருந்த ஜெகதீஷ் வாயைத் திறந்தான்.

''ஏம்ப்பா.. ஏரோப்ளேன்ல வந்தாலே மெட்ராஸ்ல இருந்து

தான் வரணுமா?''

''இல்ல சார்... அந்த ஃபிளைட் மெட்ராஸ்ல இருந்து வர்ற ஃப்ளைட்தானே சார்? அதான் அப்படி கேட்டேன்.''

''அப்ப நீ தெரிஞ்சுகிட்டே கேட்டுருக்கே... அப்படித் தானே?''

''என்ன சார் நீங்க. மெட்ராஸா இருந்தா மெட்ராஸ்னு சொல்லுங்க. இல்லாட்டி.. இல்லேன்னு சொல்லிட்டுப் போங்க. கோர்ட்ல மடக்கற மாதிரி மடக்கறீங்களே சார்...''

''ஆமா.. மெட்ராஸ்னு ஒரு ஊரே இல்லையே.. நீ எதை வெச்சு கேட்டே?''

டிரைவர் விக்கித்துப் போய் பார்த்தான். கார் அதுபாட்டும் அதற்குண்டான வேகத்தில் ஓடிக் கொண்டேயிருந்தது.

''என்ன பாக்கறே?''

''பாக்காம என்னத்த பண்றது? விட்டா வடிவேலுவை கலாய்க்கற பார்த்திபன் மாதிரி, என்னை கலாய்ப்பீங்கபோல இருக்குதே சார்..''

''என் கேள்விக்கு நீ பதிலே சொல்லலை.. பார்த்திபன் வடிவேலுன்னு தேவையில்லாம பேசறே.. ஆமா இவங்க யாரு?''

ஜெகதீஷ் சீரியஸாக கேட்ட கேள்வி, அந்த டிரைவரை அப்படியே வாயை பிளக்க வைத்தது.

''சார்ர்ர்ர்.......'' என்றான் பரிதாபமாக.

''என்ன சார்.. யார் அது பார்த்திபன், வடிவேலு?''

''என்ன சார் தெரியாத மாதிரி கேக்கறீங்க.. பார்த்திபன் வடிவேலுவை தெரியாதவங்க கூட உண்டா சார்..''

''அவங்க யார்.. தமிழ்நாடு கவர்மெண்ட்ல மந்திரிங்களா.''

''சார்ர்ர்ர்ர்...''

''ஆ..ஊன்னா சார் சார்னு ஏன்யா ராகம் இழுக்கறே.. காரைப் பார்த்து ஓட்டு..''

ஜெகதீஷ் ஒரு குறும்புப் புன்னகையுடன் சொல்லிவிட்டு பின்னால் திரும்பிப் பார்த்தான். அவர்களும் பதிலுக்கு முகத்தில் குறும்புப் புன்னகையை தேக்கியிருந்தனர்.

ஆனால்.. டிரைவர் மாணிக்கம் முகமோ சுட்டக்கத்தரிக் காய் போல வதங்கிப்போய் விட்டிருந்தது. சாதாரணமாக தன் காரில் வருகிறவர்களிடம் நைச்சியமாக பேசி, நட்பை உரு வாக்கிக் கொண்டு அப்படியே அவர்களுக்கு தேவையான மற்ற உதவிகளையும் செய்து தருவதுதான் அந்த டிரை வருக்கு வழக்கம். அதில் ஐம்பது நூறு கிடைக்கும். சமயங் களில் அவர்கள் மதுரையைச் சுற்றிப் பார்க்க விரும்பி, டூரிஸம் ப்ளேஸ் பற்றி எல்லாம் கேட்பார்கள்.

அவனே சொல்வதோடு, அந்தக் காரிலேயே கூட்டிச் சென்று சுற்றியும் காட்டுவான்.

ஹோட்டலில் பாரின் மதுவகைகளை ஆர்டர் செய்தால் பில் பட்டை தீட்டி விடுவார்கள். எனவே வழியில் கடையில் வாங்கிக் கொள்ளலாம் என்பான். நல்ல கோவாச்சரக்கே,

இருக்கிறது என்று கூறி மதுரை காக்காத் தோப்பு பக்கம் தள்ளிக்கொண்டு போவான். அங்குதான் ஒடுக்குச் சந்துகள் ஏராளம்.. அதில் ஒன்றில் ஒரு வீட்டில் நெப்போலியன் சரக்கில் இருந்து கலக்கமுட்டி (படு லோக்கல் சரக்கு) வரை எல்லாமே சர்வ சல்லிசாக கிடைக்கும்.

சிலருக்கு மஜாவுக்கு பெண்கள் தேவைப் படுவார்கள். அவர்கள் பற்றிய லிஸ்ட்டும் அவனிடம் உண்டு. ஒரே ஒரு போன். ஜங்கென்று ரதமாட்டம் வந்து நிற்பார்கள்.

அதை எல்லாம் உத்தேசம் செய்துதான் அவர்களிடம் பேச்சை ஆரம்பித்தான். ஆனால் அந்த நான்கு பேரும் சரியான அராத்து பார்ட்டிகள் போல, அவனையே பிரட்டிப் பிரட்டி போட்டுக் கொண்டிருப்பது எல்லாம் அவனுக்குப் புதிய அனுபவம்.

''நானே பெரிய திருநெல்வேலி.. எனக்கே அல்வா தராங் களே..'' என்று மனசுக்குள் ஒரு ஓரமாக மருகிக் கொண்டான்.

காரும் பசுமலைக்குள் நுழைந்து தாஜ் ஹோட்டல் அமைந்திருக்கும் அந்த குட்டி மலைமேல் ஏறத் தொடங்கியி ருந்தது.

''என்னப்பா டிரைவர்.. ரொம்ப நேரமாச்சு. வாயே திறக்க மாட்டேங்கறே.. என்ன பேசப் பிடிக்கலையா?'' பக்கத்தில் இருந்து திரும்பவும் ஆரம்பித்தான் பிருத்வி.

''சார்... என்னை உட்றுங்க சார்.. நான் தொழிலுக்காக

பேசினேன். நீங்களோ துவைச்சு எடுக்கறீங்க..? ஒத்து வராது சார், விட்றுங்க.''

''தொழிலுக்காகன்னா..''

''வேணாம் சார், அப்புறம் நான் ஒண்ணு சொல்ல, நீங்க ஒண்ணு கேட்க, ஏட்டிக்கு போட்டியா தான் எல்லாம் போகும்.''

டிரைவர் மாணிக்கம் ஜகா வாங்கத் தொடங்கி விட்டது, அவன் சோர்வாக சொல்வதில் புரிந்தது. அது அவர்களுக்கும் புரிந்தது.

அறைக்குள் லக்கேஜை வைத்து விட்டு பணத்துக்காக கையை நீட்டியபோது, ஒரு ஐநூறு ரூபாய் நோட்டைத் தந்தான் பிருத்வி.

''சில்ரை இல்லையே சார்..''

''நாங்களும் மீதி சில்ரையை கேக்கலியே சார்..'' பிருத்வியின் பதிலில் டிரைவர் மாணிக்கத்திடம் ஒரு சின்னத் திக்குமுக்காடல்.

''சார்.. டாக்ஸிக்கு தொன்னூறு ரூவாதான் ஆச்சு. நான் நூறு ரூபா வாங்குவேன். நானூறு ரூவா கூடத் தர்றீங்களே..''

''எங்களுக்கு பிடிச்சுட்டா பணம்லாம் ஒரு விஷயம் கிடையாது. ஆமா உன் பேர் என்ன?''

''மாணிக்கம்..''

''இதே ஊரா?''

''ஆமாம் சார்.. பொறந்தது, வளர்ந்தது எல்லாமே மதுரை தான்.''

''அப்ப மதுரைல தெரியாத இடம் இல்லேன்னு சொல்லு.''

''எங்க போகணும்னு மட்டும் சொல்லுங்க, அப்புறம் பாருங்க.''

''சொல்றோம். நாங்க ஒரு வாரம் இங்க இருப்போம். ஒரு வாரமும் எங்க கூடவே இருக்கியா?''

''என்ன சார் கேள்வி. என் தொழிலே அதுதானே? டூரிஸ்ட் டுங்க வந்தா கூடவே இருந்து நாலு இடத்தை சுத்திக்காட்டி, அவங்களை சந்தோஷமா அனுப்பி வைக்கறது தான் சார் என் வேலை.''

''சரி.. நான் சும்மா ஜாலியா பேசினதை வெச்சு என்னை தப்பா எடுத்துக்காதே. நீ சொன்ன பார்த்திபன் வடிவேலு வெல்லாம் எங்க ஃப்ரெண்ட்சுங்க..''

''அப்படின்னா நீங்க?''

''சினிமாக்காரங்கய்யா. இப்ப கூட வித்யாசமா ஒரு டாக்கு மெண்ட்ரியும் அரை மணி நேரம் ஓட்ற மாதிரி ஒரு டாபிகல் சப்ஜெக்ட்டும் பண்ணத்தான் மதுரைக்கு வந்துருக்கோம்.''

பிருத்வி சொன்ன ஜோரில் 'தம்'மை ஒரு இழுப்பு இழுத்துவிட்டு, அப்படியே அருகில் இருந்த ரகுவீருக்கு தர, ரகுவீர் ஒரு இழு இழுத்துவிட்டு ஜெகதீஷிடம் தர, ஜெகதீஷ் கண்ணனிடம் தர, ஒரு சிகரெட் நான்கு பேர் உதட்டை சந் தித்து விட்டு திரும்பி வந்தது.

பார்க்கவே வேடிக்கையாக இருந்தது.

இதை ஆழமான நட்பு என்பதா.. இல்லை சிக்கனம் என்பதா.. புரியவில்லை.

''என்ன மாணிக்கம் பாக்கறே.. ஒரு சிகரெட்டை நாலு பேர் பிடிக்கறோம்னா.. ஒரே சமயத்துல நாலு சிகரெட்டை பிடிச்சு உடம்பை கெடுத்துக்கிறதுக்கு, ஒரே சமயத்துல நாலு பேர் ஒரு சிகரெட்டை பிடிச்சு உடம்பையும் காப்பாத்திக்கிட்டு, நட்பையும் பலப்படுத்திக்கிறது புத்திசாலித்தனமில்லையா?''

கண்ணன் சொன்ன விளக்கத்தில் ஒரு கவிதையே ஒளிந்தி ருக்கிற மாதிரி இருந்தது.

''நல்லா சொன்னீங்க சார், எனக்கு உங்க பேச்சு செயல் எல்லாமே வித்யாசமா இருக்கு. சரி சார்.. இப்ப நீங்கல்லாம் குளிச்சு டிபன் சாப்ட்ட பிறகு, மதுரைல எங்க சார் போகணும்?

மீனாட்சியம்மன் கோவில், வண்டியூர் தெப்பக்குளம், நாயக்கர் மகால், காந்தி மியூசியம். இது நாலும் டவுனுக்குள் ளாற இருக்குது. பதினைந்து கிலோ மீட்டர் அங்கிட்டு அழகர் கோவிலும், பழமுதிர்ச்சோலையும் இருக்குது. இங் கிட்டு திருப்பரங்குன்றம்.. இந்த ரூம்ல இருந்துகிட்டே கூட எல்லா இடங்களையும் நீங்கள் பாக்கலாம் சார்..''

மாணிக்கம் மளமளவென்று இடங்களைச் சொல்லி முடிக்க அவர்கள் நால்வரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டுவிட்டு, பரபரவென்று கைகளை தேய்த்துவிட்டுக்

கொள்ள, ரகுவீர் மட்டும் தன் கேமராவை தேடி எடுத்து, ஒரு பூனைக்குட்டியை தடவிக் கொடுப்பது போல தடவியபடி, ''இங்கெல்லாம் வேண்டாம் மாணிக்கம், பரபரப்பா நிறைய்ய பிணங்கள் எரியற ஒரு சுடுகாட்டுக்கு போகணும்'' என்றான்.

பகீரென்றது மாணிக்கத்திற்கு!

# 2

*இந்த உலகில் சில விசித்திரமான முயற்சிகளை பலர் பல சமயங்களில் செய்திருக்கிறார்கள். அதில் வானில் பறப்பது என்பது ஒன்று! ஒரு பறவையால் முடிவது மனிதனால் ஏன் முடியாது என்கிற கேள்வியில் தோன்றியது தான் பறத்தல். அதில் இன்று எவ்வளவோ முன்னேற்றங்கள். பறக்க விரும்பிய ஆசையால் தான் மனிதன் விமானத்தை கண்டு பிடித்தான். இன்று அது நூற்றுக்கணக்கான பேரை சுமந்து கொண்டு சர்வ சாதாரணமாக பறக்கிறது.*

*தனி மனிதன் பறப்பதற்கும் கிளைடர் போன்ற காற்றின் உதவியால் பறக்கும் விமாங்கள் வந்துவிட்டன.*

*இப்படி முடியாததற்கெல்லாம் முயற்சி செய்வது மனித மனத்துக்கும் தேவையாக இருக்கிறது. மனிதன் இப்படி எவ்வளவோ முயற்சிகளை செய்து தினம் தினம் புதிது புதிதாக பல விஷயங்களை கண்டறிந்து வருகிறான்.*

*ஆனாலும், அவன் அணுவளவுகூட வெற்றி பெற்றிராத சில விஷயங்களும் உலகில் இருக்கத்தான் செய்கின்றன.*

*எவ்வளவு முயன்றும் உடலின் திசுக்களில் மாற்றங்கள் ஏற் பட்டு முதுமை உருவாவதை தடை செய்ய முடியவில்லை. ஒரு தலைமுடி நரைப்பதைக்கூட தடுக்க முடியவில்லை. அதேபோல மரணத்தையும் வெல்வதற்கு அவனுக்கு வழி தெரியவில்லை.*

*குளோனிங் என்கிற பெயரில் ஒரு மனிதனைப் போலவே அவனில் இருந்து அவனது திசுக்களைக் கொண்டு இன்னொரு மனிதனை உருவாக்க முடிந்திருக்கிறது. ஆனாலும் எது உயிர் என்பதன் ரகசியம் விளங்கவே இல்லை.*

*எது உயிர்?*

*உடம்பில் நிலவும் உஷ்ணமா?*

*உள்ளே சென்று திரும்பும் காற்றா?*

*இல்லை மொத்த உடலெங்கும் பரவிக் கிடக்கும் தண்ணீரா? அதுவுமில்லாமல் இவைகளால்தான் உயிர் வாழ்கிறோம் என்று நினைக்கும் மனமா? (ஆகாயம்) எல்லாம் கலந்து நிற்கும் நிலமாகிய உடலா?*

*எது.. எது.. எது?*

*பஞ்ச பூதங்களும் (நீர்,நிலம்,நெருப்பு,ஆகாயம்,காற்று) சம அளவில் ஒன்றுபட்டு நிற்கும் போது ஒருவித ஜீவசக்தி தோன்றும். அதுதான் உயிர். இதில் ஒன்று விடுபட்டாலும் மற்றவை செயலிழந்து அந்த ஜீவசக்தி மறைந்துவிடும். ஆக பஞ்சபூதங்களின் ஏதோ ஒருவித அளவிலான கலவையால் உருவாகும் ஜீவசக்திதான் உயிரா?*

*கேள்விகள் கிளைக்கின்றன.*

*விஞ்ஞானிகளும் சும்மா இல்லை.*

*எவ்வளவோ பேரை ஆய்ந்து பார்த்து விட்டார்கள். குறிப்பாக இன்னும் சில மணிகளில் இறந்துவிடுவார் என்று மருத்துவர்களால் கூறுகின்றவர்களை தீவிரமாக கண்காணித்து, அவர் உடலில் நிகழும் மாற்றங்களை ஆராய்ந்து உடம்பை விட்டு விலகுவது எது என்றெல்லாம் பார்த்து விட்டார்கள். அந்த வகையில் வெளியிலிருந்து உடம்புக்குள் நுழையும் மூச்சுக்காற்று, நுழைய முடியாமல் போய்விட்ட நிலையில் உடல் முழுக்க மெல்ல உஷ்ணமும் அடங்க, நொடிப் பொழுதும் ஓய்வின்றி உடம்போடு கிடந்து இயங்கிய இதயமும் நின்றுவிட, அதனால் ரத்த ஓட்டமும் நின்று போக, மூளையும் சதா எதையாவது நினைப்பதில் இருந்து விடுபட்டு, நினைவற்ற தன்மைக்கு போய்விடுகிறது.*

*மொத்தத்தில் எல்லாமே ஸ்தம்பித்து விடுகின்றன.*

*இதில் ஒரு குறிப்பிட்ட பாகத்தில் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட வடிவத்தில், உயிர் என்று ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை.*

*கூட்டிக்கழித்து பார்த்தால் மொத்த விஷயமும் ஒருங்கிணைந்த நிலையில் ஒரு இயக்கம் ஏற்படுகிறது. அதைத்தான் உயிர் என்கிறோம் என்பது வரை தெளிவாகிறது.*

*எல்லாம் சரி!*

*இப்படி ஒட்டுமொத்த சேர்க்கையில் உருவாகும் இயக்கத்தை எப்படி உடம்பிலிருந்து... பலாப் பழத்தில் இருந்து தனியே சுளையை எடுப்பது போல எடுக்க முடியும்?*

*கூடுவிட்டு கூடுபாயும் பிராகாமியமோ, உடம்பு*

*அப்படியே இருக்க உடம்பை விட்டு உயிரானது விலகி, ஒரு வீட்டில் இருந்து நாம் இன்னொரு வீட்டிற்குள் நுழைவதைப் போல் இன்னொரு உடம்புக்குள் நுழைகிறது என்றல்லவா கூறுகிறது?*

*அறிவியல் பூர்வமாக உயிர் பற்றி ஆராய்ந்ததில் அது ஒரு தனிமம் அல்ல.. கூட்டுச் சேர்க்கையில் உருவான இயக்கம் என்பதாகத்தான் அறிய முடிகிறது. கூட்டுச் சேர்க்கையில் ஒன்று கலைந்தாலோ, இல்லை குறைந்தாலோ கூட மற்றவையும் செயலிழந்து இயக்கம் (உயிர்) நின்றுவிடுகிறது.*

*ஆனால், பிராகாமியப்படி பார்த்தால், உயிர் என்பது தனி. அது உடம்பில் இருந்தால் உடம்பு இயங்கும். (உடம்பு மோட்டார் என்றால் உயிர் பெட்ரோல் போன்றது) அது விலகி விட்டால் உடம்பு இயங்காது என்பது போல உணர்த்துகிறது.*

*இதில் எது சரி?*

*இப்படியிருக்க விக்கிரமாதித்தனிலிருந்து திருமூலர் வரை எப்படி கூடுவிட்டு கூடு பாய்ந்தார்கள். அதன் சூட்சுமம் தான் என்ன?*

***அ***ப்பொழுது தான் டாக்டரைப் பார்த்துவிட்டு வந்திருந்தாள் சகுந்தலா. முகம் முழுக்க எண்ணெய் பசை வெய்யிலில் அலைந்த களைப்பு. அவளுக்குமேல் களைத்துப் போயிருந்தாள் உமா. பத்து வயது மகள்!

இருவரையும் அதுவரை நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டு, பேப்பர் படித்துக் கொண்டிருந்த ராமசாமி திரும்பிப்

பார்த்தார்.

குழந்தை உமா.. வீட்டில் நுழைந்த நொடியில் கட்டிலில் படுக்கையில் போய் சுருண்டு படுத்துக் கொண்டது. பார்க்கவே என்னவோ போல் இருந்தது.

''டாக்டர் என்ன சொன்னார் சகுந்தலா?''

ராமசாமிதான் விசாரித்தார். அவர் காலிலும் பெரிதாக கட்டு. அதுதான் அவர் நாற்காலியில் அமர்ந்து கொண்டு பேப்பர் படிக்கவே காரணமோ என்று தோன்றியது.

சகுந்தலா பெருமூச்செறிந்தாள்.

மௌனமாக நின்றாள்.

''உன்னைத்தான் சகுந்தலா.. டாக்டர் என்ன சொன்னார்?''

''அவர் எங்க சொன்னார்..ஒட்டு மொத்தமா மூடி மறைச்சு பேசின மாதிரிதான் எனக்குப் படுது. உங்களை எப்படியாவது வரச் சொன்னார். உங்ககிட்ட பேசிக்கிறாராம்.''

''என்ன நீ.. நான்தான் நடமாட முடியாதபடி கால்ல கட்டோட இருக்கேனே.. நீ இதை அவர்கிட்ட சொன்னியா?''

''சொல்லியும்.. இல்ல எப்படியாவது வரச் சொல்லுங் கன்னா என்ன அர்த்தம்? நம்ம உமாவுக்கு ஏதோ தீர்க்க முடியாத வியாதின்னு தானே அர்த்தம்?''

''அட பைத்தியமே. ஏன் இப்படி கற்பனை பண்ணிக்கறே? உனக்கு சொன்னா புரியாதுன்னு நினைச்சிருக்கலாம்.'' சமா ளித்தார் ராமசாமி.

''இல்லீங்க. நீங்கதான் சமாளிக்கிறீங்க. எனக்கு ஒரு விஷயம் தெரிஞ்சுபோச்சு.''

''என்ன?''

''நம்ம உமாவுக்கு ஏதோ பயங்கரமான வியாதி. அவ பொழைக்கறதே கஷ்டம். இதுதான் விஷயம். இதைத்தான் அவர் உங்க கிட்டையும் சொல்லப்போறார்.''

''வாயைக் கழுவு முதல்ல. ஏன் இப்படி கற்பனை பண்ணிக் கறே? வியாதிங்கறது பாவத்தால வர்ற ஒண்ணு. நீயோ, நானோ என்ன பாவம் பண்ணிட்டோம். நம்ம குழந்தைக்கு வியாதி வர?''

''பாவத்தால வர்றதுதான் வியாதிங்கறது உங்க எண்ணம். ஆனா, கிருமிங்களால வர்றதுதான் வியாதிங்கறது விஞ் ஞானம்... நாம எந்த பாவமும் பண்ணாட்டியும், நம்ம மகளுக்கு இப்படி புரியாத ஒரு வியாதி வந்துருக்குதுன்னா அதுக்கு காரணம் விஞ்ஞானம் சொல்ற காரணமான கிருமி தானே?''

சகுந்தலா பதிலுக்கு பதில் பேசினாள். தெரிந்ததை, தோன்றியதை பேசுகிற மாதிரிதான் இருந்தது. ராமசாமிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. சரி என்று வலியைப் பொறுத்துக் கொண்டு டாக்டரைச் சந்திக்கப் புறப்பட்டார்.

* * *

***ச***ரியாக மூன்று மணி நேரம் கழித்து விட்ட நிலையில் திரும்பியவரை, வாசல்படியருகிலேயே நின்று கொண்டு வர

வேற்றாள் சகுந்தலா.

அவர் முகத்தில் பயங்கர வாட்டம்.

அதுவே பிரச்சினையின் ஆழத்தை காட்டிக் கொடுத்து விட்டது.

''என்ன சொன்னாருங்க டாக்டர்?''

அவள் கேட்டாள். ஆனால் அவரிடம் பதிலில்லை.

நேராக படுக்கையில் கிடந்த மகளிடம் தான் சென்றார்.

ஒரே மகள்.

திருமணமாகி ஆறுவருடம் கழித்து, அதுவும் சஷ்டி விரதம் இருக்கப்போய் பிறந்தவள்.

அழகென்றால் அழகு, அப்படி ஒரு அழகு...

முருகன் பரிபூரண கருணையை காட்டி விட்டதாகத்தான் ராமசாமியும் சகுந்தலாவும் நினைத்தனர்.

ஆனால் காட்டியது கருணை இல்லை. கொடுமை என்பது போல் இப்பொழுது தோன்றுகிறது.

உமாவுக்கு வயிற்றில் புற்றுநோய்.

உலகையே ஆட்டிப் படைக்கும் நோய். இன்று வரை ஒரு முழு மருந்தை யாராலும் கண்டு பிடிக்க முடியாத நோய். அந்த கொடிய நோய் தன் மகளுக்கு!

கடவுளே... நினைக்கும்போதே நெஞ்சு பாரமாகிப் போனது. திசுக்களால் ஆன இதயம் இரும்பால் ஆனது போல் மாறி

தக்தக் என்று நெஞ்சுக்கூட்டை மெத்தியது.

''ஏன் பேசமாட்டேங்கறீங்க.. நான் சொன்னதை தானே அவரும் சொன்னாரு?''

சகுந்தலா கையை ஆட்டி கேட்டவிதமே பயங்கரமாக இருந்தது.

மௌனமாக நின்று அவள் கருத்தை ஆமோதித்தார் ராமசாமி.

''எனக்குத் தெரியும்.. உன் உமா என்னை விட்டு போய்டப் போறா. அதான் உண்மை. நாம கும்புட்ட சாமிங்க எதுக்கும் நம்ம மேல கருணை இல்லை... இனி எந்த சாமியைக் கும் புடறதுலையும் அர்த்தம் இல்லை..''

சகுந்தலா பிதற்ற ஆரம்பித்து விட்டாள்.

அவர் ஒன்றும் அதற்குத் தடைபோடவில்லை.

அவருக்கும் அவள் கருத்தில் ஒப்புதல் தான் என்கிற மாதிரி மௌனமாக இருந்து விட்டார்.

டாக்டர் சொன்னது மட்டும் அழியாமல் காதில் எதிரொலிக்கத் தொடங்கியது.

''சாரி மிஸ்டர் ராமசாமி.. கான்சரோட ரொம்ப முத்தின ஒரு ஸ்டேஜில் இருக்கா உங்க பொண்ணு. கான்சர் இன்ஸ்ட்யூட்ல சேர்த்தா, ஒரு மூணு மாசம் கூடுதலா உயிர் வாழ்வா. அவ்வளவுதான். உங்களுக்கு அநாவசிய மருத்துவச் செலவை வைக்க நான் விரும்பலை. கொடுமையான இந்த நிலையை நீங்க ஏத்துக்கறத தவிர வேறு வழியில்லை.''

டாக்டர் கூறியது காதில் சுழன்று சுழன்று அடித்தது.

கண்களிலும் ஊற்று பீறிட்டது போல கண்ணீர், வாழ்க்கை க்ஷணத்தில் மாறிவிட்டது. இந்த நொடியில் உலகத்தின் சக்கரவர்த்தியாக உங்களை ஆக்குவதாக எல்லா வல்லரசு களும் தீர்மானித்திருக்கிறது என்று சொன்னால் கூட துளி சந்தோஷம் ஏற்படப் போவதில்லை.

ராமசாமியால் ஜீரணிக்கவே முடியவில்லை. அதே சமயம் சகுந்தலா வீட்டில் மாட்டப்பட்டிருந்த சாமி படங்களை எல்லாம் கழட்டி எறிந்து கொண்டிருந்தாள். காலண்டர் களையும் கிழித்துப் போட்டு தீயிட்டாள். நல்லவேளை.. நாரா யணமூர்த்தி வீட்டுக்குள் நுழைந்ததால் ஒரு சில படங்கள் தப்பித்தன. அதில் யோகி சம்பங்கிநாதரின் புகைப்படமும் ஒன்று. அவர் சமாதியாகி எவ்வளவோ காலமாகிவிட்டது.

நாராயணமூர்த்திதான் அந்த யோகி பற்றி ராமசாமி அறியவே காரணம்.

''என்னம்மா.. என்ன பண்ணிகிட்டிருக்கே? உனக்கு என்ன கிறுக்கு பிடிச்சிருக்கா...''

நாராயணமூர்த்தி காட்டமாக ஆரம்பித்தார்.

பதிலுக்கு அவள் கண்களில் கண்ணீர்.

ராமசாமியும் மௌனம் சாதித்தார்.

''என்னாச்சு... ஏன் இப்படி எல்லாம் நடந்துக்கறீங்க?''

தொடர்ந்து அவர் துருவியதில் மெல்ல உண்மைகள்

அவருக்கு தெரியத் தொடங்கின. சில பல நிமிடங்கள் அவராலும் பேச முடியவில்லை. இருந்தும் சுதாரித்தார்.

''சரி ராமசாமி.. புறப்படு..''

''எங்க நாராயணமூர்த்தி..?''

''புறப்படு சொல்றேன்.''

''எங்கன்னு சொல்லுப்பா. நீ கூப்பிட்ற இடத்துக்கு சட்டுன்னு வர்ற நிலையிலா நான் இருக்கேன். என் காலைப்பார் அப்படியே என் மன நிலையையும் யோசிச்சுப் பார்..''

''இதை எல்லாம் நீ சொல்லணுமாக்கும்? இந்த நிலையும் நீ கிளம்புன்னா, காரணமில்லாமலா சொல்வேன்.''

''சரி.. எங்கன்னாவது சொல்லு.''

''நம்ம சாமி சமாதிக்குதான்.''

நாராயணமூர்த்தி சொன்ன மறுநொடி ராமசாமி முகம் அஷ்டகோணலாக மாறியது.

''என்ன ராமசாமி... புறப்படு.''

''இல்லப்பா.. நான் வரலே என்னை விட்று.''

''அட நீ வேற.. இந்த மாதிரி நேரத்துலதாம்ப்பா நாம அவர் சமாதிக்கே போகணும்.''

''போயி..?''

''என்னப்பா கேள்வி இது? அவர்கிட்ட முறையிடுவோம்.''

''அட போப்பா... என்னமோ இந்த நிமிஷம் வரை நான்

தத்தேரியா சுத்திக்கிட்டிருந்த மாதிரில்ல பேசறே.. அதெல் லாம் எங்க யாரைப் போய் பார்த்தாலும் உமா பிழைக்க மாட்டா.. டாக்டர் தெளிவா சொல்லிட்டாரு..''

''டாக்டருங்கள விடுப்பா. ஒண்ணுன்னா ஒம்போதும்பாங்க. நீ நம்பிக்கையோட புறப்படு. எனக்கு நம்ம சாமி மேல நம்பிக்கை இருக்கு..''

''உனக்கு இருக்கு.. ஆனா எனக்கு இல்ல. இந்த வியாதி எனக்கு வந்துருந்தாகூட தாங்கியிருப்பேன். பாத்தியா.. இது சாகர வயசா?''

''அதுக்கெல்லாம் ஒரு சரியான காரணம் இருக்கும் ராம சாமி.''

''என்ன காரணம்.. பொடலங்கா காரணம்? பூர்வஜென் மத்துல நான் அந்த பாவம் பண்ணேன், இந்த பாவம் பண் ணேன், அதான் அனுபவிக்கறேன்னு சொல்வே... போப்பா..

நேத்து திருப்பரங்குன்றம் கோவிலுக்கு போயிருந்தேன். செருப்பு விடறதுல இருந்து விளக்கு ஏத்தறது வரை காசு. காசுன்னா காசு அநியாய காசு. லட்சக்கணக்கில் வருமானம். அதுவும் எல்லாரும் பயப்படற சாமிக்கு முன்னால. அந்த சாமி என்ன வேல் எடுத்துகிட்டு வந்து குத்தி கொன்னுட்டா போயிடுச்சு? விட்டா வேலையே வெச்சும் சம்பாதிப்பாங்க போல இருக்கே..

இதோ பார்.. கடவுள் நம்பிக்கை, சாமியார் நம்பிக்கை எல்லாம் சும்மா, நடக்கறது நடந்துகிட்டுதான் இருக்கும். சம்

பாதிக்கிறவன் சம்பாதிச்சுகிட்டுதான் இருக்கான். கடவுள்னு ஒருத்தர் இருந்திருந்தா அவர் அநியாங்களைப் பார்த்துட்டு எப்பவோ வந்துருக்கணும். கறுப்புப்பட்டை போட்டவங்க சொல்ற மாதிரி பக்திங்கறதெல்லாம் பாடாவதி நினைப்புப்பா. இந்த உலகம் எப்பவும் வலுத்தவனுக்குதான். இளைச்சவன் பணிஞ்சு போயிடணும், இல்லாட்டி அழிஞ்சு போயிடணும். நான் இரண்டாவது ரகம். அழிஞ்சி போயிட்டு போறோம். நீ போய் உன் வேலையைப் பார்.''

ராமசாமியிடம் விரக்தியும் வெறுப்பும் ஒன்றோடொன்று போட்டி போட்டது. இந்த மாதிரி சமயங்களில், எது சொன் னாலும் எடுபடாது என்பது நாராயணமூர்த்திக்கும் விளங் கியது. எனவே.. அவரும் அதற்குமேல் நின்று பேச்சை வளர்க்காமல் அங்கிருந்து கிளம்பினார்.

ஆனால், திட்டமிட்ட படி நேராக யோகி சம்பங்கிநாதர் சமாதி அமைந்துள்ள காரையார் காட்டிற்கு...

# 3

***உயிரைப் பற்றி விஞ்ஞானப் பார்வை பார்த்தால் அது ஒரு விதம். ஆன்மீகப் பார்வை பார்த்தாலோ அது வேறு விதமாக இருக்கிறது.***

***இரண்டு பார்வையும் பார்த்தவர்களில் சிலர் ஆன்மீகப் பார்வைதான் சிறந்ததாக உள்ளது. அதில்தான் உயிரின் ரகசியங்களை அறிந்து கொள்ள முடியும் என்கிறார்கள்!***

*எப்படி?*

*முதலில் உயிரைப் பற்றிய விஞ்ஞானப் பார்வைக்கு வருவோம். விஞ்ஞானம் என்பது எது? கண்ணால் கண்டு, காதாலும் கேட்டு, கருத்தாலும் உடன்பட்டு ஒன்றை ஒப்புக் கொள்வதே விஞ்ஞானம். இப்படி ஒப்புக் கொள்ளும் ஒன்று என்றும் மாறாமலும் இருக்க வேண்டும். மாறும் இயல்புடைய ஒன்றை விஞ்ஞானம் மறுத்து விடுகிறது. உதாரணமாக இன்று ஒரு அணுகுண்டு செய்கிறோம். அதன் வேலை எப்பொழுது வெடிக்கச் செய்தாலும், வெடித்து அழிவை உருவாக்குவதே.. ஆனால்.. உருவாக்கப் பட்ட அணுகுண்டு உபயோகிக்காமல் வைத்திருக்கும் நிலையில் வேறுமாதிரி தாக்கங்களை உருவாக்கி அது செயல்படாமல் போனால் அது விஞ்ஞான பூர்வ கண்டு பிடிப்பே அல்ல. அடுத்து இந்த மாதிரி கண்டு பிடிப்புகளில், இந்த மாதிரி விஷயங்களை புரிந்து கொள்வதில் எப்பொழுதும் நிற்பது நம்முடைய அறிவுதான். ஒருவரின் அறிவு என்பது அவர் அறிந்திருக்கும் அளவைச் சார்ந்தது. அவர் எவ்வளவு படித்திருக்கிறார். எத்தனை பேருடன் பழகி அனுபவப் பட்டிருக்கிறார். என்பதையும் பொறுத்தது. இம்மட்டில் மிகுந்த அனுபவசாலியும், மிகுந்த கல்வி கற்றவர்களும் கூட இந்த பரந்த உலகின் முன்னால், வானில் உள்ள கோள்கள் மற்றும் விண்மீன்களின் முன்னால், காற்றில் மிதந்து திரியும் தூசித்துணுக்கு அளவு கூட இல்லாதவரே!*

*இப்படி ஒரு துளி அளவு கூட இல்லாத ஒருவர் தன் பட்டறிவால், மொத்த உலகை, அதன் இயக்க ரகசியங்களை, மர்மங்களை கண்டறிய முடியுமா?*

*நிச்சயமாக முடியாது...*

*பல ஆயிரம் பேர் முயன்றாலும் கூட முடியாது. ஏதோ ஒரு துளி அளவு அறிந்திருப்போம் என்று வேண்டுமானால் சொல்லலாம்.*

*இன்றைய விஞ்ஞானமும் அப்படித்தான் அது அறிந்திருப்பது மிகக் கொஞ்சம். அறிய வேண்டியது மிக மிக அதிகம்.*

*அப்படியே ஆன்மீகத்துக்கு வந்தால் அதன் பார்வையே வேறு விதமாக இருக்கிறது. அது ஒரு சுலப வழியை காட்டுகிறது. ஒரு பானை முழுக்க சோறு வெந்துவிட்டதா இல்லையா என்று தெரிந்து கொள்ள, ஒரு சோறு போதாதா என்ன? உலகை, அதன் மர்மங்களை புரிந்து கொள்ளவும் நீ அனாவசியமாக சிரமப்பட வேண்டாம்.*

*உன்னைப் புரிந்து கொள்ள முயற்சி செய். அதில் வெற்றி பெற்றுவிட்டால் தானாக உலகம், அண்டவெளி, மற்ற கோள்கள் என்று எல்லாமே புரிந்துவிடும் என்கிறது.*

*இதைத்தான் சித்த பெருமக்கள், 'அண்டத்தில் உள்ளதே, பிண்டத்தில் உள்ளது. பிண்டத்தில் உள்ளதே அண்டத்தில் உள்ளது.' என்கிறார்கள்.*

*அந்த வகையில் நம்மை நாம் புரிந்து கொள்ள அப்படி என்ன இருக்கிறது என்று கேள்விகள் விரிகின்றன!*

***தா**ஜ் ஹோட்டல்!*

பரபரப்பான ஒரு சுடுகாட்டுக்கு செல்லவேண்டும் என்று சொல்லிவிட்டு, திரும்பவும் ஒரு சிகரெட்டை பற்ற வைத்து இழுக்க ஆரம்பித்திருந்த நான்கு பேரையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் டிரைவர் மாணிக்கம்.

''என்ன மாணிக்கம்... என்னடா ஊரை சுத்திக்காட்டச் சொல்லாம சுடுகாட்டுக்கு கூட்டிகிட்டு போகச் சொல்றா னேன்னு ஒரு திகைப்பா இருக்குதா?''

அதுவரை அவ்வளவாக பேசியிராத கண்ணன் முதல் தடவையாக கேட்டான்.

''ஆமாங்க.. நிஜமாதான் சொல்றீங்களா...இல்லை இதுவும் எதாச்சும் கலாட்டாவா?''

''நோ..நோ.. இட் ஈஸ் வெரி சீரியஸ்.. நிச்சயமா உன்னை ஆழம் பார்க்கவோ, கலாட்டா பண்ணவோ இதைச் சொல்லலை..''

''என்னங்க நீங்க.. நல்லாருக்கற யாராச்சும் சுடுகாட்டுக்கு போக ஆசைப்படுவாங்களா?''

''ஏன் நாமல்லாம் பார்க்கும், பீச்சும்தான் போகணும்னு ஏதாவது சட்டமா என்ன?''

''அப்படி இல்லீங்க.. அது ஒரு மாதிரியான இடம். நினைக்கவே யாருக்கும் பிடிக்காத ஒரு இடமும்கூட.. அங்க போயி..''

''நீ சொல்றது சரிதான். ஆனா நாங்க அந்த இடத்தை அப்படியெல்லாம் பார்க்கலை. ஒரு தெரு சுத்தமா இருக்க குப்பைத்தொட்டி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் ஒரு ஊருக்குச் சுடுகாடும்... செத்துட்டா மனுஷனும் குப்பைதானே? அவனை எரிச்சு சாம்பலாக்கி ஊருக்கு சேவை செய்யற இடத்துல பேய் இருக்கு, பிசாசு

இருக்குன்னு சொல்லி, தேவையில்லாம பயப்படறாங்க. இதனால சமூக விரோதிங்கள் சேர்ந்துகிட்டு சீட்டு ஆடற ஒரு இடமா அது ஆகிப்போச்சு. சுடுகாடுங்கறது ஒரு புனிதமான இடம். அது நல்லபடியா இருக்கணும். அங்க எந்தவிதமான பேயும் பிசாசும் இல்லை. எல்லாம் கற்பனைன்னு சொல்றதுதான் எங்க நோக்கம். அதுக்காக ஒரு அசலான சுடுகாட்டுக்கு போய் தங்கி, அங்க நடக்கற அவ்வளவையும் படம் பிடிச்சு, அப்புறமா க்ரிப்பா ஒரு அரை மணி நேரம் ஓடற படமா அதை தயாரிக்கறதுதான் எங்க நோக்கம்.

கண்ணனின் விளக்கம், மாணிக்கத்தின் வாயை அடைத்து விட்டது. மிரள மிரளப் பார்த்தான். இப்படி பேசுபவர்களிடம் எதைப் பேசுவது?

''ஷூட்டிங்னா ஊட்டி, கொடைக்கானல்னு போய்கிட்டு இருக்கறவங்களுக்கு நடுவுல நாங்க ரொம்ப வித்யாசமான வங்க. சினிமான்னாலே காதல், காமெடிதான்னு நினைச்சு கிட்டு இருக்கறவங்களுக்கு நடுவுலையும் நாங்க வேறு படறோம். வித்யாசம் அதுக்கு இன்னோரு பேர்தான் மிஷ்டிக் ஃப்ரண்ட்ஸ்!''

''அப்படின்னா?''

''என்ன அப்படின்னா... நான் உனக்கு புரியற மாதிரி தமிழ்லதானே பேசிகிட்டு இருக்கேன்.''

''தமிழ்ல பேசின வரை சரி... கடைசியா மிஸ்டிக்கோ, கிஸ்டிக்கோ ஏதோ ஒண்ணு சொன்னீங்களே..''

''ஓ.. அதுவா? மிஸ்டிக்குன்னா ஆத்ம பலம்னு அர்த்தம். ஆனா.. மந்திர தந்திரம்கற மாதிரிதான் நினைப்பாங்க. அதாவது, ஆத்ம பலமுள்ள உண்மையான நண்பர்கள்னு அர்த்தம்.''

''என்னங்க நீங்க, ஆத்மபலம் அது இதுன்னுகிட்டு, ஒண்ணும் புரியலீங்களே..''

''ஆத்ம பலம்னாலே உனக்கு என்னன்னு தெரியலியா? சரிதான்... ஆத்மான்னாவாவது என்னன்னு தெரியுமா?''

மாணிக்கம் முழித்தான்.

''செத்தப்பால ஆத்மா சாந்தியடையட்டும்னு சொல்வாங்க.. கேட்டிருக்கிறேன்..'' மாணிக்கம் பரிதாபமாக மூஞ்சியை வைத்துக்கொண்டு சொன்னதைப் பார்த்து நான்கு பேரும் 'க்ளுக்'கென்று சிரித்து விட்டனர்.

''என்னங்க சிரிக்கிறீங்க... இதுக்குதாங்க இந்த படிச்ச, துண்டு தாடி வெச்ச ஆளுங்களோடையே பேசக்கூடாதுங்கறது''

''அட.. என்ன மாணிக்கம், இப்படி அலுத்துக்கறே.. சரி சரி.. இனி உன்கூட வாயாட்றதுல அர்த்தமில்ல. விளக்கம் தந்தாலும் புரியாது. வேலையை பார்ப்போம். நாங்க கேட்ட மாதிரி சுடுகாடு எங்க இருக்கு?''

''அது இருக்குங்க.. ஏகத்துக்கும்! உங்களுக்கு எப்படிப்பட்ட சுடுகாடு வேணும்?''

புடவை துணிமணிகளில் ரகம் காட்டி எது வேண்டும்

என்று கேட்கிற மாதிரி கேட்டான் மாணிக்கம்.

''எப்படிப்பட்ட சுடுகாடுன்னா... ஆள் நடமாட்டமே இருக்கக்கூடாது. சதா பொணம் எரிஞ்சுகிட்டிருக்கணும். அங்கு ஒரே ஒரு வெட்டியான்தான் இருக்கணும். அவனைப் பார்த்தா பயமா இருக்கணும். நிறைய சமாதிங்க இருக்கலாம். அதாவது இடுகாடு, சுடுகாடு இரண்டும் கலந்து இருக்கணும். குறிப்பா ஒரு பிணத்தை புதக்கறதையோ, இல்லை அடக்கம் செய்யறதையோ, அப்புறமா சடங்கு செஞ்சு எரிக்கறதையும் நாங்க படமா எடுக்கப் போறோம். யாரும் எதுவும் சொல்லக் கூடாது..''

''நீங்க கேக்கற எல்லாமே பயங்கர குண்டாங்குதுர். காசு செலவு பண்ணா இங்க எல்லா காரியமும் நடக்கும். ஆனா.. நான் கூட இருக்க முடியாது.''

''ஏன்?''

''ஐய்ய... என்னங்க நீங்க எரிக்கறதையும் புதைக்கறதையும் போய் பாத்துக்கிட்டு. அப்புறம் எங்க போனாலும் அதே ஞாபகமாதான் இருக்கும்.''

''சரி.. உன்னை வற்புறுத்த விரும்பலை. நீ எங்களுக்கு தேவையான ஏற்பாட்டை பண்ணிட்டு கார்லையே வெயிட் பண்ணு. நாங்க எங்க வேலையை முடிச்சுகிட்டு வந்து சேர்றோம்.''

''உங்களை ஒண்ணு கேக்கலாமா?''

''என்ன?''

''தப்பா எடுத்துக்க மாட்டீங்களே..''

''அட சும்மா சொல்லுப்பா..''

''திரும்பி வருவிங்களா?''

''அப்படின்னா?''

''சுடுகாட்டுக்கு போய் அங்கேயே தங்கியிருந்துட்டு திரும்பி வர முடியும்னு எனக்கு தோணலீங்க..''

''என்ன.. எங்களை பேய் அடிச்சிடுமா?''

''எது வேணா நடக்கலாம்..''

''அப்ப வெட்டியானை அது எதுவும் பண்ணாதா?''

''அவனுக்க அது பொழப்பு. அடுத்து அவனுக்கு அதுங்க கிட்ட இருந்து தப்பிக்க வழி தெரியும்.''

''எங்களுக்கும் தெரியும்... எங்களை யாருன்னு நினைச்ச? நாங்க நவீன விக்ரமாதித்தர்கள்..''

நான்கு பேரும் ஒரே மாதிரி சிரித்தார்கள். மாணிக்கம் முகத்தில் மட்டும் இது எதில் போய் முடியுமோ தெரிய வில்லை என்கிற மாதிரி ஒரு கவலை.

''சரிங்க.. நீங்க குளிச்சு முடிச்சு டிபன் சாப்பிட்டுட்டு தயாராகுங்க.. நான் தத்தனேரிவரை போய்ட்டு வந்துடறேன்.''

புறப்பட்டான். அறைக்கு வெளியே வந்தான். ரூம் பாய்கள் எல்லாம் அவனுக்கு நல்ல பழக்கம். மாணிக்கம் ஒரு மாதிரி முகத்தோடு வருவதைப் பார்த்து கச்சிதமாக விசாரித்தான்

ஒரு ரூம் பாய்.

''என்னய்யா... பார்ட்டி மாந்தோப்பு கிளியே சுருளி மாதிரியா?'' அவ்வளவு கஞ்சனா என்பது கேள்வி.

''அட போப்பா.. வந்துருக்கற நாலு பேருமே சரியான பாதாளபைரவி ரங்காராவா இருப்பாங்க போல'' என்று அதிர்ச்சியளித்து விட்டு அவர்கள் ஆவலையும் சொன்னான்.

ரூம் பாய் முகமும் இஷ்டத்துக்கும் மாறிப்போனது.

''அப்ப இப்ப தத்தனேரிக்குப் போறியா?''

''ஆமா... அப்பப்ப மாமா வேலை பார்த்துதான் பழக்கம். இது ஒரு புதுமாதிரி வேலையில்ல..''

''அத்த உடு... பார்ட்டிங்க நல்ல காசுக்காரங்களா?''

''பின்ன.. ஏர்போர்ட்ல இருந்து இங்க வந்ததுக்கே ரூவா ஐநூறு தந்துருக்குறானுங்களே...''

''ஐநூறு ரூபா நோட்டா...''

''ஆமாம்..''

''முதல்ல போய் செக் பண்ணு.. ஐநூறு ரூவால்லாம் இப்ப சாதாரணமா கலர் ஜெராக்ஸ் மிஷின்லயே அடிக்கறாங்க..''

''ஐய்யோ.. நீ என்னப்பா பீதியை கிளப்பறே?''

''பின்ன... இந்த மாதிரி சுடுகாடு, கிடுகாடுன்னு அளம்பல் பண்ற பார்ட்டிங்க அப்படித்தான் இருப்பாங்க. சுடுகாட்டுல எதையாவது புதைச்சுவெக்க வழி இருக்கான்னு பார்ப்பாங்க.''

''ஏய்... என்னப்பா நீ புதுசு புதுசா சொல்லி அளம்பல் பண்றே?''

''எச்சரிக்கையா இருக்கச் சொல்றேன். இப்பகூட நம்ம ஹோட்டல்ல ஒரு சாமியார் தங்கியிருக்கார். முத்தையா மன்றத்துல சாயந்திரம் மூச்சு உடற்பயிற்சி பேசப் போறாராம். ஏன்னா நமக்கெல்லாம் மூச்சு உடத்தெரியாது பார்...''

''சரி.. அவருக்கு என்ன?''

''என்னாவா? அவரு அப்படியே அந்தரத்துல மிதப்பாராம். தண்ணிலையும் நடப்பாராம். ஒரு வாரத்துக்கு ஒரு வாழைப் பழம்தான் சாப்புடுவாராம். அமெரிக்கா, ஜப்பான்லல்லாம் அவருக்கு சிஷ்யங்க இருக்காங்களாம். அடிச்சு உட்றாங்கோ..''

''இப்ப அவர் எப்படின்னா நான் கேட்டேன். அதான் இந்த மாதிரி ஊருக்கு ஊர் சாமியாருங்க முளைச்சிகிட்டே இருக் கானுங்களே?''

''அதுக்கில்லப்பா... இன்னிக்கு உழைக்கறோம். பொழைக் கறோம்கறதுக்கு காலம் இல்ல. இப்படி எல்லாம் டுபாக்கூர் தனமா ஏதாச்சும் பண்றவங்களுக்குதான் காலம்!

பாரு.... சாமியாருக்கு எதுக்கு ஃபைவ் ஸ்டார் ஹோட்டல். வந்ததுல இருந்து கதவையே தொறக்கல.. ஒரு ஆர்டர்கூட புக் பண்ணல. நாங்கூட சாமி நீங்க எப்படி அந்தரத்துல மிதப் பீங்கோ.. கொஞ்சம் மிதந்து காட்டுங்கோன்னு சொல்லி அவரை ரேக்கி உடலாம்னு இருக்குறேன்..''

''பாத்துப்பா.. நான் வர்றேன். எதுக்கும் நீ சொன்ன மாதிரி ஐநூறு ரூபா நோட்டை செக் பண்ணிடறேன். அப்புறம் போலீஸ்காரனுங்க நம்மளை போட்டு கடாவ ஆரம்பிச்சுடு வானுங்கோ.. தீவிரவாதிகளை பிடிக்கமாட்டாங்க. பின்லே டனை பிடிக்கமாட்டாங்க. உன்னியும் என்னியும் மாதிரி அன்னாடங்காச்சிங்க கிட்டதான் வீரத்தை காட்டுவா னுங்கோ..''

புலம்பியபடியே கிளம்பிச் சென்றான்.

**அ**து ஒருவிதமான ஹோட்டல். வழக்கமான கட்டிட அமைப்பு கிடையாது. பளிச் சென்று எல்லா இடமும் துப்புரவாக இருக்கும். சில நேரங் களில் ஒரே இடத்தையே சுற்றிக் கொண்டேயிருப்போம். மாணிக்கத்துக்கும் குழம்பிது. அப்பொழுது அருகில் உள்ள ஒரு அறைக்கதவு மளுக் கென்று திறந்து கொள்ள, சாய்பாபா போல கழுத்து முதல் கால்வரையினான ஒரு காவி அங்கியோடு ரவீந்தரநாத் தாகூரே உயிரோடு வந்து விட்டமாதிரி ஒருவர் கதவுக்கு அப்பால் தெரிந்தார். ஜோதிச்சுடர் போல முகம் அவ்வளவு பளிச்சென்று இருந்தது. கண்களில் தான். அதிக ஒளி... கண்ணின் கரும் பாப்பாக்கள் ஏதோ ஒரு பச்சைக்கல் போல் கொஞ்சம் கருப்பு கலந்து தெரிந்து மின்னியது.

ரூம் பாய் சொன்ன சாமியார் இவர்தானோ? மாணிக்கம் அவரை வைத்த கண் வாங்காமல் பார்த்தான். அவர் ஒரு குறுநகை பூத்தார். சிரிப்பா அது? மோனலிசா முகத்தில் அவளது இழக்கடையில் ஒட்டியிருக்கும் புன்னகையை

விடவும் மேலான ஒன்றாக ஏகப்பட்ட அர்த்தங்கள் கொண்டிருந்தது அது.

பல வினாடிகள் பேச்சே வரவில்லை.

உலகில் எவ்வளவோ அபூர்வக்காட்சிகள். அதில் இந்த முகத்தையும் சேர்க்கலாம் என்று தோன்றியது. மாணிக்கம் தன்னையுமறியாமல் அவரைப் பார்த்து வணக்கம் சொன்னான். அவர் இதமாக கையை அசைத்து உள்ளே வரச் சொன்னார். எஜமான் பின் செல்லும் நாய்க்குட்டிபோல அவனும் அறைக்குள் நுழைந்தான். அறைக்குள் அற்புதமான தசாங்கம் வாசம். ஒரு மேஜை மேல் ஒரு சன்யாசியின் படமும் அந்த படத்தின் முன் விளக்கும் எரிந்து கொண்டிருந்தது. ஏதோ அமைதியான கோவிலுக்குள் நுழைந்தது போலிருந்தது.

''வாப்பா... வா...'' அவரும் வாய் திறந்து அழைத்தார். அழைத்த விதத்தில் அப்படி ஒரு அன்பு தெரிந்தது. கூடவே இப்படி எல்லாம் எல்லோரையும் அழைக்க முடியாது என்றும் தோன்றியது. ஏதும் பேசாமல் அவரையே பார்த்துக் கொண்டு நின்றான் மாணிக்கம்.

''நீ ஒரு கார் டிரைவர் தானே?'' அவர்தான் கேட்டார்.

''ஆமாம்..சாமி.. நீங்க...?''

''என் பேர் சிவானந்தம். பாத்தாலே தெரியுமே... நான் ஒரு சைன்ட்.!''

அவன் புருவம் 'சைன்ட்' என்பது புரியாமல் வளைந்தது.

''அதாவது சாமியார்னேன்..''

''நல்லது... எதுக்கு கூப்ட்டீங்க?''

''மதுரையில் சில இடங்களை நான் சுத்திப்பாக்கணும். கூட்டிகிட்டு போறியா?''

அவர் அப்படி கேட்பார் என்று மாணிக்கம் துளிகூட எதிர் பார்க்கவில்லை. முகத்தில் கொஞ்சம் சங்கடத்தை காட்டி னான்.

''என்ன யோசிக்கறே.. வேற வேலை இருக்குதா..?''

''ஆமாம் சாமி... மெட்ராஸ்ல இருந்து வந்துருக்கற நாலு பேர் இப்பதான் வண்டிய புக் பண்ணாங்க..''

''அப்படியா.. சரி. நான் வேற ஏற்பாடு செய்துக்கறேன். இப்பதான் ரிசப்ஷன்ல கேட்டேன். உன்னைப்பத்தி சொன் னாங்க. அதான் கேட்டேன். காக்கிச்சட்டை போட்ருக்கறதால நீதான் டிரைவரா இருக்கணும்னு யூகிச்சுதான் உன்னை பார்த்து டிரைவரான்னும் கேட்டேன்.''

அவர் அழகாக அவனை அறிந்த வழிவகைகளையும் விளக்கினார். அதுவே தன்னிடம் எந்த அற்புத சக்தியும் கிடையாது என்று சன்னமான குரலில் அவர் சொல்கிற மாதிரி தோன்றியது. அவர் பேச்சு, தெளிவான அணுகுமுறை எல்லாமே மிகப்பிடித்துப் போய்விட்டது மாணிக்கத்துக்கு.

''சாமி... எங்கல்லாம் போக ஆசைப்படறீங்க?'' பணிவாக கையை கட்டிக்கொண்டு கேட்டான்.

''மீனாட்சி அம்மனை முதல்ல தரிசிக்கணும். அப்புறமா

வண்டியூர் மாரியம்மன், பிறகு அழகர் கோவில் கள்ளழகர், திருப்பரங்குன்றம் முருகன், வரிசையா...''

மாணிக்கம் பரிதாபமாக பார்த்தான். இவரோடு கோவில் களுக்கு போவது பெட்டரா, அந்த நான்கு கில்லாடிகளோடு சுடுகாட்டுக்கு போவது பெட்டரா என்று ஒரு கேள்வி உடனே உள்ளோடியது.

இருந்தும் அவர்களிடம் ஒப்புக் கொண்டுவிட்டது தடுத்தது. என்ன செய்யலாம்? கேள்வியில் விழுந்தவனுக்கு நண்பன் வேலாயுதம் ஞாபகம் வந்தது. அவனும் கால்டாக்சிதான் ஓட்டுகிறான். அவனை இவரோடு சேர்த்து விட்டால் என்ன என்று தோன்றியது.

''சாமி.. என்னால முடியாதுங்க.. நான் ஏற்கனவே கமிட் ஆயிட்டேன். நம்ம தோஸ்த் ஒருத்தன் இருக்கான். அவனை ஏற்பாடு செய்யட்டுங்களா?''

ஸ்வாமிஜியும் தலையசைத்தார்.

''நல்லது சாமி... ஒரு அரை மணி நேரத்துல அவன் இங்கிட்டு வந்து உங்களப் பார்ப்பான். பேர் வேலாயுதங்க. யூஸ் பண்ணிக்குங்க. ரொம்ப நல்ல பையனுங்க...'' என்றான்.

அவரும் ஆமோதிப்பாய் சிரித்தார்.

''நல்லது... நான் அப்ப புறப்படறேங்க..'' என்று அங்கிருந்து வெளியே வந்தவன் திரும்பி அந்த அறையில் டேபிளில் இருந்த ஸ்வாமிஜி ஒருவரின் புகைப்படத்தைப் பார்த்தான்.

''அவர் பேர் யோகி சம்பங்கிநாதர். பொதிகை மலைல காரையார் காட்டுல மகாசமாதியாயிட்ட ஒரு சித்தர்...''

அவனாக கேட்கும் முன் சிவானந்தம் என்னும் அந்த சாமியார் மனிதர், தானாக முன் வந்து கூறினார்.

''அப்படிங்களா..?''

''ஆமாம்..''

''நீங்க இங்க எதுக்கு வந்துருக்கீங்க சாமி..''

''ஒரு பிரசங்கத்துக்காக..''

''ஆமாம் இல்ல... முத்தையா மன்றத்துல கூட நீங்க மூச்சுப் பயற்சி பத்தி பேசப் போறதா கேள்விப்பட்டேன்.

''பரவாயில்லையே.. உன் வரை தெரிஞ்சுருக்கே..''

''ஆமாம் சாமி... மூச்சு விடறதுல அப்படி என்ன சாமி இருக்கு? எல்லாரும் விட்டு உள்வாங்கிட்டு தானே இருக்காங்க.''

அவனையுமறியாமல் ஒருவித ஏளனம் இந்த கேள்வியில் கலந்து விட்டது. அவர் பதில் சொல்லாமல் முதலில் சிரித்தார். பிறகு, ''மூச்சுக் காத்துலதான் எல்லாம் இருக்கு. ஆடு மாடுங்களும் சுவாசிக்குது. அது அநிச்சை. அப்படி அநிச்சையா சுவாசிக்கறதுல இருந்து, வேறுபட்டு சுவாச முறைல சில மாற்றங்களை கொண்டு வந்தா உடம்பும் மனசும் ரொம்ப ரொம்ப லேசாயிடும். அதைப்பத்தி தான் பேசப் போறேன்... முடிஞ்சா வந்து கேள்...'' என்றார்.

''சரி சாமி..'' என்றவன் சட்டென்று ரூம்பாய் சொன்ன அவரது சாகஸங்கள் பற்றி ஞாபகங்கள் விழுந்து, ''ஆமா சாமி... நீங்க அந்தரத்தில் அப்படியே மிதப்பீங்களாமே? அப்படியா..?'' என்று கேட்டான். தொனியே அது எப்படி முடியும், என்கிற மாதிரியில் இருந்தது.

''அது என்ன ஒரு பெரிய விஷயம்?'' அவர் பதிலுக்கு கேட்டது, சர்வ சாதாரண ஒரு விஷயம் என்கிற மாதிரி இருந்தது. அவனுக்கும் ஆர்வம் தொற்றிக் கொண்டது.

''சாமி... எங்க ஒரு தடவை நேர்ல மிதந்து காட்டுங் களேன்..'' என்றான். ஆனால் அவரோ போய் வேலையைப் பார் என்கிற மாதிரி கதவை மூடினார். அவனுக்கு என்னவோ போலாகி விட்டது. இருந்தாலும் நண்பன் வேலா யுதத்துக்கு ஒரு போணி கிடைத்தது சந்தோஷத்தை தந்தது. கூடவே அந்த சாமியார் நல்ல அழகு என்றும் ஒரு குரல் அவனுக்குள் ஒலித்தது.

# 4

***நம் உடம்பில் மனம் என்பது எங்கிருக்கிறது? விஞ்ஞானிகளிடம் அந்த கேள்வியை கேட்டதற்கு அவர்கள் மூளையில் குறிப்பாக காலிஃப்ளவர் போல ஒரு அறுநூற்றி எண்பது கிராம் நிறையளவு கொண்ட மூளையில் உள்ள நியூரான் என்னும் செல்கள் தான் ஒட்டு மொத்த மனமாய் விளங்குகிறது என்றனர்.***

*இந்த மூளை எப்போது மடிகிறதோ அப்பொழுதான் ஒரு மனிதன் முழு மரணத்தை அடைகிறான் என்கின்றனர். சில நேரங்களில் சிலருக்கு இதயம் இயங்கும்... ரத்த ஓட்டமும் இருக்கும். உடம்பில் உயிர் இருக்கும். ஆனால் மூளை செயலிழந்து கோமா ஸ்டேஜிக்கு சென்றுவிடும். இப்படிப் பட்டவர்களை விஷ ஊசி போட்டு கொன்றுவிட சட்டம் இடமளிக்கிறது. அதற்கு முன் இவர்களது உடல் உறுப்புகளை எடுத்து பிறருக்கு பயன்படுத்திக் கொள்கின் றனர்.*

*மொத்தத்தில் விஞ்ஞானம் மரணம் என்று குறிப்பிடுவது மூளை செயலிழப்பதைத்தான்! தொடர்ச்சியான ஐந்து நிமிடங் களுக்கு ஆக்சிஜன் மூளைக்குள் செல்லாமல் இருந்தாலே போதும். மூளை செயல் இழந்து விடுகிறது.*

*ஆகக்கூடி காற்றாகிய ஆக்சிஜன் தான் உயிரா? அதை கொடுத்து வாங்குவதில்தான் எல்லாம் இருக்கிறதா?*

*போகட்டும்.. இறந்துவிட்டதாக கருதப்படுகிற ஒரு மனித உயிருக்குள் இன்னொரு உயிர் புகுந்து அதை செயல்படுத்து வதுதான் கூடுமாறல் என்கிறது அஷ்டமா சித்து.*

*ஆனால் இறந்துவிட்ட மனித உடல் உயிரற்ற நிலையில் அதுவரை இயங்கி வந்ததற்கு நேர்மாறாக செயல்பட ஆரம்பிக்கும். நொதித்துப் போய் அழுகத் தொடங்கிவிடும். செல்கள் புழுக்களாக மாறி நெளிய ஆரம்பிக்கும்... அதாவது ஒரு உயிராக இருந்த மனிதன் இறந்த நிலையில் லட்சம் கோடி புழுக்கள் உருவாகிட அவைகளின் உடலில் உயிரசைவு இருக்கும்.*

*இப்படிக் கெட்டு புழுக்கூட்டமாக மாறத்*

*தொடங்கிவிட்ட ஒரு உடம்பில் இன்னொரு உயிர் எப்படிப் புக முடியும்? அப்படிப் புகும் உயிர் முதலில் எங்கு சென்று அதை இயக்கும்? மூளையையா? இல்லை இதயத்தையா? இதயம் இயங்கத் தொடங்கி ரத்த ஓட்டம் பாய ஆரம்பித்தாலே, மூளைக்கும் ஆக்சிஜன் சென்று அது செயல்படத் தொடங்கி விடுமா?*

*அப்படியே செயல்பட்டாலும் அந்த மூளையின் நினை வறைகளில் அதாவது.. நியூரான்களில் அந்த உடம்பில் முன்பு இருந்தவரின் வாழ்க்கை ஞாபகங்கள் தானே இருக்கும்?*

*உடம்பில் புகுந்த உயிர் எப்படி அந்த ஞாபகங்களை ஒதுக்கிவிட்டு தனது ஞாபகங்களை அதில் செலுத்தி இயக்க முடியும்? தனது ஞாபகம் என்பது, தான் கைவிட்டு விட்டு வந்த உடம்பில் உள்ள மூளைச் செல்களில் அல்லவா இருக்கிறது?*

*அஷ்டமாசித்துவின் 'கூடு மாறல்' பற்றி புரிந்து கொள்ள முயல்கையில் இந்த கேள்விகளை ஒதுக்கிவிட முடிய வில்லை.*

***அ***கத்தியர் அருவி!

அதற்குண்டான நீர் வீழ்ச்சியோடு காட்சி தந்தது. இதுவரை அதில் நீர் விழாமல் போனதேயில்லை என்று பஸ்ஸில் வரும் பொழுது ஒருவர் சொன்னது நாராயண மூர்த்திக்கு ஞாபகம் வந்தது. அவர் தொடர்ந்து பேசிக் கொண்டே வந்தார்.

இப்பொழுது பருவங்கள் மிக மாறி விட்டது. இதை

விஞ்ஞானிகள் எல்னினோ என்கிறார்கள். மழைக்காலத்தில் வெய்யில், வெய்யில் காலத்தில் மழை என்கிற தப்புத் தப்பான மாற்றங்களில் நம் பூமி சிக்கிக் கொண்டு விட்டது.

பெட்ரோலிய காலாசாரம் அதன் கேடுகெட்ட புகை, செல்ஃபோன் கலாசாரம் அதன் மின் அலைகள், தொலைக் காட்சி கலாச்சாரம் அதன் அலைவரிசை அலைகள், இவை எல்லாம் ஐம்பது வருடங்களுக்கு முன்பு இல்லை. அன்று பூமிக்கு மேலான வானவெளி வெறும் மேகப் பொதிகளோடு மிகத் தூய்மையாக இருந்தது. ஆனால் இன்று வானப்பந்தல் முழுக்க புகை அழுக்கு.. மின் பந்தல், இதனால் மேகங்களில் அடிக்கடி சிதைவுகள். ஒருங்கிணைந்து அது மழையாக மாறுவதில் சிக்கல்கள், மொத்தத்தில் உலகம் முழுவதும் சராசரி வெப்ப அளவு கூடிக்கொண்டே வருகிறது. வெப்பம் கூடினால் விபரீதம்தான்! அந்த வெப்பத்தை குறைக்க ஒரே வழி மரங்களின் சுவாசமான கரியமில வாயுவும், ஏனைய சில கசிவுகளும்தான். ஆனால் காடுகள்தான் அழிந்து காலாவதி ஆகிவருகிறதே... அதைவிடக் கொடுமை ஆறுகள் திருட்டு போவது..

காசு திருவார்கள், நகை நட்டு என்று திருடுவார்கள்.. காரைக்கூட திருடுவார்கள். ஏன் என்றால் இவை எல்லாம் பொருள்கள் எங்காவது மனிதர் ஒரு ஆற்றையே திருவானா? ஆனால் ஆக்கரமிப்பு என்கிற பெயராலும், மணலை அள்ளியும், ஆறுகளை குற்றுயிரும் குலையுயிருமாக்கி விட்டோம்.

அன்றாட வாழ்வில் விஞ்ஞானத்தின் பேரால் சில சௌகர்யங்களை செய்து கொள்ள இயற்கையைத்தானே சுரண்டியுள்ளோம். களவு போன இயற்கை, கற்பழிக்கப்பட்ட இயற்கை, இப்பொழுது நம்மை பழிவாங்கத் தொடங்கி யுள்ளது.

தெருவில் வரும் தண்ணீர் லாரியைவிட பெரிய தண்ணீர் லாரி வானத்தில் வரும் மழைமேகம்தான். அது வரவேண்டிய நேரத்தில் வராவிட்டால் என்னாகும் என்பதைத்தான் பூமியில் இப்பொழுது எல்லோரும் பார்க்கத் தொடங்கியுள்ளோம்.

அவர் இப்படி எல்லாம்தான் பேசிக்கொண்டு வந்தார். சிந்திக்க வேண்டிய கருத்துக்கள். எதையுமே மறுக்கவில்லை. குறிப்பாக வானம் கெட்டு விட்டது என்கிற அவர் விளக்கம் மறுக்க முடியாத ஒரு நிஜமாகத் தோன்றியது.

ஆம்...

ஐம்பது வருஷத்துக்கு முன் இவ்வளவு வாகனங்கள் ஏது? அதனால் பெட்ரோல் புகைதான் ஏது? அதேபோல் செல்போன் ஏது, டி.வி சேனல்கள் தான் ஏது? எல்லாமே ஸ்பேஸ் என்னும் வான் வெளியை பயன்படுத்தித்தானே செயல்படுகின்றன.

காலியான வானத்தில் இன்று சொல்ல முடியாத அளவு மின் அலைகள், அவைகளில் ஒலிச் சப்தங்களும்கூட, இதனால் வானம் மாறிவிட்டதே. உட்கார்ந்த இடத்தில் இருந்தே உணரலாமே...

நராயணமூர்த்தி கூட அவர் கருத்தை அரிய சிந்தனை என்றே கருதினார். அப்படியே அகத்தியர் அருவியிலும் போய் குளித்தார். பனிக்கட்டியாக சில்லிட்டு உடம்பைத் துளையிடும் தண்ணீர் அது. ஆனால் வெதுவெதுப்பாக இருந்தது. அதுகூட கெட்டுவிட்டது.

உண்மையில் இப்பொழுது ஆசை நிரம்பிய மனிதர்கள் ஒரு பகுதியினரான விஞ்ஞானிகளால் இந்த பூமியை காப்பாற்ற முடியாது என்று தோன்றியது. இப்பொழுது தான் சித்தர்கள் வெளிப்பட்டு தங்கள் ஆற்றலால் கெட ஆரம்பித் திருக்கும் இந்த பூமியை கெடாமல் தடுக்க வேண்டும் என்றெல்லாம் நினைத்துக் கொண்டே அருவியில் மூழ்கினார். அதன்பின் அங்கிருந்து மேலே அணைக்கட்டு வரை பஸ்ஸில் பயணிக்கலாம். அதன்பிறகு ஒரு ஒற்றையடிப் பாதை வழியாக காட்டுக்குள் செல்ல வேண்டும். கடினமான வழித்தடம். நாராயணமூர்த்தி பலமுறை வந்திருந்தும் சில சமயங்களில் வழிமாறி எங்கெங்கோ சென்று விட்டிருக்கிறார். எனவே இந்த முறை எச்சரிக்கையாக செல்ல எண்ணியவர் மனதுக்குள் சம்பங்கிநாதரையே தியானித்துக் கொண்டார்.

''சாமி.. உங்க சமாதிக்குத்தான் வந்துகிட்டிருக்கேன். நான் சரியா வந்துசேர நீங்கதான் உதவி செய்யணும்'' என்று பிரார்த்தனை செய்து கொண்டார்.

நடை தொடர்ந்தது.

மனதில் குழந்தை உமாவின் உருவம் தோன்றியது. கொடியில் பூத்த மலர் பனித்துளிப்பட்ட நிலையில் பார்பதற்கு

மிக அழகாக இருக்கும். அப்படி ஒரு அழகான பெண்.. ஆனால் இந்தப் பிஞ்சைப்போய் எமன் கேட்கிறானே? கொடுமையாக இருந்தது. பரிதாபமும் நெஞ்சில் குத்தி வலிக்க விட்டது.

''சாமி.. உங்களை நம்பித்தான் வரேன். அந்தக் குழந்தை பொழைக்கணும். அவன் அப்பன் ரொம்ப நல்லவன். ஆனா, இதனால் நம்பிக்கை இழந்துட்டான். அவன் உங்களை நம்பறதுக்காக அந்த குழந்நை பொழைக்கணும்கறது என் எண்ணமில்லை. எந்த ஒரு குழந்தையும் இப்படி நோய் வந்து சாவோட போராடக்கூடாது. பாவம் அந்த குழந்தை அது என்ன பாவம் செஞ்சிச்சு..?''

மனம் கொள்ளாதபடி பிரார்தனைச் சுமையோடு நடந்து கொண்டிருந்தார் நாராயணமூர்த்தி. காரையார் காடு ஒரு அடர்த்தியான மலைக்காடு. யானும் மானும் திரியும் பூமி. ஒரு பக்கம் பாண தீர்த்தத்தால் உருவான மிக பெரிய பல மைல் நீள அகலத்தால் ஆன நீர்த்தேக்கம் அதில் முதலைகள்! இன்னொரு புறமோ கன்றின் மடியை முட்டும் பசுக்கன்று போல மலைமுகடுகளை முட்டும் மேகக்கூட்டம். பார்க்க மிக மிக ரம்மியமாக இருக்கும். அந்த மலைப் புறத்தை ரசித்துக் கொண்டே நடந்தார் நாராயணமூர்த்தி. தனியாக நடந்து செல்ல தைரியம் வேண்டும். இருந்தும் சம்பங்கிநாதரை பிரார்த்தனை செய்து கொண்டுவிட்டதால் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை என்று தோன்றியது. அவரே வழியில் பலரை துணைக்கு அனுப்பி வைத்திருக் கிறார். போன முறை ஒரு மலைப் பளியன் எதிர்ப்பட்டு

துணை வந்தான். இந்த முறையும் யாராவது நிச்சயம் எதிர்ப்படுவார்கள். துணை வருவார்கள் என்று நாராயண மூர்த்திக்குத் தோன்றியது. அது வீண் போகவில்லை. நடந்து செல்லும் வழித்தடத்தில், அப்படியே ஒரு ஓரமாக ஒரு பாறை மேல் ஒரு வயதானவர் படுத்திருந்தார். அருகில் அவர் வேட்டையாடிய நிலையில் உயிர் நீத்திருந்த காடைகள், கௌதாரிகள் ஒரு கயிற்றில் கால்களைக் கட்டி தொங்க விட்டிருந்தார். அதையும்கூட ஒரு மரக்கிளையில் கட்டிவிட்டு, களைப்புக்காக அந்த வேட்டைக்காரர் ஓய்வெடுக்கிற மாதிரி தோன்றியது.

அதேசமயம் அந்த இறந்துவிட்ட பறவைகளை விழுங்கு வதற்காக, அந்த மரக்கிளையில் ஒரு மலைப்பாம்பு ஒன்றும் வந்த வண்ணம் இருந்தது. நாராயணமூர்த்தி அதிர்ந்து போய் படுத்திருந்தவரை எழுப்பினார்.

''ஐய்யா.. ஐய்யா..''

அவரும் அலறி அடித்துக் கொண்டு எழுந்திருந்தார். நாரா யணமூர்த்தியை பார்த்து கண்களை கசக்கிவிட்டுக் கொண்டார்.

''அங்க பாருங்க.. உங்க வேட்டைப் பறவைகளை பாம்பு விழுங்க வந்துகிட்டிருக்கிறதை...'' அவர் உடனே ஜரூராகி எழுந்து சென்று, ஒரு கோலால் மரத்தில் தொங்கிக் கொண்டி ருந்த அவைகளை தட்டிவிடப் பார்த்தும் பலனில்லை. பாம்பு அதற்குள் வளைத்து விழுங்கத் தொடங்கி விட்டிருந்தது.

''அடச்சே.. இப்படி ஏமாந்துட்டேனே..'' அவர் முணு

முணுத்துக் கொண்டார்.

''போகட்டும் விடுங்க... அதுக்கும் பசிக்கு தீனி வேணும் இல்லையா...?''

''உண்மைதான்.. சாமி யாரு?''

''என் பேர் நாராயணமூர்த்தி, சித்தர்சாமி சமாதிக்கு போய்கிட்டிருக்கேன்.''

''சமாதிக்கா?'' அந்த வேட்டைக்காரர் கேட்ட விதமே ஒரு மாதிரியிருந்தது.

''ஆமாம்.. சமாதிக்குதான்.. ஏன்?''

''அது சமாதியில்ல. கோயில்.''

''சமாதி, கோவில் எல்லாம் ஒண்ணுதானே?''

''தப்பு, தப்பு.. சமாதிங்கறது உடம்பு அடங்குன இடம். அதை கோவிலா நாம நினைக்கலாம். அது எப்படி உண்மைல கோவிலாகும்?''

''அப்படின்னா அது சமாதி இல்லையா?''

''சாமி உயிரோட நடமாடிகிட்டிருக்கும் போது அவர் எப்படி சமாதியாக முடியும்?''

''என்ன சொல்றீங்க நீங்க.. அவர் உயிரோட இருக்காரா?''

''பின்ன.. அவர் காலமாயிட்டதா நீங்க நினைச்சுகிட்டு இருக்கீங்களா?

''அ... ஆமா.. அதுதானே நான் கேள்விப்பட்ட விஷயமும்கூட..''

''இல்லை.. இன்னிக்கு காலைலகூட சாமியை நான் பார்த்தேனே..?''

வேட்டைக்காரர் சொல்லச் சொல்ல நாராயணமூர்த்திக்கு தலையைச் சுற்றியது.

''என்னங்க.. நம்ப முடியலையா?''

''ஆமாம்.. ஏன்னா நான் சாமி சமாதி ஆனப்போ இந்த மலைக்கு வந்திருந்தேன். சமாதிக்குள்ற அவர் உடம்ப வெச்சு மேல மூடற வரை பார்த்துகிட்டிருந்தேன்.''

''அப்படியா.. அப்ப நான் பார்த்தது யாரை?''

''உலகத்துல ஒரே மாதிரி ஏழு பேர் இருக்கறதா சொல்வாங்க. அவங்கள்ல யாரையாவது ஒருத்தரை நீங்க பார்த்திருப்பீங்க..''

நாராயணமூர்த்தி தன் கருத்து என்று சொன்னதை அந்த வேட்டைக்காரர் ஏற்கவேயில்லை என்பது அவர் முகம் போன போக்கில் நன்றாக தெரிந்தது.

பேசிக் கொண்டே நடந்தார்கள்.

''என்னங்க சிந்தனை?''

''இல்லீங்க.. நான் சாமியை பார்த்தேன். இது வேற யாரோ இல்ல. அவர் கையை ஆட்டி எனக்கு ஆசிர்வாதமும் பண்ணாரே..''

''ஏன் அவரைப்போலவே இன்னொருத்தர் இருக்கக் கூடாது..?''

''இருக்கலாம்.. இருந்தாலும் இதெல்லாம் சமாதான மாத்தான் எனக்குப் படுது. எனக்கென்னமோ அவர் சமாதி ஆகலைன்னுதான் தோணுது.''

''சரி... உங்க நம்பிக்கை உங்களுக்கு.. என் நம்பிக்கை எனக்கு.'' என்ற நாராயணமூர்த்தி அந்த மலைப்பாதை இரண்டாக பிரியும் ஒரு இடத்தில் நின்றபடி...

''நான் இப்ப சமாதிக்குத்தான் போறேன், நீங்க..?''

''இல்ல.. எனக்கு வேற வேலை இருக்கு. நீங்க கிளம்புங்க.'' வேட்டைக்காரர் வேறு ஒரு புறமும், நாராயண மூர்த்தி ஒரு புறமுமாக பிரிந்து நடந்தனர்.

அழகான மலை...

காதுமடலை ஐஸ்கட்டியாக்கிவிட்ட குளிர்காற்று உள் காதுக்குள் விழும் மலைப் பறவைகளின் 'கீச்சு வீச்சு' சப்தம்..

பரம சுகமாக இருந்தது.

புள்ளிமான் ஒன்று இடையே வந்து காது விடைக்கப் பார்த்துவிட்டு பின் நாலு தாவலில் மறைந்தும் போனது. ஆனாலும் அவைகளை எல்லாம் ரசிக்க அவரால் முடிய வில்லை. ஒருபுறம் மனதுக்குள் உமா கூடாரம் போட்டிருந் தாள். இன்னொரு புறம் சம்பங்கிநாதர் சமாதியாகவில்லை என்று வேட்டைக்காரன் சொன்ன தகவல். இரண்டும் அவரை புரட்டி எடுத்துக் கொண்டிருந்தன. இதற்கு நடுவில்

அவர் தேடி வந்த சம்பங்கிநாதர் சமாதிக் கோவிலும் கண்ணில் பட்டது.

அடர்ந்த மரக்கூட்டத்திற்கு நடுவே சமாதிக்கட்டிடம் சாம்பல் நிறத்தில் தெரிந்தது.

பக்கத்திலேயே ஒரு குடிசை.. அதில் சம்பங்கிநாதரின் பிரதான சிஷ்யரான நம்பியப்பன் என்பவர் தங்கியிருந்து தினமும் சமாதிக்கு விளக்கேற்றுவது, பூஜிப்பது போன்றவை களை செய்து கொண்டிருந்தார். இப்பொழுதும் அவர் குடிசை யில் இருக்கலாம். நம்பியப்பனை நினைத்துக் கொண்டே நாராயணமூர்த்தி அந்த சமாதிக் கோயிலை சமீபித்தார். நல்ல வேளை.. நம்பியப்பனும் இருந்தார். சமாதிக் கோயில் வாசல் படியில் அமர்ந்து கொண்டு பவழமல்லிப் பூக்களை கட்டித் தொடுத்துக் கொண்டிருந்தார்.

''நமஸ்காரம் சாமி..''

''யாரு.. நாராயணமூர்த்தியா?''

''ஆமாம் சாமி.. எப்படி இருக்கீங்க..?''

''எனக்கென்ன.. சாமியோட அருளால அமோகமா இருக்கேன். நீங்க ஏது இவ்வளவு தூரம்?''

''ஒரு பிரார்த்தனை.. அதுக்காக வந்தேன்.''

''அதுக்காகவா மதுரைல இருந்து வந்தீங்க.. வீட்ல இருந்தே பிரார்த்தனை பண்ணிக்கலாமே..''

''பண்ணிக்கலாம்தான். இது கொஞ்சம் பெரிய விஷயம்.''

''சாமிக்கு எல்லா விஷயமும் ஒரே மாதிரிதான். பெரிசு, சிறிசுல்லாம் நாம பாக்கற பார்வைலதான் இருக்குது.''

''உண்மைதான் சாமி. எனக்கென்னவோ இங்க வந்து சொல்லி அழணும்னு தோணிச்சு.''

''நல்லது.. நல்லது.. வாங்க உள்ற போவோம். தீபாராதனை காட்றேன்.''

நம்பியப்பன் கட்டிய பூமாலையோடு எழுந்தார். நாராயண மூர்த்தி பக்கத்தில் சலசலத்து ஓடும் சிறிய ஓடைப் போக்கில் காலை நனைத்துக்கொண்டு கருங்கல் படிகளில் ஏறி சமாதிக் கோவிலுக்குள் நுழைந்தார்.

பன்னிரெண்டு சுடர் விளக்குகள் இருபுறமும் எரிந்து கொண்டிருக்க, பவழ மல்லிகை மாலையோடு எளிமையாக ராகவேந்திரரின் பிருந்தாவனம் போல காட்சியளித்தது சமாதி. நடுவில் ஒரு சிவலிங்கம்! நம்பியப்பன் ''பிரார்த்தனை பண்ணிக்குங்க..'' என்று அருகில் இருந்தபடியே சொல்லி விட்டு அவரும் தியானிக்கத் தொடங்கினார்.

நாராயணமூர்த்தியும் கைகளைக் கூப்பிக் கொண்டு பிரார்த்தனை செய்து கொள்ளத் தொடங்கினார்.

''சாமி.. அந்தப் பொண்ணு உமா பொழைக்கணும். புற்று நோய் வந்து பொழைச்சவங்க இல்லைங்கறது உங்களால் பொய்யாகணும். பாவம் ராமசாமி.. ரொம்ப மனசு ஒடிஞ்சு போய் உங்க மேலேயே நம்பிக்கை இழந்துட்டான். நல்லது நடக்கணும். அற்புதம் நடக்கணும்.. நீங்க மனசு வெச்சா

நடக்கும். உயிர்ப்பிச்சை போடுங்க..''

நெகிழ்ச்சியுடன் பிரார்த்தனையை செய்து கொண்டிருந்தவர் ஏதோ அரவம் கேட்டு திரும்பினார். கோவிலுக்கு வெளியே சலசலத்து ஓடியபடி இருக்கும் ஓடை நீரில் ஒருவர் கால் கழுவிக் கொண்டிருந்தார்.

கோவணம், திரிசடை என்று வித்யாசமான கோலம். பின் பக்கமாய் முதுகுதான் முதலில் தெரிந்தது.

யாரவர்..?

பிரார்த்தனையை மறந்து மனது அந்த கேள்வியில் விழுந்து அவரையே பார்த்தது. அவரும் திரும்பினார். நெஞ்சில் ஒரு கிள்ளு கிள்ளினார்ப்போல் இருந்தது.

சம்பங்கி நாதர்..

சித்தயோகி சம்பங்கி நாதரேதான்!

''சாமிஈஈஈ....'' நாராயணமூர்த்தி உணர்ச்சிவசப்பட்டு கூவியபடி அங்கிருந்து அவரை நோக்கி ஓடினார்.

சற்றே குனிந்து படிகளில் இறங்கி அந்த ஓடைப்பாதையை சமீபிப்பதற்குள் அவர் மாயமாய் மறைந்துவிட்டார்.

நாராயணமூர்த்தியிடம் பதைப்பு துளியும் அடங்கவில்லை. மேலிருந்து நம்பியப்பனும் எட்டிப் பார்த்து கேட்டார்.

''என்ன நாராயணமூர்த்தி.. யாரைப் பார்த்தீங்க..?''

''நம்ம.. நம்ம.. நம்ம சாமியை..''

''நம்ம சாமியையா?'' ஏனோ நம்பியப்பன் திருப்பிக் கேட்ட

விதமே ஒரு தினுசாக இருந்தது.

''ஆமாம் சாமி, நம்ம சாமியைத்தான் பார்த்தேன்.''

''அது.. அது.. நம்ம சாமி மாதிரியே இங்க ஒருத்தர் திரிஞ்சுகிட்டிருக்கார். அவரைப் பார்த்துருப்பீங்க..''

''அப்படியா..?''

''ஆமாம்.. ஆமாம்...'' நம்பியப்பனிடம் தடுமாற்றம் தொடர்ந்தது. பயங்கர திணறலும்கூட..

''ஏன் சாமி, அவர் அப்ப என்னைப் பார்த்து ஓடணும்..''

''இருக்காதே.. இங்கதான் எங்கையாவது இருப்பார். பொதுவுல நாராயணமூர்த்தி, இந்த சித்த சன்யாசிகள் கிட்டையே கொஞ்சம் குறும்பு இருக்கும். கண்ணாமூச்சி விளையாடி நம்மை ஆழம் பார்ப்பாங்க..''

''அப்படியா.. நான் என்னவோ ஏதோன்னு நினைச் சுட்டேன்.. அச்சு அசலா நம்ம சாமியே எதிர்க்க வந்து நிக்கறா மாதிரி இருந்துச்சு. வழியில் வேட்டைக்காரர் ஒருத்தர்கூட இந்த சாமியை பார்த்த விஷயத்தை சொன்னார்.''

''சரி.. சரி, நீங்க வாங்க.. வந்து தரிசனம் பண்ணுங்க.''

நம்பியப்பன் அழைத்துவிட்டு திரும்பவும் சமாதி கோவிலுக்குள் நுழைந்தார். சொன்னது போலவே தீபமும் காட்டினார்.

நாராயணமூர்த்தியும் கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

அதன்பிறகு ஒரு அரைமணி நேரம் தனியாக அமர்ந்து தியானம் செய்யத் தொடங்கினார்.

''தியானம் பண்ணப் போறீங்களா?''

''ஆமாம் சாமி..''

''நல்லா பண்ணுங்க.. நான் கொஞ்சம் அப்படி போய்ட்டு வந்துடறேன்.'' என்றபடி நம்பியப்பன் கிளம்பிச் சென்றார்.

நாராயணமூர்த்தியும் ஒரு மெல்லிய இருள் பாகத்தில் அமர்ந்து கொண்டு 'ஓம் குருவே நமஹ' என்று மனதை ஒருமைப்படுத்தத் தொடங்கினார். எப்பொழுதும் சித்த யோகிகளின் சமாதிக்கு செல்பவர்கள் அங்கே இப்படி, தியானத்தில் அமர்தல் அவசியம். தியானத்தில் அமரும் போது சுவாசம் முதலில் சமச்சீர் அடையும். பிறகு உடல் உறுப்புகள் ஒரேவிதமாக இயங்கி ரத்த ஓட்டம் சீராகும். இந்த நிலையில் மகா சமாதியில் இருக்கும் அருள் அலைகள் ஒரே சீரான அளவில் சமச்சீரான சுவாசத்தில் மெல்ல தியானிப்பவர்களுக்குள் நிறையும். இதனால் உடம்பில் இயக்கம், குறிப்பாக மூளைக்கு செல்லும் ரத்த ஓட்டத்தில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கான மின்காந்த அலைகள் முதலியன பரவும். மெல்ல ஆயிரக்கணக்கான எண்ணங் களில் உழலும் அவைகளில் இருந்து விடுபட்டு, ஒருவித சமநிலைக்கும், எண்ணங்களற்ற சூன்யத்திற்கும் வரும். இதனால் தாறுமாறான உடம்பின் இயக்கம் உஷ்ணம் முதலியவை சீராகும். ஆரோக்கியத்தின் முதல் கட்டம் இது. மனதும் பலம் பெறும். திரும்பவும் நாம் சகஜ நிலைக்கு

திரும்பி பல்வேறு எண்ணங்களில் நீந்தத் தொடங்கும்போது ஒரு புத்துணர்ச்சி தெரியும். பயம் என்பது மனதில் அறவே இருக்காது.

இதெல்லாம் சம்பங்கிநாதர் தன் திருவாயால் போதித்தவை. அவர் போதனையை நாராயணமூர்த்தியும் அவரது சன்னதி யிலேயே காட்டிவிடும் ஆவலோடு தியானத்தில் அமர்ந்து விட்டார்.

பத்மாசனம் போட்டு அமர்ந்த நொடி உடம்பு நரம்புகளில் ஒருவித இறுக்கம் ஏற்பட்டு, முதுகுத்தண்டுவடமும் நேராகி விட்டது. தண்டுவடத்திற்கு நேர் கீழான பாகத்தில் உள்ள சக்கரமும் ஒரு சீரான வேகத்தில் சுழலத் தொடங்கி விட்டது. மனமும் மெல்ல அடங்கியது. 'ஓம் குருவே நமஹ' 'ஓம் குருவே நமஹ...'' என்கிற குரலே அவரிடம் இருந்து ஒலித்தது.

ஒரு பதினைந்து நிமிடங்கள் கூட சென்றிருக்காது. பயங்கர நிசப்தமான சூழ்நிலையில் காற்றுக் குரலில் யாரோ நாராயண மூர்த்தியை பெயர் சொல்லி அழைக்கிறார் போல் இருந்தது.

இருந்தும் அவரது தியானம் கலையவில்லை.

அந்த காற்றுக் குரல் தொடர்ந்தது...

''நாராயணமூர்த்தி... என் அருமை சிஷ்யனே! நான் என் உடம்பை தொலைத்து விட்டு அனாதரவாக நிக்கறேன். அதை ஒருவன் கொண்டு போய்ட்டான். அவன்கிட்ட இருந்து என் உடம்பை மீட்டுத்தா!'' தொடர்ந்து அந்த குரல்

ஒலித்தபடியே இருந்தது. நாராயணமூர்த்தியும் தியானத்தில் முப்பது நிமிடத்துக்கும் மேல் இருந்துவிட்டு மெல்ல நிஷ்டையை விலக்கும்போது அந்தக்குரல் அவர் காதில் ஒலித்தது.

''நாராயணமூர்த்தி... என் அருமை சிஷ்யனே!

என் உடம்பை ஒருவன் திருடிக் கொண்டு விட்டான்.

என் உடல் ஒரு பஞ்சபூதக்கலவை. அது சமாதியில் அடங்க வேண் டியது. ஆனாலும் ஒருவன் அதைக் களவாடி என்னைப் போலவே திரிந்து வருகிறான். அவனிடமிருந்து என் உடம்பை மீட்டு சமாதியில் திரும்பக் கொண்டு வந்து சேர்..''

குரலொலியைக் கேட்ட நொடி நாராயணமூர்த்திக்கு பகீர் என்றது. ஒரு வினாடி நடப்பது கனவா, நிஜமா என்றெல்லாம் சந்தேகம் கூட எழும்பியது.

மலங்க மலங்கப் பார்த்தவர் எழுந்தார். சற்று வெளியே போய்விட்டு வருகிறேன் என்று சொன்ன, அந்த சமாதி கோவிலின் சிஷ்யன் நம்பியப்பனைக் காணவில்லை. எங்கே போய்விட்டார் இந்த நபர் என்கிற தேடலுடன் பூனை போல நடந்த நாராயணமூர்த்தியை, ஒரு சலசலக்கும் புதர் கவர்ந்து இழுத்தது. மெல்ல எட்டிப் பார்த்தவர் கண்களில், நம்பியப் பனும், சம்பங்கிநாதர் உருவில் இருந்த அந்த மனிதனும் தான் பட்டனர்!

ஒரு க்ஷணம் நெஞ்சையடைத்தது.

''வேதா.. உனக்கு எத்தனை தடவை சொல்லியிருப்பேன். இந்தப் பக்கம் வரக்கூடாதுன்னு..''

''நம்பி.. எனக்கு எங்க போறதுன்னே தெரியல. இந்த உடம்புக்குள்ள நுழைஞ்சிட்டு படாதபாடு பட்டுகிட்டு இருக்கேன்; சாமி சமாதியாயிட்டது எல்லார்க்கும் தெரிஞ் சிட்டதால என்னைப் பார்த்தா பயப்படறாங்க.''

''அதுக்காகத்தான் அன்னிக்கு தலையில அடிச்சுகிட்டேன். நீயோ கத்துகிட்ட வித்தையை பரீட்சை பண்ணி பார்க்கறேன். கண்ட உடம்புல நுழைய விருப்பமில்லைன்னு குருவோட உடம்புலேயே நுழைஞ்சு சாமாதியை விட்டும் வெளியே வந்துட்டே?''

''இப்ப நான் என்ன செய்யட்டும்?''

''என்ன செய்யட்டும்னா.. குருவோட ஆத்மா என் மேல ரொம்ப கோபத்துல இருக்கு.. தயவு செய்து இந்த உடம்பை விட்டு வெளியே போயிடு.''

''என் உடம்பைதான் அன் க்ளைம் டு பாடின்னு போலீஸ்ல எரிச்சிட்டாங்களே. நான் இப்ப எப்படி வெளியேற?''

''நாட்டுல பிணங்களுக்கா பஞ்சம்?''

''கண்ட உடம்புல புக எனக்கு விருப்பமில்ல. அந்த விஷயத்துல எனக்கு ஒரு திட்டமிருக்கு.''

''சரி.. அதுவரைக்குமாவது யார் கண்ணுலையும் படாம அந்த மலைக்குகைல இரு..''

''ஒரு ஐடியா பண்ணினா என்ன?''

வேதா என்கிற பெயரில் அழைக்கப்பட்ட சம்பங்கிநாதர் உருவத்தில் இருந்தவன் கேட்ட போது, ஒளிந்தபடி பார்த்துக் கொண்டிருந்த நாராயணமூர்த்தியின் கால்களில் வழுவழு வென்று ஏதோ ஒன்று ஏற 'ஆ..' என்று அவரும் அலற நம்பியப்பனும் அந்த நபரும் திடுக்கிடலுடன் அவரைப் பார்த்தனர்.

''உங்களை கோவில்ல உக்காந்திருங்கன்னு சொன் னேன்ல?'' நம்பியப்பன் கத்தவும் நாராயணமூர்த்திக்கு சிவுசிவு என்று கோபம் வந்தது.

''நம்பி.. என்னய்யா இது? இப்பதான் குருநாதர் குரல் காதுல விழுந்தது. பதறிப் போய் எழுந்து வந்தேன். இப்ப இங்க நீங்க பேசறதை கேட்டதும் எல்லாம் விளங்கிடிச்சு. இப்படிகூட நடக்க முடியுமா?''

நாராயணமூர்த்தி பதிலுக்கு ஆவேசத்துடன் கேட்ட விதத்தில் கணிசமான கோபம்.

''அது.. அது..''

''என்ன நம்பி இது... குருவுக்கே துரோகமா?''

''இல்ல.. கூடுவிட்டு கூடு பாயற வித்தையை இந்த வேதமணி நம்ம குருநாதர்கிட்ட கத்துகிட்டான். அதை அவர் உடம்புலையே பிரயோகம் பண்ணுவான்னு நானே எதிர் பார்க்கல..''

''அப்ப இது குருநாதர் திருமேனிதானா?''

''ஆமாம்...'' நம்பி ஆமோதித்த மறுநொடி பொதேல் என்று வேதமணி காலில் அப்படியே சாஷ்டாங்கமாக விழத் தொடங்கினார் நாராயணமூர்த்தி!

# 5

*பிராகாமியத்தில் புத்த பிட்சுக்கள் அதி தேர்ந்தவர்களாக இருந்திருக்கின்றனர். 'விநய பிடகம்' என்னும் பிட்சுக் களைப் பற்றிய நூலில் இது பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன.*

*பிட்சுக்கள் மிகப்பெரிய பாரமாக கருதுவது இந்த உடலைத்தான். பிரம்மச்சரியம் மூலம் விந்துவைக் கட்டி குண்டலினியில் தேறிவிடும் இவர்கள் 'கம்பகம்; பூரிகம்' என்று சுவாசப் பயிற்சிகளை எல்லாம் அநாயசமாக கடந்தவர்கள்.*

*பெரும்பாலான பிட்சுக்கள் நீரில் நடப்பது, காற்றில் மிதப்பது போன்றவற்றிலும் தேர்ந்தவர்கள். கூடுமாறுதல் அதில் உச்சம்.*

*பலத்த உபவாசத்தில் சில பிட்சுக்கள் மெல்ல உயிரை உடம்பிலிருந்து பிரிப்பார்கள். அப்பொழுது ஒருவர் மற்றொருவர் உடலில் புகுந்து எழுவார்கள் என்கிறது 'பௌத்த காருண்யம்'*

*விஞ்ஞானம் அசாத்யம் என்று கருதும் இந்த கூடுமாறல் மெய் ஞானிகளுக்கு மட்டும் எப்படி சாத்யமாயிற்று?*

*குண்டலினியோகம், அணிமா, மகிமா என்று ஒருவன் தனக்குள் சில சாதகங்களை செய்து கொள்வது என்பது நம்பக்கூடிய ஒன்றாக உள்ளது. ஒரு மனிதன் யோகப் பயிற்சி மேற் கொண்டால் இவை எவருக்கும் சாத்யம் என்பதே உண்மை. ஆனால், உடம்பில் உயிர் என்கிற ஒன்றைப் பிரித்து அதை சிந்தாமல் சிதறாமல் இன்னொரு உடம்புக்குள் புகுத்தி, அங்கே அதை இயக்கவைப்பது என்பது சுகமான கற்பனையாக தெரிகிறதேயன்றி, அறிவால் ஒரு இம்மியளவும் நம்ப முடியாததாகவே உள்ளது.*

*ஆனாலும் கருடபுராணம் போன்ற உயிர் வாழ்க்கை பற்றிய நமது புராண நூல்கள் சில புதிய கருத்துக்களை கூறுகின்றன.*

*அதன்படி கண்ணுக்கு தெரியும் நமது உடல் மேல் அடுக்கடுக்காய் பல சூட்சும தேகங்கள் இருக்கின்றன என்கிறது அது. இவைகளை விடுவிக்கவே இறந்த ஒருவருக்கு பத்து நாள் காரியங்கள் செய்து உலகப் பற்றால் ஈர்க்கப்பட்ட அதனை ஒரு நாளைக்கு ஒரு முழம் என்கிற அளவில் ஆகாயத்தில் உயர்த்தி பத்தாம் நாள் வழியனுப்பி வைக்கிறோம் என்கிறது கருடபுராணம்.*

*ஞானிகள் யோகிகள் தங்கள் யோக சக்தியால் இந்த சூட்சும தேகங்களை முதலில் பார்க்கின்றனர். பிறகு அந்த தேகங்கள் மூலம் ஒருவர் உடலுக்குள் புகலாம் என்கின்றனர்.*

*புகுந்த வாக்கில் உயிர் ஆதாரமான இதயத்தை துடிக்கவைத்து, ரத்தத்தை ஓட வைத்து, மூளையை விழிப்படையச் செய்து, அதை ஒரு ரேடியோ போல பயன்படுத்தி தன் உடலோடு ஒரு அலை வரிசைத் தொடர்பையும் கொண்டு விடுகின்றனர் என்பதாக சொல்கிறது*

***அது.***

***கேட்க ரசமாக உள்ள இதனை புரிந்துகொள்ள உடம்பு பற்றிய பட்டறிவு மிக மிக முக்கியம். மெல்ல காலத்தால் கைவரப் பெறவேண்டிய இந்த வித்தையை சில குருமார்கள் நினைத்தால் க்ஷணத்தில் கத்துக் கொடுத்து விடுவார்கள் என்றும் சிலர் கூறும்போது வியப்பாக உள்ளது.***

***அது எப்படி சாத்யம் என்று கேட்டால் அவர்களே உள்ளே புகுந்து நேத்ர தீட்சை மூலம் மளமளவென்று புரிய வைத்து விடுவார்கள் என்கின்றனர். இருப்பினும் கூடுவிட்டு கூடு பாயும் வித்தை பற்றிய ஒருவருக்கு ஜாத கமும் துணை செய்ய வேண்டும். இந்தப் பயிற்சி பெறும் நபர் முதலில் தான் உடலில் உள்ள நவக்கிரகங்களுக்கான பகுதிகளை அறிந்து அது செயல்படும் விதத்தை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.***

***ப***ட்டுப் பாவாடையும், தலை நிறைய பூவுமாக இருந்தாள் உமா. சகுந்தலா அவளை அந்த அளவுக்கு அலங்கரித்து சற்று தூர நிறுத்தி கண்களில் ஈரத்துடன் பார்த்துப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள். ஆனால் ராமசாமியால் அப்படி எல்லாம் ரசிக்க முடியவில்லை. மோட்டு வளையைப் பார்த்தபடி ஈஸிசேரில் அமர்ந்து விட்டார்.

ஆபீசுக்கும் மூன்று மாதத்துக்கு ஸ்பெஷல் லீவு போட்டு விட்டார். ஆபீசில் ஆரம்பத்தில் லீவு தர சுணங்கினார்கள். உமாவின் உடல் நிலையைப் பற்றி சொல்லி சாகும்வரை உடன் இருக்க விரும்புவதாக கூறவும் மறு பேச்சின்றி ஓ.கே

செய்து விட்டார்கள். சாதாரணமாக ஒரு நாள் லீவு வாங்குவது என்பதே குதிரைக் கொம்பான ஒரு விஷயம். அப்படியே வாங்கி விட்டாலும் அதை ஆனந்தமாக அனுப விப்பவர்தான் ராமசாமி. இப்பொழுதோ மூன்று மாத லீவு. ஆனாலும்.. அதில் துளிகூட சுரத்தில்லை.

''அப்பா..'' உமா அழைப்போடு அவர் அருகில் வந்து நின்றாள்.

''என்னடா கண்ணு...''

''என்னை கொஞ்சம் வெளிய கூட்டிகிட்டு போப்பா..?''

''எங்கம்மா போக..?''

''மீனாட்சியம்மன் கோவிலுக்கு போகலாமா?''

உமா கோவிலுக்கு கூப்பிட்டதில் அவரிடம் அதிர்ச்சி.

''வேண்டாம்மா.. ஒரே கூட்டமா இருக்கும். அப்புறம் அந்த சாமிக்கெல்லாம் சக்தி கிடையாது. ஆகையால் அதை விட்டுடு..'' விரக்தியோடு சொன்னார்.

''இல்ல... அப்படி சொல்லாதீங்க... நேத்து ராத்திரி என் கனவுல சாமி வந்துச்சே..''

''அப்படியா? வந்த..''

''எனக்கு உடம்பு நல்லாயிடும்னு சொன்னிச்சு..''

''அப்படியா?''

''சத்யமாப்பா..'' உமா அடித்துச் சொன்னது சகுந்தலாவைக் கூட திருப்பியது.

''என்னங்க.. அவ பேசறதப் பார்த்தா எனக்கே ரொம்ப நம்பிக்கையா தெரியுது. பேசாம ஒரு தடவை கோவிலுக்கு கூட்டிகிட்டுதான் போய்ட்டு வந்துடுங்களேன்..''

''என்ன சகுந்தலா நீ... நான் கோவிலுக்கு போனா அழுதுடுவேன்.''

''அட நீங்க ஒண்ணு. நாம இப்ப என்ன சிரிச்சுட்டா இருக்கோம். உமா மனசு கோணக்கூடாதுங்க. தயவு செய்து கேளுங்க..''

''சரி..'' அரை மனதாக ராமசாமி சம்மதிக்க சகுந்தலாவும் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

**மீ**னாட்சியம்மன் கோவில் தெற்கு கோபுர வாசலை ஒட்டி கார் பார்க்கிங் செய்தபடி இருந்தான் அந்த டிரைவர். காருக் குள் தாஜ் ஹோட்டலில் தங்கியிருந்த அந்த யோகி அமர்ந் திருந்தார். கதவைத் திறக்கவும் பதவிசாக இறங்கினார்.

''கூடவரணுங்களா?'' டிரைவர் கேட்டான்.

''ஆமாம்.. வந்தா நல்லா இருக்கும்..''

''அப்ப இருங்க வந்துடறேன்.''

கார் கதவை மூடி கண்ணாடியை ஏற்றி விட்டு உட்புறமாக லாக் செய்தான். பிறகு அவரை அழைத்துக் கொண்டு நடந் தான். உள்ளே ஜே.. ஜே.. என்று கூட்டம். அந்த யோகியும் தெற்கு கோபுர வாயில் வழியாக கல் தொட்டிக்குள் அமர்ந்தி ருந்த பிள்ளையாரின் உடம்பெல்லாம் பக்தர்கள் வாங்கி வந்து

கொட்டிய விபூதி கிடந்தது. பக்தர்கள் அந்த விபூதியை அள்ளி பிள்ளையார்மேல் தூவி விட்டு, நெற்றியிலும் இட்டுக் கொண்டு பிரதட்சணமாக மீனாட்சி அம்மன் சன்னதி நோக்கி நடந்தனர். வலப்பக்கத்தில் பார்க்கும் படியாக பொற்றாமரைக் குளம். ஆனால் பொன் தாமரை மட்டுமல்ல. தண்ணீரும் துளிகூட இல்லை. அந்த யோகி நின்று தீர்க்கமாக குளத்தை ஒரு பார்வை பார்த்தார்.

''பொற்றாமரைக்குளம் சாமி..''

''தெரியும்.. உம் பேர் என்ன சொன்னே?''

''வேலாயுதங்க..''

''டிரைவர் மாணிக்கம் உன் நண்பனா?''

''ஆமாங்க.. நெருங்கிய நண்பன். போகட்டும், இதுக்கு முந்தி இந்த கோவிலுக்கு வந்துருக்கீங்களா?''

''நிறைய தடவை.. இது சக்தியும், சிவமும் சம பலத்துல உள்ள ஒரு ஆலயம். கடவுள் மனித உருவுல வந்து வாழ்ந்து ஆட்சி செஞ்ச பூமி... இந்த பொற்றாமரைக் குளத்தோட வயசென்ன தெரியுமா?''

''யாருக்கு சாமி அதெல்லாம் தெரியும்?''

''தெரிஞ்சுக்கோ.. பல ஆயிரம் வருஷங்கள். இதோட கரைல, அதாவது படித்துறைல கால் வைக்காத சக்கரவர்த்திகளோ, ராஜாக்களோ இந்த உலகத்துல இருந்தது கிடையாது. இந்த குளத்துக்கு ஒரு பெரிய சிறப்பு உண்டு.''

அவர் இடைவெளி விட்டு, வேலாயுதம் ஆர்வமாக கேட்கி

றானா என்று பார்த்தார்.

''என்ன சாமி?'' என்று அவனும் படு ஆர்வமாக கேட்டான்.

''தாயைப் புணர்ந்த தடுக்கனுக்கும், தூய மோட்சம் தரும் குளம் இது...''

''அப்படிங்களா?''

''அம்மாவையே ஒருத்தன் காம இச்சையோட கெடுத்துட் டாலும் அவனை, அதாவது அவன் பாவம்கூட இந்த குளத்துல குளிச்சா நீங்கிடும். அவ்வளவு சிறப்பு இதுக்கு இருக்கு..''

வேலாயுதம் அதைக் கேட்டு சிரித்தான்.

''எதுக்கு சிரிக்கறே?''

''குளிச்சா அழுக்கு போவும்.. பாவம் எப்படி சாமி போகும் சாமி? எனக்கு புரியல.. ராமேஸ்வரம் கடல்ல குளி, அங்க இருக்கற கிணறுங்கள்ல குளி, கங்கைல குளி, காவேரில குளின்னு நம்ம ஆளுங்க குளிக்கச் சொல்றாங்க. நீங்க சொன்ன மாதிரியே பாவம்லாம் போயிடும்கறாங்க.. அது எப்படி சாமி பாவம்கறது அழுக்கா, குளிச்சா போக..''

வேலாயுதம் கேட்டது அசாதாரண கேள்வி. அந்த யோகி அதற்காக மகிழ்ந்தது போல சிரித்தார். பின் மெல்ல ''பாவமும் ஒரு அழுக்குதான்'' என்று சொல்ல தொடங்கி னார். அவன் கூர்ந்து கவனித்தான். ''பஞ்ச பூதங்கள்ல தண்ணீர் ரொம்ப விசித்ரமான ஒரு பூதம்.. அதே சமயம்

தண்ணில ஐந்து பூதங்களும் அடக்கம். தண்ணில காத்து இருக்கு.. சூடாக்கினா உஷ்ணமும் சேர்ந்துடும். அது ஆகாயத்துல இருந்துதான் பூமிக்கு வருது... ஆக பாக்க முடிஞ்ச ஒரே பஞ்சபூதம் தண்ணிதான்.''

அவர் ஒரு அசாதாரண விஷயத்தை சாதாரணமாக சொன்னார்.

''நம்ம உடம்பும் பஞ்ச பூதங்களால ஆன ஒண்ணுதான். இந்த பஞ்ச பூதத்தோட உச்சி நாடி தலைக்கு மேல இருக்கு. அதுக்குமேல சூட்சும உடம்பு இருக்கு. நம்முடைய பாவ வினைக்கு தகுந்த மாதிரி அந்த உடம்பு காத்திருக்கும். உச்சி நாடி எப்பவும் ரேடியோ ஆண்டனா மாதிரி ஒன்பது கிரகங்களோட கதிர்களை வாங்கி, அதுக்கேற்ப இயங்கிட் டிருக்கும். தண்ணீரில் மூழ்கும் போது இந்த தொடர்பு அறுந்து, அந்த தண்ணியின் இடத்து சக்தி, உச்சி நாடி வழியா நம் உடம்புல நுழையும். அந்த நொடிகள்ல, மனசுல பதிவாகியிருக்கிற நம்முடைய பாவ வினைகளையும் அது அழிக்கும். இதனாலதான் தலை முழுக்கு நம் மதத்துல விசேஷமா பார்க்கப்படுது. தீட்டுகளுக்கு குளிக்கச் சொல்றதும் இதனாலதான். சுருக்கமா இதுக்கு பேர் மங்கள ஸ்னானம்னு பேர்.''

அவர் சொன்னது அவனுக்கு கொஞ்சம்தான் புரிந்தது. இருந்தும் முழுவதும் புரிந்தது போல காட்டிக் கொண்டான்.

அப்பொழுது ராமசாமியும், சகுந்தலாவும் மகள் உமாவுடன் வந்து கொண்டிருந்தனர். உமா அந்த யோகியை பார்த்தாள்.

உற்றுப் பார்த்தாள்.

''என்னம்மா... எதுக்கு அவரை அப்படி பாக்கறே?''

''நேத்து கனவுல இவரும் வந்தாருப்பா..''

உமா மீண்டும் அதிர்ச்சியளித்தாள். அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்த யோகியும் உமாவைப் பார்த் தார். எங்கையோ இதற்கு முன் பார்த்தது போல முகத்தில் சிந்தனை. ராமசாமி சற்று தேங்கி நிற்க, உமா.. அவரிட மிருந்து விலகி யோகியை நோக்கி சென்றாள். அருகே சென்றதும் இணக்கமாக சிரித்தாள். அப்படியே ''சாமி.. நீங்க நேத்து ராத்திரி என் கனவுல வந்தீங்க..'' என்றாள்.

''அப்படியா?'' கேள்வியோடு அவர்முகம் ஜோதிப் புனலாக மாறியது. அப்படியே கண்களை மூடி ''குருவே.. உங்க கருணையே கருணை..'' என்று முணுமுணுத்தார்.

டிரைவர் வேலாயுதம் பேந்தப் பேந்த விழிக்க, ராமசாமியும் வந்து சேர்ந்து கொண்டார். கூடவே சகுந்தலா...

''உன் பேர் என்ன பாப்பா..?''

''உமா..''

''என்ன படிக்கறே?''

''அஞ்சாம் வகுப்பு.. ஆனா, இப்ப அப்பா ஸ்கூலுக்கு அனுப்பறதில்லை.''

''ஏன்?''

''நான் சொல்றேன் சாமி.. இது என் மகள். ஒரே மகள்.

ஆனா..." அவரால் சொல்ல முடியவில்லை. தொண்டை கமறியது.

"என்ன.. ஏதாவது உடல் நலக் கோளாறா?"

"ஆமாங்க.." என்றவர் அவர் காதோரமாக சென்று, "புத்து நோயுங்க.. இன்னும் ஒரு மாசம் இருந்தா அதிகம் னுட்டாங்க டாக்கடருங்க.." என்றார். அவரோ சிரித்தார்.

"உங்களுக்கென்ன பிள்ளையா குட்டியா.. சிரிக்கத்தான செய்வீங்க.."

"அப்படி இல்லை.. யார் எவ்வளவு நாள் இருப்பாங்கறது தேவ ரகசியம். ஆனா டாக்டர்கள் சொன்னது சிரிப்பு வந்தது."

"புத்து விஷயத்துல அவங்க சொல்றதுதானே?"

"கவலைப்பட வேண்டாம்.. நான் எதுக்காக கோவிலுக்கு வந்தேனோ அது ஈடேறிடிச்சு.. அம்மா மீனாட்சி இங்க குழந்தை வடிவத்துல தான் இருக்கா.. அதோ இந்த உமா ரூபத்துல.."

அவர் ஏதோ சொல்ல வந்து, திசை மாறுகிற மாதிரி தோன்றியது.

"இவ மீனாட்சியா இருந்தா எங்களை கைல பிடிக்க முடியுமா சாமி.. ஆனா.. அவளுக்கும் கருணை இல்லை. நான் மனசார நம்புன என் குருநாதருக்கும் கருணை இல்ல.."

"யார் அவர்?"

''காரையார் சம்பங்கிநாதர்னு பேர்.''

பேரைக் கேட்டவுடன் சிலிர்த்து போனது யோகியின் உடம்பு. அப்படியே அவர்களிடம் சொல்ல வேண்டியதை சொல்லிவிடு என்று ஒரு குரல் உள்ளே ஒலித்தது.

ஆனால், சொன்னால் அவர்கள் தாங்குவார்களா என்றும் தோன்றியது.

''என்ன சாமி.. என்ன யோசனை?''

''ஒண்ணுமில்ல.. உங்க குழந்தை பத்ரம்..'' இரு பொருள் பட சொல்லிவிட்டு, மீனாட்சி சன்னதி நோக்கி நடந்தார். நல்ல கூட்டம். ராமசாமிக்கு அவர் சாதாரணமாக சொன்ன தாகத்தான் நினைத்தார். கூட்டமோ கூடிக் கொண்டே போனது. விட்டால் மீனாட்சியை பீடத்தோடு பிடுங்கி இடுப்பில் வைத்துக் கொண்டு போய்விடுவார்கள் போல் தோன்றியது. அந்த களேபரத்தில் மீனாட்சியை எப்படியோ முட்டி மோதி கும்பிட்டு விட்டு திரும்பிய ராமசாமிக்கு பகீர் என்றது. உமாவைக் காணவில்லை. சகுந்தலாவும் பதைத்துப் போய் சுற்றிச்சுற்றி பார்த்தாள். எங்கும் உமா கண்ணில் படவில்லை.

''ஐய்யோ என்னங்க இது.. இங்கதானேங்க இருந்தா...''

''அதானே.. இப்படி காணாம போவான்னு முன்னாடியே தெரிஞ்சுதான் குழந்தை பத்ரம்னு அந்த சாமியார் சொன்னாரோ?''

இருவரும் சுற்றிச் சுற்றி பார்த்தபடி அங்கிருந்து

ஆளுக்கொரு பக்கம் ஓடினர்... தேடினர்...

***சு***டுகாடு...!

அளவில் பெரிய சுடுகாடுதான். ஒன்றுக்கு நான்கு பிண மேடைகள். நான்கில் இரண்டில் பிணங்கள் வெந்து கொண்டிருந்தன. காலியாக உள்ள இரண்டில் மேற்கூரையில் தூளிட்டி, அதில் ஒரு கைக்குழந்தையை போட்டு ஆட்டிக் கொண்டிருந்தாள் வெட்டியான் மனைவி. சற்று தள்ளி சுடு காட்டு மரத்தடியிலேயே சமையலும் நடந்து கொண்டிருந்தது.

நிறைய பேர் தெரிந்தார்கள். அவர்களில் சிலர் முகங்களில் மட்டும் துக்கம். சுடுகாட்டு வாசலில் தேங்கிய காரில் இருந்து இறங்கிய பிருத்வி, கண்ணன், ரகுவீர், ஜெகதீஷ் ஆகிய நால்வரும் கையில் கேமரா, கழுத்தில் கேமரா என்று அப் படியே பார்வையை சுழலவிட்டுக் கொண்டே வந்தனர்.

கூடவே டிரைவர் மாணிக்கம்.

''சார்... சுடுகாட்ல வெட்டியான்கிட்ட சொல்லிட்டேன். நீங்க எங்க வேணா போய் நின்னு எப்படி வேணா படம் எடுக்கலாம். அவங்க ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. ஆனா பொணத்துக்கு சொந்தக்காரங்க ஏதாவது சொன்னா தெரியாதுன்னு சொல்லிட்டான் சார்... நீங்க போங்க.. நான் வெளில கார்ல உக்காந்துருக்கேன்.'' என்றவாரே அவர்கள் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் திரும்பத் தொடங்கினான் மாணிக்கம். அவர்களும் 'ஒழிந்து போ' என்கிற மாதிரி

அவனைப் போக விட்டுவிட்டு, அந்த சுடுகாட்டுக்குள் மெல்ல நடக்க ஆரம்பித்தனர். அங்கங்கே சமாதிகளும் இருந்தன. இடையில் ஒரு இடத்தில் மேம்போக்காக ஒருவன் குழி வெட்டிக் கொண்டிருக்க, அருகில் சைக்கிளின் பின் கேரியரில் ஓலைப்பாயில் சுருட்டி கட்டப்பட்ட நிலையில் ஒரு அனாதைப் பிணம். சற்று தள்ளி மூக்கை பிடித்துக் கொண்டு ஒரு கான்ஸ்டபிள் அவர் குழி தோண்டுவதை துரிதப்படுத்திக் கொண்டிருந்தார்.

''சீக்கிரமாய்யா.. நாத்தம் தாங்க முடியல..'' என்று சொல்லிக் கொண்டே மூக்குப் பொடியில் ஒரு சிட்டிகையை உள்ளேற்றிக் கொண்டார்.

அதையெல்லாம் பார்த்துக் கொண்டுதான் அந்த நான்கு பேரும் நடந்தனர். கான்ஸ்டபிள் அவர்களை ஒரு தினுசாகப் பார்த்தார். அவர்களும் ஓலைப்பாய் பிணத்தைப் பார்த்தனர். கான்ஸ்டபிளுக்கு ரகுவீரின் கையிலும் தோளிலுமாய் இருந்த ஸ்டெடிகேம் கேமரா ஆச்சரியம் தந்தது.

''என்ன தம்பி.. எதுனா டி.வி.படப்பிடிப்பா?''

''இது டி.வி. கேமராங்களா?'' ரகுவீர் ஏதோ, தான் தாழ்த்தப்பட்டது போல உணர்ந்து கேட்டான்.

''அப்ப..?''

''இது மூவி கேமராங்க..''

''சினிமா கேமராவா?''

''ஆமாம்..'' பதிலோடு வியூஃபைண்டர் வழியாக குழியை,

அவரை, ஓலைப்பாய் பிணத்தைப் பார்த்தான்.

''ஐய்யோ... இருங்க.. நீங்கவாட்டும் எதையாச்சும் எடுத்து வெக்கப்போறீங்க..''

''எடுக்கலை... ஜஸ்ட் லுக்கிங்.''

''அப்படின்னா..?''

''சும்மா பாத்தேன்னு சொன்னேன்.'' ரகுவீர் கொஞ்சம் தினவோடு கத்தவே செய்தான். கண்ணனோ சூழ்நிலையை அளப்பதில் மும்முரமாய் இருந்தான். ஜெகதீஷிற்கு பிணம் எரிவது சுவையான ஒரு காட்சியாக இருந்தது. பிருத்வி அந்த சுடுகாட்டிலும் தூளிகட்டி, அடுப்பு மூட்டும் வெட்டி யான் குடும்பத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந் தான்.

கான்ஸ்டபிள் அவர்களை மதிப்பாக உணரத் தொடங்கி யிருந்தார். ரகுவீரிடமே கட்டையைப் போட்டார்.

''சுடுகாட்டுல வந்து படமெடுக்க இங்க என்னங்க இருக்குது?''

''சுடுகாடு இருக்குதுல்ல..''

''எதாச்சும் பேய்க்கதையை படமா எடுக்கறீங்களா?''

''பேயுமில்ல, பிசாசுமில்லன்னு சொல்றதுக்காகத்தான் படமெடுக்கறோம்.''

கான்ஸ்டபிள் முகத்தில் ப்ரூச் என்று அவன் துப்பியது போல உணர்ந்தார். அவர் முற்றிலும் எதிர்பார்க்காத பதில்.

''என்னாங்க தம்பி.. உங்க பதிலை என்னால ஜீரணிக்கவே முடியல... பேய், பிசாசு இல்லேங்கறதுக்காக ஒரு படமா?''

''ஆமா... இங்க எங்க இருக்கு பேய்?''

வியூஃபைண்டரில் பார்த்துக் கொண்டேதான் கேட்டான் ரகுவீர்.

''இங்க எங்க இருக்குன்னா.. அது வெளிய வரவும் நேரம் காலம் இருக்குல்ல...''

''அது என்ன நேரம் காலம்?''

''நான் ராத்திரியை சொல்றேன்''

''ஏன் இப்ப வந்தா போலீஸ்காரர், நீங்க அதை பிடிச்சு கிட்டு போயிடுவீங்களா?''

''என்ன தம்பி இப்படி எகணைக்கு மொகணை பேசறீங்க?''

''என் கேள்விக்கு நீங்க பதில் சொல்லுங்க.''

''பகல்ல அது வராது?''

''அதான ஏன்னு கேக்கறேன்.''

''எனக்கு என்ன தெரியும்? பெரியவங்களத்தான் கேக்கணும்.''

''அப்ப நீங்க யார்.. பெரியவர் இல்லையா?''

''நான் பெரியவங்கன்னு சொன்னது என் அப்பன், பாட்டன் வயசுல உள்ளவங்களை..''

''அப்ப அவங்களுக்கு தெரியும்னு சொல்லுங்க..''

ரகுவீர் குதர்க்கமாகவே கேட்டான்.

இடையில் குழிவெட்டி கத்தரித்தான்.

''ஐயா.. ஆழம் போதுமா பாருங்க.''

கான்ஸ்டபிளும் எட்டிப் பார்த்துவிட்டு, ''போதும்பா இழுத்துப் போடு..'' என்றபடி சற்று ஒதுங்கி நின்றார். அவனும் குழியைவிட்டு மேல் ஏறினான். ஓலைப்பாய் பிணத்திடம் வந்தான்.

''தம்பி... ஒதுங்கிக்குங்க. மூணு நாளைக்கு முந்தி செத்த பொணம். புழு வெச்சுடுச்சு, பக்கமா நின்னா நாத்தம் மட்டுமல்ல.. கிருமிங்க தொத்திகிடப் போகுது..'' என்று கரிசனமாக ரகுவீரைப் பார்த்து சொன்னான். மற்ற மூவரும்கூட வந்து சேர்ந்தனர்.

''ரகு.. என்னடா எதாவது ஆக்சிடெண்ட் கேஸா?''

''ஆமா தம்பி, ரயில்ல அடிபட்டு செத்துட்டான். இரண்டு நாள் ரயில்வே லைன் ஓரமாவே புதர்லையே இருந்து நாறுனதுக்கு பிறகுதான் தெரிய வந்துச்சு. ஆள் யாருன்னே தெரியாதபடி முகமெல்லாம் சிதைஞ்சு போய்..''

அவர் சொல்லும்போதே ஓலைப்பாயில் இருந்து அந்த சடலம் பிரித்தெடுக்கப்பட, அதைப் பார்த்த ரகுவீருக்கு உடம்பில் எறும்புகள் ஊர்ந்தது போல் இருந்தது. முகம் சுணங்கியது. மற்ற மூவரும்கூட முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டனர்.

துல்லியமாக அந்த நொடியில் யாரோ ஒருவன் லுங்கியை

ஏத்திக் கட்டிக்கொண்டு, தம் அடித்தபடி அந்தப் பக்கமாக வரவும், அவனைப் பார்த்த கான்ஸ்டபிள் முகத்தில் ஏகத்துக்கும் பரபரப்பு...

''ஏய் நீ அபின் ரத்னமுல்ல?'' என்ற கேள்வியுடன் அவனைத் துரத்த அவனும் கான்ஸ்டபிளை பார்த்த அதிர்ச்சியில் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓடினான்.

வெட்டியான் பார்த்துவிட்டு சிரித்தான்.

அந்த குழிவெட்டியோ வெறுத்துப் போய் ஒரு ஓரமாய் இருந்த மரத்தடியில் வியர்வையோடு அமர்ந்து விட்டான்.

நால்வரும் இப்பொழுது எரியும் பிணத்தை சமீபித்திருந் தனர். வெட்டியான் வாயில் பீடியோடு பார்த்து சிரித்தான். ரகுவீர் அவனோடு சேர்ந்து படமெடுக்கத் தொடங்கினான். ஏற்கனவே போட்ட திட்டப்படி கண்ணன் கேள்வி கேட்க தொடங்கினான்?

''உங்க பேர்?''

''மாரிங்க.. எதுக்கு கேக்கறீங்க?''

''சும்மா, பொணம் எரிக்கறதுதான் உங்க தொழிலா?''

''ஆமாமுங்க... பாழாப் போன தொழில் இது. வேற எந்த வேலைக்கும் போகவும் முடியாது. செய்யவும் விடமாட் டாங்க.''

''அதுசரி... இருப்பத்தி நாலு மணி நேரமும் இங்கதான்

இருப்பீங்களா?''

''அது பொணம் வர்றதைப் பொறுத்தது.''

''வந்தா அப்ப இருப்பீங்களா?''

''இருந்து எரிக்கறதுதானே சோலி...''

''சுடுகாடுன்னாலே ஒரு பயமும் பீதியும் இருக்கே, உங்களுக்கு கிடையாதா?''

''பயந்தா தொழில் பண்ண முடியுமா?''

''அப்ப பயப்பட ஒண்ணுமில்லேன்னு சொல்லுங்க..''

''அது எப்படி சொல்ல முடியும். சில நாள்ல சில கொரளிப் பேயிங்க வந்து மேல குதிச்சு விளையாடும். பீடி குடிக்க விடாது. பிடுங்கிப் பிடுங்கிப் போடும்.''

''அப்ப பிசாசு உண்மையா?''

''இல்லையா பின்னே.. இந்த பீடி சாம்பலாகற மாதிரி செத்துப் போன மனுஷன் பேயா மாறித்தானே தீரணும்?''

அவன் ஒரு உதாரணத்தோடு சொன்னது ரகுவீர், நண்பர்கள் முகத்தைப் பார்க்க வைத்தது. அவர்கள் முகத்தில் நக்கல் புன்னகை.

''ஆமா.. நீங்க இங்க எதுக்கு வந்துருக்கீங்க? படம் புடிக்கவா?'' அவன் திருப்பிக் கேட்டான்.

''ஆமாம்... பேய் இருந்தா அதையும் புடிச்சுகிட்டு போகலாம்னு..''

''அதெல்லாம் எல்லார் கண்ணுக்கும் தெரியாதே..''

''அது ஏன்.?''

''யாருக்குத் தெரியும்... நான் பார்த்த சமயங்கள்ல என் பொண்டாட்டி பாக்க மாட்டா.. அவ பார்த்த சமயங்கள்ல நான் பாக்க மாட்டேன். காரணம் தெரியாது. அனுபவம் அப்படி..''

''இன்னிக்கு எங்களுக்கு தெரியுதான்னு பாப்போமா?''

''உங்களுக்கு என்ன தலையெழுத்து..?''

''உண்மைன்னா அது எதிர்ல வரட்டும்..''

''அப்ப பொய்யுன்னு சொல்றீங்களா?''

''ஆமாம்.. சுடுகாடும் ஒரு குப்பைத்தொட்டி, வீணா பயப் படக்கூடாது. அதை ஒத்துக்க கூடாதுங்கறேன்.''

''நீங்க சொல்றது நல்லாத்தான் இருக்கு. ஆனா ஊர்ல விழுவற குப்பைக்கு மனசு கிடையாது. ஆசாபாசம் கிடை யாது. பாவ புண்ணியம் கிடையாது. ஆகையால அதை எரிக்கற இடத்துல பாதகமும் கிடையாது. ஆனா.. இங்க சாம்பலாகற ஒவ்வொரு மனுஷனும் ஆசாபாசமுள்ள மனசோட வாழ்ந்தவங்க. அந்த குப்பையும், இந்த குப்பையும் எப்படி ஒண்ணாவும்?''

வெட்டியான் அவர்கள் நான்கு பேரும் யோசிக்கும் படியாகத்தான் கேட்டான். அவர்களும் அவன் பதிலால் கொஞ்சம் போல சிந்திக்கத்தான் செய்தனர். அதே சமயம்

அந்த ரயில்வே லைனில் அடிபட்ட பிணமோ பாயில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில், துர்நாற்றம் வீசக் கிடந்தது. குழி தோண்டிய ஸ்வீப்பர் வெறுத்துப் போய் அந்த பிணத்தை தர தரவென இழுத்து குழியில் போட்டு விட்டு முகம் மட்டும் வெளியில் தெரிய உடம்பை மண்ணால் மூடிவிட்டு கான்ஸ் டபிள் வந்து முகத்தைப் பார்த்து மூடிவிட்டு போகட்டும் என்பது போல அங்கிருந்து நழுவத் தொடங்கியிருந்தான்.

# 6

***உடம்பை விஞ்ஞானம் பார்க்கும் விதத்திற்கும், நமது ஞானியர்கள் பார்க்கும் விதத்திற்கும் நிறைய வேற்றுமைகள் உள்ளது. விஞ்ஞானம் எவ்வளவு தான் முயன்றாலும் அதை முயற்சிக்கும் மனிதன் தன் உடம்மைக் கொண்டுதான் முயற் சிக்கிறான். எனவே அவன் உடம்பின் புறம் மற்றும் அக வலிமைக்கு ஏற்பவே அவனால் உடம்பைப் பற்றி அறிய முடியும். ஆனால், யோகத்தில் ஈடுபாடுள்ள ஞானியரோ உடம்பின் புற மற்றும் அக ஆற்றல்களில் மிக மிக பலசாலி கள். அவர்கள் கண் பார்வை, உணரும் ஆற்றல் எல்லாமே மிக வலிமையானவை, அவைகளை கொண்டு அவர்கள் உடம்பைப் பற்றி சொல்வதில் தான் உயிர் மற்றும் உடல் பற்றிய ரகசியங்கள் நமக்கு நன்கு புரியவரும் என்பதே உண்மை.***

*யோகத்தில் வல்லவரான ஒரு ஞானியை விஞ்ஞான பூர்வ மாக பரிசோதித்திருக்கிறார்கள். அவர்களின் ரெஸிடென்சி பவர், ஒரு மனிதனால் இவ்வளவுதான் தாங்க முடியும் என்கிற அளவுகளைப் போல, பல மடங்கு அவர்கள் தாங்கியதை பார்த்து விஞ்ஞானமே வியந்திருக்கிறது.*

*இந்த மாதிரி கட்டங்களில் விஞ்ஞானிகள் இதெல்லாம் மிராக்கிள் என்று சொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்கின்றனர்.*

*அந்த மிராகிள் எல்லைக்குள் எவர் ஒருவரால் நுழைய முடிகிறதோ, அவர்களுக்கு உடம்பின் மற்ற பரிமாணங்களும் சுலபமாக புரியும். அப்படிப் புரியும் பட்சத்தில், ஒரு உயிர் உடம்புக்குள் காற்றோடு கூடி நுழைதல், பின் இதயத்தை இயக்கி ரத்த ஓட்டம் ஏற்படுத்துதல், மூளையை கைப்பற்றி இயங்குதல் எல்லாம் சர்வ சாதாரணமாகி விடும்.*

*எந்த வித்தையுமே கற்பதற்கு முன் வரைதான் ஆபூர்வமாக தெரியும். கற்றுக்கொண்ட பிறகு அது ஒரு சாதாரண விஷயமாகி விடும். சைக்கிள் ஓட்டுவதில் இருந்து விமானத்தை இயக்குவதுவரை இது பொருந்தும்.*

**கா**ரையார்!

யோகி சம்பங்கிநாதர் உடம்பினுள் நுழைந்து விட்டதாக கருதப்படும் வேதமணியும், நம்பியப்பனும் நாராயண மூர்த் தியை சற்றே நெருடலுடன் பார்த்தபடி நின்று கொண்டிருந்

தனர்.

நாராயணமூர்த்தி வேதமணியையே பார்த்துக் கொண்டிருந்தார். அவரால் வேதமணியாக உணர முடியவில்லை. தன் எதிரில் சம்பங்கிநாதரே அமர்ந்திருக்கிற மாதிரிதான் தோன்றியது.

''பிராண காலத்துல இருந்து நடக்கற ஒரு தப்புதான் இங்கையும் நடந்துருக்கு. இந்த மணி வித்தை கத்துக் கொடுத்த குருவோட உடம்பையே திருடிட்டான். இப்ப என்ன பண்றதுன்னு தெரியாம இந்த காட்டை சுத்திச் சுத்தி வர்றான்.'' என்று சப்பைக் கட்டு கட்டுவது போல பேசத் தொடங்கியிருந்தார் நம்பியப்பன்.

''இல்ல.. தெரியாமத்தான் கேக்கறேன். சமாதிக்குள்ள அடங்கின நம்ம குருநாதர் உடம்புல இவர் எப்படி?'' நாராயணமூர்த்தியிடம் சந்தேகம் தீரவில்லை.

''எனக்கே ஆச்சரியம்தான். நான் எப்பவும் போல சமாதிக்கு பூஜை செய்துட்டு திரும்பும்போது, சமாதியோட மேல் தளம் அசையற மாதிரி தெரிஞ்சது. என்னன்னு பார்த்தப்போ பகீர்னு ஆயிடிச்சி. மேல்தளத்து கடப்பைக் கல்லை தள்ளிகிட்டு சாமி உருவம் மேலே ஏறி வந்து நின்னுச்சி. நான் கூட சாமிதான் வந்துடிச்சாட்டும் இருக்குன்னு நினைச்சு வெலவெலத்துப் போயிட்டேன். பிறகுதான் தெரிஞ்சது... அப்படி நிக்கறது வேதமணின்னு..''

இது நம்பியப்பனின் வாக்குமூலம்.

''எப்படி... எப்படி இப்படி ஒருத்தர் உடம்புக்குள்ளே ஒருத்தர் புக முடியும்?''

''அதான் கூடுவிட்டு கூடு பாயறதுங்கறது.''

''எப்படி.. எப்படி இது சாத்யம்? சாமி எப்படி இதை இந்த வேதமணிக்கு சொல்லிக் கொடுத்தார்.. அதேசமயம் இவரோட பழைய உடம்பு என்ன ஆச்சு?''

இந்த கேள்விக்கு வேதமணியே பதில் கூறினான்.

''நான் ஒரு எம்.எஸ்.சி ஸ்டூடண்ட். ஒரு பிக்னிக்குக்காக இந்த காட்டுக்கு வந்தப்போ சாமியை சந்திச்சேன். பூர்வ ஜென்ம தொடர்புன்னுதான் சொல்லணும். அவர் என்னோட ரொம்ப நேரம் பேசிகிட்டு இருந்தார். நீ போன ஜென்மத்துல என் மகன். இந்த ஜென்மத்துல நீ விட்ற எள்ளும் தண்ணியும்கூட எனக்குதான் வருதுன்னு ஒரு புதுக்கணக்கு போட்டு சொன்னாரு. அதை நான் எப்படி நம்பறதுன்னு கேட்டேன். எந்த வித்தையும் உனக்கு சுலபமா வந்துடும்ன் னார். ரொம்ப பேருக்கு இந்த மாதிரி ஒரு திறமை இருக்கு. இதுல ஆச்சரியப்பட என்ன இருக்குன்னு திருப்பி கேட்டேன். நான் ஒரு மாதிரி நம்பாக அசட்டையா பேசறதா உணர்ந் தவர், ஒரு அபூர்வமான, யாராலையும் நெருங்கக்கூட முடியாத ஒரு வித்தையை உனக்கு நான் கத்துக் கொடுக்கறேன். அதிக பட்சம் ஒரு மண்டலம் போதும்னு சொல்லி என்கிட்ட பயிற்சியை ஆரம்பிச்சார்.

முதல்ல பிராணாயாமத்துலதான் தொடங்கினேன். அப்புறம் மூச்சுக்கட்டடல், அதன் பின் உடம்பின் சப்தநாடி, சர்வாங்க

நாடி, அவைகளோட துடிப்பு பற்றி புரியவைத்தார். இதயத் துடிப்பைக்கூட கூட்டிக் குறைத்து இயக்கற பயிற்சியும் நடந் தது. ரொம்ப முக்கியம் சப்த நாடிகளை ஒடுக்கறதுல, இயக்குறதுலதான் இருக்கு.

இந்த நாடிகளைப் பற்றி தெரியறதுலதான் உடம்பை விட்டு உயிரைப் பிரிக்கறது எப்படின்னு தெரிஞ்சுக்கறது இருக்கு.

நாடிகளோட ஜங்ஷன், பாய்ண்ட் ஒண்ணு இருக்கு. அது தொப்புள்கிட்ட இருக்கு. அங்க மனசை குவிச்சு மற்ற நாடிகளைப் பூட்டறதுங்கறது ஒரு வித்தை. அதாவது எல்லா நாடியையும் பூட்டி தொப்புள்கிட்ட வந்து அப்படியே ரத்த ஓட்டத்துல உயிர் வாயுவை இரைப்பைக்கு கொண்டு போய் அங்க இருந்து ஏப்பம் வாய்வழியா வெளிய போறமாதிரி உயிர்க்காற்றை உடம்பைவிட்டு வெளியேற்ற, கூடவே அந்த உடம்பின் மூளையோட ஒரு வித அலைத் தொடர்பை அறுத்துக்காம, அப்படியே பயணம் செய்து இன்னொரு உடம்பின் வாய்வழியா உள் நுழைந்து, அதே அண்ட மூலதாரணைங்கற நாடிகளோட ஜங்ஷனை அடைஞ்சு, அங்கிருந்து பயணம் செய்து சப்த நாடிகளை நெருங்கி, அவைகளை முதல்ல துடிக்கவைத்து, பிறகு மூளைக்குள் ரத்தத்தோட கலந்து நுழைந்து, அங்கு செயல்படாம உள்ள நியூரான்களை இயக்கி விட்டுட்டு அந்த உடம்போட மூளைத் தொடர்பை இங்க மாற்றிக்கிட்டு, மனதை இந்த மூளையை கொண்டு இயக்கறதுங்கற வரை இந்த விஷயம் போகுது.

நான் ரொம்ப வேகமாக சொல்லி விட்டேன். குட்டி குட்டி விஷயங்கள் நிறைய இருக்கு. மொத்தத்துல யோகம் தெரியாத யாருக்கும் இது புரியாது. அவங்களால இதை நம்ப முடியாது. இதுதான் உண்மை. யோகம் தெரிஞ்சவங் களுக்கோ இது ஒரு சாதாரண விஷயம். என் ஜென்மாந்தரத் தொடர்பு, குருநாதர் கருணை எல்லாம் எனக்கு இந்த வித்தையை ஒரு மண்டலத்துல கத்துக் கொடுத்தது. இருந்தாலும் இதை நான் ஒரு சராசரி மனிதப் பிணத்துகிட்ட பரிசோதிச்சு பார்க்கலை. மிருகத்துகிட்டையும் பரிசோதிக்க விரும்பலை. இந்த நிலைலதான் குருநாதர் மகா சமாதி அடைஞ்சார். குருநாதரோட உடம்பைவிட ஒரு புனிதமான உடம்பு கிடைக்க கொடுத்து வெச்சுருக்கணுமே.. அதான் ஆர்வத்துல, பக்கத்துல ஒரு மலைக்குகைல என் உடம்பை படுக்கப் போட்டுட்டு, இங்க சமாதிக்கு வந்து உள்ள நுழைஞ்சு குருநாதர் உடம்பை ஆக்ரமிச்சேன்.

அதேசமயம் குகைல விட்டுட்டு வந்த என் உடம்பை இந்த காட்டுல திரியற ஒரு புலி வந்து தன் பசிக்கு உணவா தின்னுட்டு போயிடிச்சு.

இப்ப இந்த உடம்பை விடவும் முடியாம, இன்னொரு உடம்பை பெறவும் முடியாம தவிக்கிறேன். குருநாதர் ஆத்மாவும் வருத்தப் படற ஒரு நிலை.."

வேதமணி ஒரு நீண்ட பிரசங்கம் செய்து முடித்தான்.

நாராணமூர்த்திக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. வெகுநேரம் பிரமை பிடித்ததுபோல நின்று விட்டார்.

''நாராயணமூர்த்தி உங்களுக்கு ஏதாவது வழி தெரிஞ்சா கூறுங்களேன்..''

''எனக்கு.. எனக்கு.. எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல..''

''ஒரு இறந்த உடம்பு இப்ப வேதமணிக்கு கிடைக்கணும். அவ்வளவுதான். அதேசமயம் இந்த உடம்பை இவன் சமாதியில விட்டுடணும். அப்பதான் சமாதியில திரும்ப இதை வெச்சு புதைக்க முடியும்.''

''அதுக்கு சுடுகாட்டுக்குதான் போகணும்.''

''இவரை ரகசியமா கூட்டிகிட்டு போறீங்களா?''

''போகலாம்.. அங்க உடம்பு கிடைக்கணுமே..''

''சுடுகாட்டுல கிடைக்காத உடம்பா.. எவ்வளவு உடம்பு புதைஞ்சிருக்கும். அதுல ஒண்ணை..''

''எனக்கு இந்த மாதிரி விஷயமே புதுசு. அது மட்டும் இல்ல. நான் இங்க வந்த விஷயமே வேற, ஒரு பொண்ணு உயிருக்கு போராடிகிட்டு இருக்கா.. அவளை காப்பாத்த சாமியாலதான் முடியும்னு நான் நினைச்சுதான் இங்க வந்தேன். ஆனா.. சாமி உடம்பை காப்பாத்தற ஒரு சூழ்நிலை வரும்னு எதிர்பார்க்கலை..''

நாராயணமூர்த்தி தன் பதிலைச் சொல்லும்போது அங்கே ஒரு அதிசயம் போல குழந்தை உமாவும், தாஜ் ஹோட்டலில் தங்கியிருந்த சிவானந்தம் என்கிற யோகியும் அந்த காட்டுப் பாதை வழியே வந்தபடி இருந்தனர். அவர்களைப் பார்க்கவும்

நாராயணமூர்த்திக்கு ஆச்சரியம் தாளவில்லை. புருவம் வளைந்தது. முகத்திலும் ஆச்சரிய அதிர்வு ரேகைகள் ஏகமாய் பெருக்கெடுத்து ஓடியது. உமாவைப் பார்க்கவே பாவமாக இருந்தது. பார்ப்பதற்கு சொல்ல முடியாத அளவு சோர்வோடு தெரிந்தாள். நாராயணமூர்த்தி அவளை நோக்கித்தான் ஓடினார்.

''அம்மாடி... கொழந்த.. நீ எப்படி இங்க வந்தே?''

''நான்தான் கூட்டிகிட்டு வந்தேன்..'' யோகி பதில் தந்தார்.

''இவளை எப்படி உங்களுக்குத் தெரியும்? நீங்க யார்னும் சொல்லலையே?''

''நான் சம்பங்கிநாதரோட சிஷ்யன். அவரோட கட்டளைப் படி இந்த குழந்தையை இப்ப மீனாட்சி அம்மன் கோவில்ல இருந்து இங்க கூட்டிகிட்டு வந்துருக்கேன்.''

''மீனாட்சி அம்மன் கோவிலா?''

''ஆமாம்.. இவளும், இவ அப்பாவும் கோவிலுக்கு வந்துருக்காங்க. சாமிதான் மீனாட்சி அம்மா உருவத்துல கனவுல போய் கோவிலுக்கு வரவெச்சது. என் கனவுலையும் வந்து, கோவிலுக்கு உமா அவங்க அப்பா, அம்மாவோட வருவா... அவளை எப்படியாவது பிரிச்சி அங்க இருந்து கூட்டிகிட்டு வந்தடுன்னார். போனேன்.. பார்த்தேன்.. கூட்டிகிட்டு வந்துட்டேன்.''

''எல்லாம் எனக்கு ஒரே நம்ப முடியாத விஷயமாவே இருக்கு. இங்க என்னடான்னா சாமி உடம்புக்குள்ள

ஒருத்தர். இங்க நீங்க..''

''பேச நேரமில்லை. சாமி கனவுல் வந்து சொன்னதை இப்ப சொல்லிடறேன். எனக்கு இங்க சாமியோட திருமேனிக்குள்ள இருக்கறது யார்னு தெரியும். வேத மணிங்கற அவர் சிஷ்யன்தான் இப்ப சாமியோட உடம்புக் குள்ள இருக்கறது. அவர் இப்ப சாமி உடம்பை விட்டுட்டு இந்த உமாவோட உடம்புல நுழையணும். அதன்பிறகு சாமி சொல்ற இடத்துக்கு போய் சிரஞ்சீவி மூலிகையை சாப்பிடனும். அப்படி சாப்டுட்டா இந்த உடம்பில ஜீவ சக்தியை அழிச்சுகிட்டுருக்கற புத்துநோய்க்கு ஒரு விமோசனம் பிறக்கும். அதன்பிறகு அப்படியே என்னோட அஷ்டமா சித்துல ஒண்ணான இலஹிமா மூலம் நான் உங்களை ஒரு சில நொடில மதுரைல பரபரப்பான ஒரு சுடுகாட்டுக்கு கூட்டிகிட்டு போவேன். அங்க ஒரு உடம்பை தேர்ந்தெடுத்து இந்த வேதமணி நுழைஞ்சிடணும். உமாவை விட்டுடணும். அந்த உடம்பு யார் உடம்புன்னே தெரியாத அளவு இருக்கறது ரொம்ப நல்லது. அப்பதான் வேதமணி சுதந்தரமா சமுதாயத்துல நடமாட முடியும். அந்த உடம்புல ஏதாவது ஊனங்கள் இருந்தாலும் மூலிகைகளால் அதை சரி செய்துக்க முடியும். இதுதான் திட்டம். தயாரா?''

யோகி சிவானந்தர் ஒரு கர்ம வீரரைப் போல பயங்கர செயல் வேகம்காட்ட வேதமணியும், ''இப்ப நான் உயிரோட இருக்கற இந்த பெண் உடம்புல எப்படி நுழையறது?'' என்று கேட்டான்.

''வழி காட்றேன்.. நேரா சாமி சமாதிக்கு போவோம்...'' என்றபடியே யோகி நடக்கத் தொடங்கினார். அவர்கள் வேறு வழி இல்லாதவர்களைப் போல, அதே சமயம் ஒருவித ஆர்வத்தொற்றுதலுடன் பின் தொடர்ந்தனர். சமாதிக் கோவிலையும் அடைந்தனர். யோகி சிவானந்தம் வேமணியை உற்றுப் பார்த்தவராக, ''ஸ்வாமி நீங்க இப்ப சமாதிக்குள்ற போய் உக்காந்து பிராணனை வாய்க்கு கொண்டு வந்து தயாரா இருங்க. இந்த உமாவுக்கு நான் இப்ப ஒரு பாஷாணம் தரப்போறேன். அது இவளோட சர்வ நாடிகளை அடக்கி, உயிர்ப் பிராணனையும் அடக்கி கண்ட மூலதாரணையில் இருந்து விடுபட்டு வெளியே செல்லும் போது ஒரு நொடி கால அவகாசக் குறைவும் இல்லாம நீங்க இவ உடம்பை ஆக்ரமிச்சிடுங்க. அப்படி செய்துட்டா, உமா உயிரும் உடம்பைவிட்டுப் பிரியாது. நீங்களும் இவ உடம்பை ஆக்ரமிக்க முடியும்..'' என்றார்.

வேதமணி உற்சாகமா தலையாட்டிவிட்டு சமாதிக்குள் இறங்கத் தயாரானான். எல்லோரும் அவனது குருநாதன் திரு உடலை ஒருமுறை காலைத் தொட்டு வணங்கி கண்ணில் ஒற்றிக் கொண்டனர்.

அதன்பின் சமாதியின் மேல்தளத்து கடப்பைக்கல்லை நம்பியப்பன் விலக்கிப் பிடிக்க மெல்ல உள்ளிறங்கத் தொடங்கினான். பிறகு உள்ளிறங்கிய நிலையில் அப்படியே பத்மாசனமிட்டு, யோகி சம்பங்கிநாதர், தான் முன்பு சமாதி நிலையாகும்போது எப்படி அமர்ந்தாரோ அப்படி அமர்ந்தான்... கைகளால் ருத்ராட்ச மாலையையும் உருட்ட

ஆரம்பித்தான். நாராயணமூர்த்தி வியப்பான வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார். ராமசாமி அருகில் இல்லையே இதை எல்லாம் பார்க்க என்றுகூட ஒரு வருத்தம் உள்ளோடியபடி இருந்தது.

யோகி சிவானந்தரோ உமாவை அருகில் அழைத்து, ''பயப்படாதே.. தைரியமா இரு.. நீ பூரண குணமாகி உன் அப்பா அம்மாவோட பலகாலம் வாழத்தான் இந்த ஏற்பாடு..'' என்று சொல்லிக்கொண்டே விபூதிபோல ஒரு பொடியை அவள் வாயைத் திறக்கச் சொல்லி போட, அவள் முகமும் கசந்து வழிந்தபடி அதை விழுங்கியது. சில நொடிகளிலேயே அவள் சுருண்டு விழத்தொடங்கி விட்டாள். வாயிலும் நுரை பூக்க ஆர்ம்பித்தது.

நாராயணமூர்த்திக்கு பதைத்தது.

அவள் கால்களோ வெட்டி வெட்டி இழுக்கு ஆரம்பித்தன. அப்படியே மெல்ல அது அடங்கவும் ஆரம்பித்தது. அதே சமயம் சமாதிக்குள் ருத்ராட்ச மாலையை, கண்ணி கண்ணியாக எண்ணிக் கொண்டிருந்த யோகியின் கை விரல்கள் அப்படியே நிற்க, அவர் உடலில் இருந்த வேதமணியின் உயிர் பிரிந்து வெளியில் வந்து நொடித் தாமதமும் இன்றி குழந்தை உமாவின் உடம்பில் புகுந்தது.

ஒரு நிமிட நேரம்தான்!

உமா ஏதோ தூங்கி எழுந்த மாதிரி எழுந்தாள். யோகி தமாதிக்காமல் ஒரு மரக்குப்பிச்சாறு ஒன்றை வாயில் போட்டார்.

''இது பாஷாண முறி மருந்து. அதுக்கு இன்னும் வீர்யம் இருக்கு.. பலமான வேதமணியோட பிராணன் ஆக்ரமிச்சதுல அந்த வீர்யம் கொஞ்சம் கட்டுப்பட்டிருக்கு. இப்ப இந்த முறி மருந்து பாஷாண வீர்யத்தை முழுவதுமா அழிச்சுடும்.'' என்று விளக்கம் தர குழந்தை உமா வேதமணியின் ஆண் குரலில் ''நன்றி யோகிஜீ'' என்றான்.

''நன்றியெல்லாம் பிறகு.. வா என்கூட. என் கையை பிடிச்சுக்கோ.. இப்ப நாம பதினெட்டு சித்தர்கள் வசிக்கிற தாருகாவனக் காட்டுப் பகுதிக்கு போய் அங்க இருக்கற சிரஞ்சீவி முலிகையை பறிச்சி சாப்ட்டுட்டு வரணும்.'' என்ற படியே உமாவை தூக்கிக் கொண்டார்.

''சாமி நானும் வரேனே..'' நாராயணமூர்த்தியும் தொற்றிக் கொள்ள முயன்றார்.

''இல்ல.. அந்த வனத்துக்கு எல்லாரும் போக முடியாது. அனுமதி கிடையாது.'' என்றபடியே உமாவோடு நடந்தவரை அடுத்த சில நொடிகளிலேயே பார்க்க முடியவில்லை. புகையானது காற்றில் கரைந்தது போல இருந்தது அவரது மறைவு.

நாராயணமூர்த்தி நிறைய சினிமாக்களில் இதுமாதிரி தந்திரக் காட்சிகளை பார்த்திருக்கிறார். இப்பொழுதோ நிஜம்.

வியப்பான வியப்பு... அதே சமயம் யோகி சம்பங்கி நாதரின் கருணையை எண்ணி நெகிழ்வும்கூட.

''வாங்க இப்படி வந்து உக்காருங்க.. அவங்க வர ஒரு

மணி நேரமாகலாம்.'' என்றார் நம்பியப்பன்.

''சாமிகிட்ட இந்த பொண்ணுக்காகத்தான் வந்தேன். ஆனா, நான் வரதுக்குமுந்தியே என் எண்ணம் சாமிக்கு தெரிஞ்சு போச்சு. அவருக்குதான் என்ன ஒரு கருணை.. ஆனா, இவளோட அப்பனுக்கு கொஞ்சம்கூட நம்பிக்கையே இல்லையே..''

நாராயணமூர்த்தி ஆதங்கம் சேர்ந்து கொண்டது.

''நாராயணமூர்த்தி இப்ப பேச்சு வேண்டாம். தியானம் பண்ணுங்க. இதுவரை நடந்தது எதுவும் பெருசு இல்லை. இனி நடக்க வேண்டியதுதான் பெருசு..'' என்ற நம்பியப்பன் சமாதிமேல் ஒரு விளக்கை ஏற்றி வைத்துவிட்டு வந்து, எதிரில் அமர்ந்து தியானிக்கத் தொடங்கினார். நாராயண மூர்த்தியும் தன் பங்குக்கு தியானிக்க ஆரம்பித்தார். நேரமும் உருளத் தொடங்கியது!

# 7

***கூ**டுவிட்டு கூடுபாயும் ஆற்றல் உடம்பின் ரகசியம் சார்ந்ததாக இருப்பினும் இதுவரையில் அது எவருடைய தயவுமின்றி அடையும் ஒரு விஷயமாகவும் இருந்திருக்கிறது!*

***ஒரு சிலர் உறக்கத்தில் தங்களையும் அறியாமல் சப்த***

நாடிகளை பூட்டிக் கொண்டு உயிர் காற்றை விடுவித்துக் கொண்டு வெளியேறி விட்டு திரும்ப உள் நுழைய முடியாமல் தவித்துள்ளனர்.

ஒரு சடமாவது எரியூட்டப்படும் பொழுது அந்த உடலுக் குரிய பிராணக்காற்று திரும்ப அந்த உடம்புக்குள் புகுந்து சிதைமேடையை விட்டு ஆக்ரோஷத்துடன் எழுந்ததும் நடந் திருக்கிறது. இவை கூடுவிட்டுச் சென்ற பிராண உயிர்க் காற்றால் நிகழ்ந்த சம்பவங்களே.. ஆனால் இதை உலகம் வேறு விதமாகவே பார்க்கிறது.

இது ஒரு வகையில் மிக ஆபத்தான பயிற்சி. ஒரு உடலில் சப்த நாடிகளில், மேலும் உள்ள பதினேழு சூட்சும தேகங்களில் எந்த நாடி வழியாக வெளியேறி, சூட்சும தேகத் தோடு பிரிதொரு உடம்பின் அதே நாடியை கைப்பற்றி நுழைந்து முதலில் அதை துடிக்கச் செய்து பிறகு மற்ற நாடிகளை இயக்கி, மாற்று உடம்பை வசப்படுத்துவது என்பது சாதாரணமானதல்ல.

தொடக்கத்தில் கூடுவிட்டு கூடு பாய்வது என்பது எல்லோர் உடம்பிலும் சாத்யமில்லை என்றே கருதப்பட்டது. ஆகையால் கூடுவிட்டு கூடுபாயத் தெரிந்த இருவர் தங்களுக்குள் முயன்று பார்த்துக் கொண்டனர். அதற்கேற்ப நாடிகளைப் பூட்டித் திறக்க பழகினர்.

அதன் பிறகே எல்லா இறந்த உடம்புக்குள்ளும் புகுந்து வெளியேறும் அளவுக்கு அது மாறியது. சமயங்களில் விலங்குளின் உடம்பிலும் புகுந்து செயல்படுவது என்கிற எல்லைக்கு அது சென்றது. இந்த வித்தை அறிந்தவர்கள் எமனுக்கே சவால்விடும் ஆற்றல் கொண்டவர்களாக இருந்தனர். எனவே... இயற்கையும் இவர்களை வேறு

*விதமாக பழி தீர்த்துக் கொண்டது. ஒரு சில முறைகளுக்கு மேல் இதில் ஈடுபட்டவர்கள் பைத்தியங்களாகிப் போனார்கள்.*

*மனித சக்திக்கு மிஞ்சியதே எதுவும் இல்லை என்பவர்கள் புத்தி சுவாதீனமற்று போகும்போது மட்டும் இயற்கை மிக கொடியது. அதை வெல்ல யாராலும் முடியாது என்கின்றனர். கோள்களும் ஒருவரை அடக்கி ஆள புத்தியில்தான் தங்கள் வேலையைக் காட்டுகின்றன. புத்திச் சூரியன் எப்பொழுதும் ஒளியுடன் திகழ பக்தியும் பணிவுமே துணை செய்யும்.*

*அஷ்டமாசித்து பற்றி அறிய, புரிய, வசப்படுத்த புத்தி பலம் மிக மிக அவசியம். அஷ்டமாசித்து என்பது புத்தியின் முன்னால் ஒரு அதீத கற்பனையாகவே காட்சி தரும். அது ஒரு பொக்கிஷக்கலை என்று புத்திக்கு புரிந்து விட்டால் அஷ்டமாசித்து சாதாரணமாகிவிடும். எனவே அது தன்னை நம்புகின்றவர்களைவிட நம்பாதவர்களிடமே அதிகம் சிந்திக்கப்படும்.*

*ஏனென்றால், அஷ்டமாசித்து என்பது உயிர்களின் வாழ்வில் படைத்துக்காத்து அழித்திடும் இறைநிலைக்கு முந்திய ஒரு நிலை, இதை அறிந்தவன் உலகம், பிரபஞ்சம், உயிர்கள், இறை, என்கிற சகலத்தையும் பற்றிய உண்மை களை அல்லது ரகசியங்களை அறிந்த ஒருவனாவான்.*

அந்த வனம் படுரம்யமாக இருந்தது.

மெல்லிய பனிபொழிவு... இதமான ஒரு வகை பச்சை வாசம்.. எங்கோ ஒரு பேரருவி சீறியபடி இருக்கிறது என்பதற் கான இதமான சப்தம் காதில் விழுந்து மனதை நிறைத்தது.

அதுவரை யோகி சிவானந்தர் தோளில் அமர்ந்திருந்த உமா அவரால் இறக்கிவிடப்பட்டாள். சோர்ந்து காணப் பட்டாலும் புதிய தெம்பு அவளுக்குள் ஏற்படுவதை அவரால் உணர முடிந்தது.

அவளுக்குள் இருக்கும் வேதமணி யோகியிடம், ''சாமி.. இதுவா தாருகாவனம்?'' என்று கேட்க அவர் சிரமும் அசைந்து ஆமோதித்தது.

''இது நம்ப நாட்டுல எங்க இருக்கு.. நாம இப்ப எங்க இருக்கோம்?''

அவர் பதில் சொல்லாமல் ஒரு நீர்சரிவருகே போய் நின்றார். பக்கத்தில் ஒரு புல்வெளி.. அதில் நடுநடுவே சில செடிகள் வளர்ந்திருந்தன.

இதமான சூரிய ஒளி அதன்மேல் பட்டுக்கொண்டிருந்தது. எத்தனையோ மலைத்தலங்களை வேதமணி பார்த்திருக் கிறான். ஆனபோதிலும் இது புதிதாக உலகத்தில் இருக்கு வாய்ப்பில்லாததாக, ஏதோ வேறு ஒரு கிரகத்தில் இப்படி ஒரு காடும், சூழலும் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

அதேசமயம் அந்த யோகியைப் பார்த்து சிரித்தபடி நிர்வாணமாய் இரண்டொருவர் போயினர்.

நிர்வாணக் கூச்சங்கள் எல்லாம் ஏதுமில்லை. வேதமணி, அவர்கள் யார் என்பது போல யோகி சிவானந்தரைப் பார்த்தான்.

''கோரக்கரும், பாம்பாட்டியாரும் தான் போய்கிட்டு இருக்காங்க..'' என்று சாதாரணமாக சொன்னார் சிவானந்தர்.

வேதமணிக்கு ஒரு வினாடி உடம்பெல்லாம் மின்னல் இறங்கியது போல சிலிர்த்துப்போனது. சிவானந்தர் எதையோ தேடினார்... பின் அதை கண்டு கொண்டது போல ஒரு புதர் அருகே சென்று கை குவித்து கடவுளை வணங்குகிற மாதிரி வணங்கினார். பிறகு வானத்தைப் பார்த்து சூரியனையும் வணங்கினார்.

அதன்பிறகு கட்டைவிரலையும், மோதிரவிரலையும் மட்டும் பயன்படுத்தி அந்தப் புதரில் இருந்து இரண்டு செடிகளை வேருடன் பறித்தார். அதை வணங்கிவிட்டு வேதமணியை பெற்றுக் கொள்ளச் சொல்லி சொல்ல, உமாவின் உடம்பில் இருக்கும் வேதமணியும் அவ்வாறே செய்தான். அதன்பின் அதன் இலைகளை மென்று விழுங்கச் சொல்ல, அவனும் அவ்வாறே செய்தான். அவைகள் வாயில் அரைபட்டு தொண்டை வழியாக உள்ளிறங்கும்போது உடம்பெல்லாம் ஏனோ தகதகவென வியர்த்தது. கண்கள்கூட ரத்தச் சிவப்புக்கு மாறியது.

''சாமீ..ஈ...''

''பயப்படாதே.. கிருமிகளை கொல்ற கதிராக்னி மூலிகை இப்ப நீ சாப்பிட்டது.'' என்றவர் அடுத்து சிறு சிறு பூக்களுடன் கூடிய இன்னொரு மூலிகைச் செடியை பறித்து அதையும் சாப்பிடச் சொன்னார்.''

''இது..?''

''இது கந்த்ராக்னி.. அதாவது உடல் உஷ்ணத்தை குளிர வைக்கக்கூடியது. இன்னும் சில நிமிஷங்கள்ல சிறுநீர் நிறைய வெளியேறும். அது கறுப்பா வெளியேறினா புற்று நோயோட கிருமிகளும், செல்களும் அழிஞ்சி வெளியே றிட்டதா அர்த்தம்.'' என்றார். சில நிமிடங்களில் அவ்வாறே ஆனது. இறுதியாக கையில் ஒரு மூலிகையைக் கசக்கி வாயில், மூக்கில், கண்ணில், காதில் என்று முகத் துவாரங்கள் சகலத்திலும் விட்டார்.

''இது..?''

''சஞ்சீவி!''

''சஞ்சீவியா?''

''ஆமாம்.. லட்சுமணன் பிழைக்க ஆஞ்சநேயர் கொண்டு சென்று கொடுத்தது.''

''அதுவா?''

''அதுவேதான்..''

''கொஞ்சம் எடுத்துக்கவா..?''

''திருடாம கேட்டதுக்காக பாராட்றேன். எடுத்துக்கோ.. இதை சாப்ட்டா எப்பேர்ப்பட்ட காயமும் குணமாகும். வியாதியே பிறகு வராது. யோகம் ரொம்ப சுலபமா வசப்படும்.'' உமா என்னும் வேதமணி வெகு ஆர்வமாக அந்த சிரஞ்சீவி மூலிகைகளில் மிச்சமிருந்ததை தன் பிஞ்சுக் கைகளை நீட்டி வாங்கிக் கொண்டாள். சிவானந்த யோகியும், வந்த வேலை முடிந்தது என்கிற மாதிரி மீண்டும் உமா

வடிவில் உள்ள வேதமணியை தொட்டுத் தூக்கிக் கொண்டார். அந்த வனத்தையும் வணங்கியபடியே நீங்கத் தொடங்கினார்.

இடைவிடாமல் மீனாட்சியம்மன் கோவில் ஒலி பெருக்கியில், 'உமா என்னும் பத்து வயது சிறுமியைக் காண வில்லை' என்னும் அறிவிப்பு ஒலிபரப்பாகிக் கொண்டே யிருந்தது. அவளுடைய அங்க அடையாளங்களைச் சொல்லி, அவளை ஜாய்ண்ட் கமிஷனர் அலுவலகத்துக்கு அழைத்து வரச்சொல்லி தொடர்ந்து ஒலிபரப்பிக் கொண்டி ருந்தனர். கமிஷனர் அலுவலகத்து மரபெஞ்சில் தொழுத கையும், அழுத மூஞ்சியுமாக அமர்ந்திருந்தாள் சகுந்தலா. ராமசாமி கோவிலையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார். எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அது உமாவா என்று ஓடிப் போய் பார்த்தார்.

வெளியே ஆடி வீதியிலும் ஒரு ரவுண்டு வரத் தொடங்கினார்.

''இந்த தெய்வத்துக்கு கொஞ்சமும் கருணை இல்லை... இப்படியா சாமி கும்பிட வந்த இடத்துல எங்களைப் பிரச்சு சோதனை செய்யும். ச்சே.. என்ன ஒரு கொடூரமான புத்தி இந்த தெய்வத்துக்கு..'' என்று நாலுபேர் காதில் விழும்படி யாகவே புலம்பிக் கொண்டே நடந்து கொண்டிருந்தார்.

ஆனால், எது உண்மை என்பது காலத்துக்குத்தானே

தெரியும்.?''

ராமசாமி இப்படி கோவிலைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்த அந்த மாலைப் பொழுதில், சுடுகாட்டில் வேறு விதமான காட்சிகள் அரங்கேற ஆரம்பித்திருந்தன.

* * *

ரகுவீர், ஜெகதீஷ், கண்ணன், பிருத்வி நால்வரும் அந்த வெட்டியானிடம் ஆழமான ஸ்னேகிதத்தையே ஏற்படுத்திக் கொண்டு விட்டனர்.

சுடுகாட்டுக்கு வெளியே சாலையோரமாக காரை நிறுத்தி விட்டு, உள்ளே ஸ்டீரியோவில் பாட்டு கேட்டுக் கொண்டே படுத்திருந்தான் மாணிக்கம். நடுநடுவே என்ன செய்கிறார்கள் என்கிற மாதிரி எட்டிப் பார்த்தான்.

''இவங்களை பைத்தியம்கறதா.. இல்லை இவங்கதான் பிழைக்கத் தெரிஞ்சவங்களா?'' என்றெல்லாம் தனக்குள் கேட்டுக் கொண்டான்.

நடுவில் ஒருமுறை எட்டிப்பார்த்த போது அவர்கள் மும்முரமான விவாதத்தில் இருக்க, அதை ரகுவீர் உரிய கோணத்தில் ஷூட் செய்து கொண்டிருந்தான்.

''சுடுகாடும் வயக்காடு தோட்டம் மாதிரி ஒரு இடம்தாங்க.. இங்க பயங்கரமா சில விஷயங்க இருக்கறதா சொல்றதெல்லாம் பொய். உண்மைல வாழ்க்கைல நிதானமா நடந்துக்க ஒவ்வொருவரும் இளம் பிராயத்துல ஒரு சில நாளாவது சுடுகாட்டுக்கு வந்து நாங்க பொணம் அவிக்கறதை

பாக்கணும்.

எதை கொண்டு வந்தோம்?

திரும்ப அதை கொண்டுகிட்டு போறதுக்கு?

தினம் சோப்பு போட்டு, எண்ணெய் தடவி, சீவி சிங்காரிச்சு வெச்சுக்கற இந்த உடம்பை நெருப்பு திங்கறத வந்து பாருங்க. புதுப்புத சிந்தனைங்க வரும்..''

ஸ்க்ரிப்டில் கண்ணன் எழுதியிருந்ததை வெட்டியான் சொல்லிக் கொண்டிருந்தான்.

ஒரு டாப் ஆங்கிள் வியூவுக்காக பக்கத்தில் உள்ள ஒரு தூங்கு மூஞ்சி மரத்தில் ஏறி அதன் கிளை ஒன்றில் அமர்ந்து கொண்டு ஷூட் செய்யலாமா என்று தோன்றவே அதற்கு தயாராகி விட்டான் ரகுவீர்.

மாணிக்கத்துக்கு சிரிப்பு வந்தது.

வெளியே வந்த போது யோகி சிவானந்தத்துக்கு அவன் அனுப்பி வைத்திருந்த டிரைவர் எதிர்பட்டார், ''எலே.. என்ன சாமி ஊரை சுத்தி முடிச்சுட்டாரா?''

''அட நீ ஒண்ணு.. கோவில்ல சாமி கும்பிடப் போனவர்தான். கூட்டத்துல எங்க போனார்னே தெரியல.''

''மிஸ்ஸிங்கா.. ஹோட்டல்ல போய் பார்த்தியா?''

''போனேன்... அங்கையும் இல்ல.''

''ஐய்யோ... அவருக்கு முத்தையா மன்றத்துல இன்னிக்கு நிகழ்ச்சியாச்சே..''

''அதான் ஒண்ணும் புரியல.. சாமியார் டுபாக்கூர் பார்ட்டியா?''

''ச்சை.. வாயைக் கழுவு.. நல்ல மனுஷம்ப்பா..''

''என்னா நல்ல மனுஷன்... இப்படித்தான் அப்ஸ்காண்ட் ஆவாங்களா?''

அவன் அலுத்துக் கொள்ள, அவன் கார்மேல் யதார்த்தமா மாணிக்கத்தின் பார்வை சென்றது. பாவம்.. ஒரு வேளை அவர் டுபாக்கூர் பார்ட்டியா? டாக்சிக்கும் ஹோட்டலுக்கும் நாமம் போட்டுவிட்டு நிஜமாலுமே எங்காவது கம்பி நீட்டி விட்டாரா? கவலை ரேகைகள் முகத்தில் நெளிந்தன.

* * *

உள்ளே கேமரா மரத்தின் மேல் ஏறிக் கொண்டிருந்தது. ஒரு கயிற்றின் நுனியில் கேமராவைக் கட்டி கிளை ஒன்றின் இடையில் தூக்கிப்போட்டு அதை கீழிருந்து பிருத்வி இழுக்க, கேமரா மெல்ல மேலே ஏறி அதை ரகுவீரும் பற்றி இழுத்துக் கொண்டு கிளைப் பகுதியில் வசதியான இடமாக பார்த்து அமர்ந்தான். அப்படியே வியூஃபைண்டர் குளோசர் மூடியை விலக்கி, காமிரா வழியாக மொத்த சுடுகாட்டைப் பார்த்தான். பின் ஹேண்டிலைப் பிடித்துக்கொண்டு அப்படியே ஒரு சுற்று சுற்றி ஒரு மானிட்டர் பார்த்தவன் பேட்டரியை ஆன் செய்யச் சொல்ல சமிக்ஞை கொடுத்துவிட்டு காமிராவை கொண்டு இப்பொழுது ஷூட் செய்யத் தொடங்கினான்.

திட்டுத் திட்டாய் சமாதிகள்.. மெல்லிய இருள். மாலைச்

சூரியனின் அஸ்தமன ஒளிபட்டு அந்த சமாதிகள் தெரியும் விதமே ஒரு மாதிரி பயங்கரமாக இருந்தது.

கண்ணன் ஒரு ரிஃப்ளெக்டரைப் பிடித்து சமாதிகள் மேல் பளிச்சென்று வெளிச்சம் படுமாறு செய்ய ரகுவீர் ''குட்'' என்றான்.

''டேய் இருட்றதுக்குள்ள எடுத்து முடி.. ஷூட்டிங் செட் அப் இல்லாம வந்துருக்கோம்கறத மறந்துடாதே'' என்கிற ஜெகதீஷின் குரல் வெகு தூரம்வரை கேட்டது. அப்படி கத்தும்போது அவன் காலருகில்தான், முகம் மட்டும் மூடப் படாத நிலையில் காலையில் கான்ஸ்டபிள் புதைக்க வந்த பிணம் கிடந்தது. கடைசிவரை கான்ஸ்டபிள் வரவில்லை. அந்த ஸ்வீப்பரும் வரவில்லை. அவ்வளவுதான் கவர்மெண்ட் லட்டசணம் என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதேசமயம் புதிய பிணவரத்து எதுவும் இல்லாததால் வெட்டியான் வெகு தூரத்தில் உள்ள அவனது வீட்டுக்கு கிளம்பி விட்டிருந்தான்.

போகும்போது அருகில் வந்து ''எதுக்கும் ஜாக்கிரதை..'' என்று கூறிவிட்டுத்தான் சென்றான். பாக்கெட்டில் அவர்கள் தந்த ஐநூறு ரூபாய் அவனை கள்ளச்சாராயக் கடை நோக்கி துரத்தியது.

''டேய்.. கீழ என்ன பண்றீங்க. மூணு பேரும் மேல வாங்க. ஒரு பத்து மணிவரை இருந்து என்னென்ன நடக்குதுன்னு தான் பார்ப்போமே..'' என்ற ரகுவீரின் கருத்துக்கு பலமான வரவேற்று தருகிற மாதிரி மீதமுள்ள மூவரும்கூட மரத்தில்

ஏறி அகண்டு கிடந்த கிளைகளில் அங்கங்கு அமர்ந்து கொண்டனர்.

அவர்கள் வழக்கான ஸ்டைல்படி ஒரு சிகரெட்டை பற்ற வைத்து அதை நான்கு பேரும் ரவுண்டு கட்டி பிடிக்கவும் செய்தனர். நடுநடுவே களைப்பின் நிமித்தம் கொட்டாவியும் வந்தது. இருந்தும் சமாளித்தனர். அப்பொழுதுதான் அங்கே அந்த அதிசயம் நடக்க ஆரம்பித்தது. சிவானந்த யோகி, நாராயணமூர்த்தி மற்றும் உமாவுடன் அங்கே பிரசன்ன மாகியிருந்தார்.

நாராயணமூர்த்தி மரத்தின் மேல் நான்கு பேர் அமர்ந் திருப்பது தெரியாமல் சுடுகாட்டில் யாரும் இல்லை என்கிற எண்ணத்தில் அன்று எதாவது புதிதாக பிணம் புதைக்கப் பட்டுள்ளதா என்று பார்க்கத் தொடங்கினார்.

ரகுவீர் கேமரா வழியாக கூர்ந்து கவனித்தான்.

அனேகமாக எதற்காவது மண்டை ஓடு மற்றும் சில எலும்புகளுக்காக சிலர் சுடுகாட்டுக்கு வருவது உண்டு.

அப்படிப்பட்டவர்களா இவர்கள் என்கிற கேள்விதான் பிரதானமாக இருந்தது.

இல்லை சுடுகாட்டில் சில சாமியார்கள் ஏதாவது பூஜை செய்வார்கள். அதற்காகக்கூட இருக்கலாம் என்றும் அவனுக்குத் தோன்றியது.

எதுவாக இருந்தாலும் ரசமான காட்சி என்பதில் மட்டும் சந்தேகமேயில்லை என்றும் தோன்றியது. மற்ற மூவரும்கூட

கூர்மையாக கவனித்தனர்.

கீழே நாராயணமூர்த்தி சரியாக மூடப்படாத ரயில்வே கிராதி பிணத்தைப் பார்த்துவிட்டு முகத்தைச் சுளித்தபடி சிவானந்தரிடம் வந்தார்.

''சாமி... அங்க ஒரு பிணம் பாக்கற மாதிரியே இருக்கு. ஆனா நாத்தம் சகிக்கல..''

''எங்க..?'' வேதமணி ஓடிச்சென்று உற்றுப்பார்த்தான். முதலில் முகத்தைச் சுளித்தாலும் சட்டென்று பொறி தட்டியதுபோல, ''இதுதான் எனக்கு ஏத்த உடம்பு'' என்றான்.

''நல்லா யோசிச்சுக்கோ...'' என்றார் சிவானந்தர்.

''நல்லா யோசிச்சுதான் சாமி சொல்றேன்... என் முகம் புதுசா இருக்கணும். எவ்வளவு ரணத்தையும் தான் சிரஞ்சீவி சரிப் பண்ணிடுமே..''

''ஓ.. நீ அப்படி வர்றியா?''

''ஆமாம்..''

''அப்ப வேகமா காரியம் நடக்கட்டும். யாராவது வந்துடப் போறாங்க..''

நாராயணமூர்த்தி துரிதப்படுத்த உமாவாகிய வேதமணி ஒரு மரத்தடியில் போய் படுத்தான்.

மரத்தின் மேலுள்ள நால்வருக்கும் ஒன்றுமே புரியவில்லை.

நாராயணமூர்த்தியும், சிவானந்தரும் ஒன்று சேர்ந்து ஒதுங்கிக் கொண்ட நிலையில், உமா உடம்பில் இருந்து

நாடிப் பூட்டுகளை திறந்து கொண்டு வேதமணியின் உயிர்க்காற்று பட்டென்று வெளியேறியது.. அதன் அறிகுறி யாக அந்த உடலின் தலைப்பாகம் அப்படியே வேறுபக்கம் அசைந்து சரிந்தது.

ரகுவீரின் கேமரா நடப்பதை படம் பிடிக்கத் ஆரம்பித்தது. வெளிச்சம் சதி செய்தாலும் விழும் அளவு விழட்டம் என்ற வெறிதான் பிடித்து ஆட்டியது. கண்ணனும், ஜெகதீசும், பிரதாப்பும் வாயைப் பிளந்து கொண்டு பார்க்க, அந்த ரயில் விபத்துக்குள்ளான பிணம் ரத்தச் சகதிக்கும், வெட்டுக் காயத் துக்கும் நடுவில் வெடுக்கென்று கண்களைத் திறந்து கொண்டது.

அடுத்த சில நொடிகளில் அந்த சமாதியே நடுங்க, அந்த உருவம் புழுதி பறக்க எழுந்து நின்றது.

''ஐய்யோ... எப்படி இது சாத்யம்? என்கிற பயம் கலந்த கேள்வி நால்வருக்குள்ளும் ஓடத்தவறவில்லை.

உமாவும் தூங்கி எழுந்திருப்பது போல எழுந்திருந்து சிவானந்தரை நெருங்கினாள். சிரித்தாள்.

''உமா.. இப்ப எப்படி இருக்கு உடம்பு?''

''நல்லா இருக்கு.. ஆமா நான் எப்ப எங்க அப்பா அம்மாவைப் பார்ப்பேன்.''

''இதோ இப்பவே கிளம்பிடலாம்..'' சிவானந்தர் குரூரமாக நிற்கும் வேதமணியைப் பார்த்தார்.

''சாமி.. ஒரு வழியாக ஒரு உடம்புக்குள்ற புகுந்துட்டேன்.

தப்போ, சரியோ, அழகோ, குரூரமோ, இதுதான் இனி என் உடம்பு'' என்றான் அவனும்.

''சஞ்சீவி மூலிகையை சாப்பிட்டு குணமடைஞ்சுடு. இனி இந்த கூடுவிட்டு கூடுபாயற வித்தையை வாழ்க்கைல எப்பவும் யார்கிட்டையும் காட்ட மாட்டேன்னு சத்தியம் செய். காரையார் மலைக்காட்டுப் பக்கமும் வந்துடக்கூடாது.

சிவானந்தர் கரம் அவன் முன் நீண்டது. அரைமனதாக வேதமணி உருவில் உள்ள அந்த குரூரமனிதனும் சத்தியம் செய்து தந்தான்.

''சரி.. புறப்படு, இனி இங்க இருக்க வேண்டாம். நானும் உமாவை அவங்க பெற்றோர்கிட்ட ஒப்படைக்கணும். உமா.. நீ எதையும் யார்கிட்டையும் சொல்லக் கூடாது.''

''சரி சாமி..''

''நீ குணமாயிட்டே.. இனிமே நூறு வருஷத்துக்கு மேலையே வாழ்வே. உன்னை எந்த புத்துநோயும் எதுவும் பண்ணாது. என்ன?''

''சரி சாமி..''

மொத்தமாக அவர்கள் புறப்படக் காலெடுத்தபோது ஆர்வம் தாளாமல் ரகுவீர் கத்தி விட்டான்.

''நில்லுங்க...''

சாமி மற்றும் மூவரும் தேங்கி நின்று திரும்பிப் பார்க்க, அந்த நால்வரும் திருடர்கள் போல மரங்களில் இருந்து அவர்கள் நடுவில் குதித்தனர்.

நாராயணமூர்த்தி யாரோ திருடர்கள் என்று பதைத்துப் போய்ப் பார்க்க..

''நீங்கள்லாம் யார்.. இங்க இப்ப நடந்தது என்ன? நான் அதை படம் எடுத்துருக்கேன். கூடுவிட்டு கூடுபாயறது அது இதுன்னு பேசினீங்களே..''

குரூரமான வேதமணியை பார்த்தும் பார்க்காமலும் பேசினான். சிவானந்தர் வேகமாக உமாவோடு நடந்தார். எந்த பதிலையும் அவர்களுக்கு சொல்லவில்லை. வெளியே மாணிக்கத்திடம் பேசிக்கொண்டிருந்த கார் டிரைவர் வேலாயுதம், சிவானந்தரும் உமாவும் வருவதைப் பார்த்து விக்கித்துப் போனான்.

''சாமி... நீங்களா இங்க?''

''ஆமாம்.. வா கிளம்புவோம்.''

''ஆமா, இங்க எப்படி?''

''நீ கிளம்பு.. இந்த பொண்ணு வீட்டுக்குப் போகணும். இவளை இவ அம்மா அப்பாகிட்ட ஒப்படைச்சுட்டு அப்புறம் லாட்ஜிக்குப் போகணும்.''

பதிலோடு பின்னால ஏறி அமர்ந்தார். நாராயணமூர்த்தியும் தொற்றிக் கொள்ள கார் புறப்பட்டது.

நேராக மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சென்றது. ஆடி வீதியில் பித்துப் பிடித்தவன் போல் மீனாட்சி அம்மனை வசைபாடிக் கொண்டு அலைந்து கொண்டிருந்த ராமசாமியை நாராயணமூர்த்தி பார்த்த வேகத்தில் பரவசமடைந்தார்.

காரும் சடென்பிரேக் போட்டு விட்டிருந்தது.

இறங்கி ஓடிய நாராயணமூர்த்தி அப்படியே ராமசாமியை கட்டித் தழுவிக் கொண்டார்.

காரிலிருந்து உமாவும் கூடவே சாந்த சொரூபியான அந்த யோகி சிவானந்தரும் இறங்கி வருவதைக்கண்டு ராமசாமி பார்த்து அதிசயித்தனர்.

இதுவரை பித்துப்பிடித்த மாதிரி இருந்த மனது சட்டென்று அடங்கிப்போனது. ஓடிப்போய் உமாவை கையில் தூக்கிக் கொண்டு உச்சி முகர்ந்தார். யோகி சிவானந்தர் நாராயண மூர்த்தியை பார்த்தார்.

''அப்ப நான் கிளம்பறேன். கூட்டத்திற்கு நேரமாச்சு.'' என்றார்.

''என்ன சாமி.. இவ்வளவு பெரிய அதிசயம் செய்திருக் கீங்க.. அதை இவர்கிட்ட சொல்ல வேண்டாமா? அப்படியே காரையார் மலைக்காடு சம்பங்கிநாதரோட மகிமையை இவருக்கு எடுத்துச்சொல்லி புரிய வைக்க வேண்டாமா?''

''புரியவைக்க வேண்டியது என் வேலையல்ல. அதை இனி உமா பார்த்துக் கொள்வாள். இல்லையாம்மா..'' என்றார்.

அதற்கு உமாவும் உற்சாகமாக தலையாட்டினாள்.

''ராமசாமி.. எல்லா உயிர்களின் உயிரும் இன்று போகும். நாளை போகும் என்று கெடு விதிக்க மருத்துவர்களால் முடியாது என்பதை உன் மகள் உமாவின் மூலம் தெரிந்து கொள்வாய். அவள் பூரண குணமடைந்திருக்கிறாள். நான்

வந்த வேலை முடிந்து விட்டது. என் குரு சம்பங்கி நாதரின் கட்டளையை நிறைவேற்றிய திருப்தியில் நான் இருக்கிறேன்.'' என்றவாறு காரில் ஏறி கூட்டத்திற்கு புறப்பட்டார்.

ராமசாமியும், நாராயணமூர்த்தியும் கமிஷனர் அலுவலகத்தில் இருக்கும் உமாவின் அம்மா சகுந்தலாவை பார்க்க புறப்பட்டனர்.நாராயணமூர்த்தி தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் எல்லாவற்றையும் எப்படி ராமசாமிக்கு புரிய வைக்கப் போகிறேன் என்று எண்ணியபடியே பின்னால் ஓடினார்.

* * *

**மா**ணிக்கம் உள்ளே என்னதான் நடக்கிறது என்று பார்ப்பதற்காக கொஞ்சம் பயத்துடனே எட்டிப் பார்த்தான். குரூரமான வேதமணி அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தான்.

''என் பேர் வேதமணி.. ஒரு விபத்துல அடிபட்டு மூணு நாளா மயங்கியிருந்த நான் இப்பதான் தெளிஞ்சு எழுந்துருக்கேன்... என்னை விடுங்க...'' என்று அவர்களை ஒதுக்கிக் கொண்டு நடந்தான்.

''இல்ல.. நீங்க பொய் சொல்றீங்க.. எதுவா இருந்தாலும் தயவு செய்து கேமரா முன்னால நின்னு பதில் சொல்லுங்க ப்ளீஸ்..''கெஞ்சலோடு துரத்தினான் ரகுவீர். அவனோ நிற்க்கூட பிரியப்படவில்லை.

''சாரி.. எனக்கு வேற வேலை இருக்கு.''

அவர்களைப் பிடித்து குழியில் தள்ளாத குறையாய் தள்ளிவிட்டு அங்கிருந்து ஓடவே செய்தான். அவர்கள் நான்குபேரும் ஒரு புது முடிவுக்கு வந்திருந்தனர்.

''கண்ணா.. ஜெகதீஷ்.. பிருத்வி.. நமக்கு இனி இங்க வேலை இல்லை. அந்த சாமியார் பேசும்போது சொன்ன காரையார் மலைதான் அடுத்து நாம போகப்போற இடம்.''

''எதுக்கு..?''

''சம்திங்.. அங்க ஏதோ இருக்கு.. இப்ப இங்க நாம பார்த்தது கூடுவிட்டு கூடுபாயற ஒரு வித்தையோட ஒரு துண்டுப் பகுதிதான். இதை நான் கற்பனைன்னு நினைச்சுட்டி ருந்தேன். ஆனா.. இது இவ்வளவு பெரிய நிஜமா?''

''அவசரப்படாதே.. இது ஏதாவது சித்த வேலையாகூட இருக்கலாம்.''

''எது உண்மையோ அதை தெரிஞ்சுகிட்டாகணும்.''

கண்ணன் அதீதமாக உணர்ச்சி வசப்பட்டான்.

அப்படியே காமராவையும் தூக்கி தோளில் வைத்துக் கொண்டு திரும்பித் திரும்பி பார்த்தபடியே நடந்தான்.

மூவரும் எதுவும் பேசவில்லை.

ஆனால், சுடுகாட்டை இப்பொழுது பார்க்க அவர்களுக்கு பயமாக இருந்தது..

**முற்றும்**

காரையார் காடு நோக்கிப் புறப்படும் இந்த நான்கு பேருக்கும் அந்த வனத்தில் அபூர்வமான அனுபவங்கள் ஏற்பட இருக்கின்றன.

# *ஏழாம் சக்தி*

நாவலின் தொடர்ச்சியாக

# *மாயமாகப் போகிறார்கள்*

என்ற தலைப்பில் தொடரும்.

# மாயமாகப் போகிறார்கள்

## 1

*கூடுவிட்டு கூடு பாய்வது எப்படி ஒரு வித்தையோ அதுபோல் கூட்டை விடாமல் கூட்டிலேயே தங்கி இருப்பதும் ஒரு வித்தை. பொதுவில் வித்தை என்றாலே அது மறைவானது என்றும் ஒரு பொருள் உண்டு. மறைவானதை தேடி அறிய முயற்சிகள் வேண்டும். அத்துடன் வித்தை என்றாலே அது கல்வியாகி விடுகிறது. கல்வி என்றால் கற்க வேண்டும். ஆக, தேடலும் கற்றலுமே எவருக்கும் வித்தைகளைத் தரும். அதே சமயம் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு வித்தை அதாவது ஒரு கல்விஞானம் ஒளிந்திருக்கும். அதைக்கண்டறிந்து தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக சிலருக்கு யாரும் கற்றுத்தராமலே ஓவியம் சுலபமாக வரைய வரும். சிலருக்கோ கவிதைகள் மனதில் ஊற்றெடுக்கும். சிலரோ சுலபமாக வேலை செய்ய ஒரு எஞ்சினியர் போல*

திட்டமிட்டபடி இருப்பார்கள். மதுரையில் பள்ளிக்கூடம் பக்கம் கூட செல்லாத ஒருவர் ஜனாதிபதி அப்துல்கலாம் பெயரில் எளிய விஞ்ஞான ஆய்வுக்கூடம் ஒன்றை நடத்தி வருகிறார். இத்தனைக்கும் இவர் ஒரு லாரி லோடர். மூட்டைத் தூக்குவது இவர் தொழில்! ஆனாலும் இவர் இவருக்குள் இருக்கும் திறமையை உணர்ந்து அதை தூண்டிவிட்டு செயல்பட்டபடியே இருக்கிறார்.

அதே சமயம் இப்படி முயற்சித்து தேடிப்பிடித்து ஒரு வித்தையை நாம் வசப்படுத்த இறையருளும் துணை நிற்க வேண்டும். அதற்கான பலமான பிரார்த்தனைகள் நம்மிடம் இருக்க வேண்டும். அதாவது ஆழ்ந்த இறைபக்தி, பின் ஓய்வில்லாத தேடல், அதன்பின் கடினமாய் உழைத்து கற்பது இந்த மூன்றாலும்தான் ஒருவர் ஒரு வித்தையில் மேல் நிலையை அடைய முடியும். இது இல்லாதபடி சில அதிசயங்களும் இந்த உலகில் உள்ளன. சில பனிப்பிரதேசங்களில் சிலவகை மீன்களும், தவளைகளும் அதிகபட்ச பனிக்காலத்தில் அப்படியே உறைந்து அசைவற்றுப் போய் விடுகின்றன. ஆறுமாதங்கள் எல்லாம் அவை அப்படியே இருக்கின்றன. சிலர் அப்படியான தவளைகளை இறந்துவிட்டதாகக் கருதி சமைத்தெல்லாம் சாப்பிட்டிருக்கிறார்கள். ஆனால்,

***அவை கோடைகாலத்தில் சுவாசிக்கத் தொடங்கிவிடுவது தான் ஆச்சரியம். இப்படி, அசைவற்று ஒரு திடப்பொருள் போல நம்முடைய உடலையும் நாம் ஆக்கிக்கொண்டு விட முடியும். இதற்கு கூடு விடாப் பயிற்சி என்று பெயர். மிக லேசான அளவில் சுவாசம் மட்டும் மூக்கின் வழியாக உள் சென்றபடி இருக்கும்.***

அகத்தியர் அருவியில் நீரிடம் நல்ல பாய்ச்சல். புதிதாக வந்திருக்கும் ஒரு டூரிஸ்ட் வேன் கூட்டம் காணாததை கண்டுவிட்ட மாதிரி அந்த நீர்ப்பாய்ச்சலில் திளைத்துக் கொண்டிருந்தது.

திபுதிபுவென்று ஆயிரமாயிரம் வெள்ளைக் குதிரைகள் ஓடிவந்து தலைமேல் விழுகிற மாதிரியும் தோள்களை மிதித்துக் கொண்டு அவைகள் தாவி ஓடுகிற மாதிரியும் தோன்றியது.

எப்பொழுதும் அருவியென்றாலே அழகுதான். குருட்டு ரசனை படைத்தவன்கூட அருவி அழகில் தன்னை மறந்து நிற்பான். அதே அருவியில் ஐந்தாறு இளம் பெண்கள் குளித்து கொண்டிருந்தால் அது பேரழகல்லவா?!

அந்த இளம்பெண்களும் இருபது வயதுக்குள் இருந்தார்கள். பாவாடை தாவணியில் இருந்ததால் நிச்சயம் ஏதாவது ஒரு சிறுநகரைச் சேர்ந்தவர்ளாகவோ, இல்லை கிராமத்தவர்களாகவோதான் அவர்கள் இருக்க வேண்டும்

என்று தோன்றியது.

இன்றைய நகரப்பெண்கள் எல்லாம்தான் படுசோனியாக இருக்கிறார்களே... ஓரளவுக்கு உடம்பும், விளைந்த மார்பும் இன்று கிராமத்தில்தான் இருக்கிறது.

குக்கர் அடுப்புச்சாதமும், வேலைக்குப்போகும் கட்டாயங்களும், வெக்கைப் புழுக்கமும் ஒரு வாளி இருவாளிக்குள் குளிக்க வேண்டிய கட்டாயங்களும் நகரத்து பெண்களின் அழகை கொஞ்சம் கொஞ்சமாக மென்று விழுங்கத் தொடங்கி விட்டன.

கிராமம்தான் ஓரளவு தப்பி இருக்கிறது. இருந்தாலும் கிராமத்திலும் உள்பாடி அணியும் கலாச்சாரம் ஆழமாக பரவி விட்டதாகத் தோன்றியது. குளிக்கின்ற பெண்களிடம் அது ரவிக்கையை மீறி அப்பட்டமாகத் தெரிந்தது.

பல இளைஞர்கள் அதற்காகவே தொடர்ந்து குளித்துக் கொண்டிருந்தார்கள்.

அதில் சிலர் சென்னையை சேர்ந்தவர்கள்.

சென்னையில் அவர்கள் தண்ணீரை பிளாஸ்டிக் கேன்களிலும், பாட்டிலுக்குள்ளும்தான் பார்க்கிறார்கள். ஓடும் தண்ணீர் அவர்கள் வரையில் ஒரு அபூர்வ விஷயம். கூவம் கூட கறுத்துப்போய் தேங்கி நிற்கும் குட்டையாகத் தான் இருக்கிறது.

அதனால் அருவியைப் பார்த்துவிட்டால், அதுவும் ராட்சஸமாய் பொங்கிபெருகும் அருவியை பார்த்துவிட்டால்

மிக உல்லாசமாகி விடுகிறது.

இயற்கைதான் உண்மையில் உலகின் மிகப் பெரிய சக்தி என்பது அங்கே ஒரு முட்டாளுக்குக்கூட புரிந்து விடுகிறது.

அது உண்மைதான் என்கிறமாதிரி அதையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார் ஒருவர். அழுக்கு வேட்டி, சட்டை என்று கொஞ்சம் பிச்சைக்காரத்தனமாகத்தான் தெரிந்தார்.

மிக நீண்டதாடி... அதில் சற்றுமுன் யாரோ தந்திருந்த எலுமிச்சை சாதத்தின் சில பருக்கைகள் கிடந்தன. தேன்கூட்டை மொய்க்கும் ஒரு சில தேனீக்களைப் போல அவை தெரிந்தன. அவருக்கு அதைப்பற்றி எல்லாம் ஸ்மரணையே இல்லை.

அருவித் தண்ணீர் குதித்து ஓடும் ஆற்றுவெளியில் சிலர் துணிகளை துவைத்து காயப்போட்டுக் கொண்டிருந்தனர். அவர் பார்வை அவர்கள் மேலும் அருவியில் குளிப்பவர்கள் மேலும் மாறிமாறிச் சென்றபடி இருந்தது.

அவரை பிச்சைக்காரராக அனுமானிக்க முடியவில்லை. பைத்தியமாக தீர்மானிக்கவும் முடியவில்லை. இரண்டுக்கும் இடைப்பட்டவரா என்பது தெரியவில்லை.

இந்த நிலையில் அருவிக்கு வரும் பாதை மேல் ஒரு ஹூண்டாய் கார் ஒன்று ரதம் போல வந்து நின்றது. அதில் இருந்து கோட்சூட், டை என்று மிக தோரணையான ஒரு மனிதர் இறங்கினார்.

ஏதோ ஒரு பெரிய நிறுவனத்துக்கு அதிபராகவோ

இல்லை பெரிய மருத்தவமனை டாக்டராகவோ தான் அவர் இருக்க வேண்டும் என்பதுபோல் ஒரு தோற்றம். அவரோடு ஒரு பஞ்சகச்சமும் முழுக்கைச்சட்டையும் கிராப்புத் தலையிலேயே சிறியதாக குடுமியும் வைத்திருக்கும் ஒருவரும் இறங்கினார்.

இருவருமாக கண்ணுக்குமேல் கையை கூரையாகக் கொடுத்து யாரையோ தேடினர். அவர்கள் தேடலில் அந்த தாடிக்கார மனிதர்படவே, அவர்கள் முகத்தில் ஒரு மகிழ்ச்சி.

'ஆமாம் குருமூர்த்தி.. அவரேதான். அவரைப்போய் பிடியுங்க. பாருங்க அவர்பாட்டும் எங்கயோ போய்ண்டு இருக்கறத..'

கோட்சூட்காரரர் கத்த, அந்த பிராமணர் ஓடினார். ஆனால் அந்த தாடிக்காரரர் அருவிப்பாறை ஒன்றின் பின்னால் போனமாதிரி தெரிந்தது. போய்ப் பார்தால் அவரில்லை. யாரோ நான்குபேர் சீட்டு விளாயாடிக் கொண்டிருந்தனர்.

பிராமணர் முகம் வாட ஆரம்பித்துவிட்டது.

'யார் சாமி... என்னா வேணும்?' சீட்டாட்டக்காரரர்களில் ஒருவன் கேட்டான்.

'இந்த பக்கமா ஒருத்தர் வந்தாரே..'

'ஒருத்தரா... தினம் நூறு பேர் வராங்க சாமி.. திட்டமா யாரைன்னு சொல்லுங்க..'

'இப்ப.. ஒரு நிமிஷம் முன்னால.. தாடி மீசையோட

இங்கையே சுத்திண்டு இருப்பாரே ஒரு பெரியவர்..'

'யாரு மந்திச்சித்தனா?'

'அவர் பேர் எல்லாம் நேக்கு தெரியாது.'

'அவராத்தான் இருக்கணும். அவர்தான் தண்ணீரில் இறங்கினாரே..'

அவர்களில் ஒருவன் அருவிநீர் குதித்து ஓடும் தடாகம் ஒன்றை காட்டினான். வெளிர்நீலமாய் அதுவும் கண்ணில் பட்டது.

'தண்ணில இறங்கினா இங்க இருக்கணுமே.'

'அவர் அப்படித்தான்.. இறங்குறது ஒரு இடத்துல ஏறது ஒரு இடமா இருக்கும்.'

'நீங்க என்ன சொல்றேள்.. எனக்கு புரியல..'

'நாங்கள்லாம் மட்டும் என்ன புரிஞ்சுகிட்டா இருக்கோம். அவர் அப்படித்தான்.'

அவர்கள் பதில் அந்த பிராமணரை குழப்பியது. ஆனால் தடாகத்தில் அவர் இல்லை. யாரும் இறங்கின தடயம் கூட இல்லை.

பிராமணர் திரும்பத் தொடங்கினார்.

காத்துக்கொண்டிருந்தார் கோட்சூட் மனிதர்.

'சார்... அவர் போய்ட்டார்.. மயிரிழைல நழுவ விட்டுட்டோம் சார்..'

'என்னய்யா சொல்றீர்? இப்ப பார்த்தோமே.'

'உண்மைதான்.. ஆனா ஒரே மாயமா இருக்கு. பக்கத்துல ஒரு தண்ணித் தேக்கம்தான் இருக்கு. அதுல அவர் இறங்கினாராம். அங்க இறங்கி எங்கேயோ ஏறுவாராம். அங்க சீட்டாடிண்டு இருக்கற சிலர் சொன்னாங்க... அவர் பேர்கூட மந்திச்சித்தன்னாங்க.. எனக்கு ஒண்ணும் புரியல..'

பிராமணர் சொல்லச் சொல்ல கோட்சூட்காரரர் முகத்தில் வரிகள் விழுந்தது. பளிச்சென்று ஏமாற்றம் தெரிந்தது. அருவியைப் பார்த்தார். அந்த பெண்களும் விலகவில்லை. அவர்களை ரசிக்கும் ஆண்களும் விலகவில்லை.

ஆனால் அவரால் எதையும் ரசிக்க முடியவில்லை.

திரும்பினார். காரில் ஏறப்போனார்.

'ஹலோ சார்... எங்க இவ்வளவு தூரம்?'

அவரைத் தடுத்து நிறுத்தியது ஒரு குரல். அவரும் திரும்பினார். ரிப்போர்ட்டர் தயாளன்!

'ஓ..தயாளன்!'

'எங்க சார் இங்க.. அருவிக்கு குளிக்கவா?'

'நோ.. நோ.. ஒருத்தர பார்க்க வந்தேன். அவர் கிடைக்கல.. ப்ச்ச்..'

'இங்க, நீங்க சந்திக்கிற அளவு ஒருத்தரா.. ஆச்சரியமா இருக்கே.'

'ஆச்சரியம்தான்... வாழ்க்கைல ஆச்சரியங்களுக்குப்

பஞ்சமா என்ன? ஆமா நீங்க எங்க தயாளன் இங்க?'

'அருவில குதிச்சு ஒருத்தர் தற்கொலை செய்துகிட்டாராம் பாடி அதோ அங்க பாறைகிட்ட ஒதுங்கியிருக்கு. போட்டோ எடுக்க வந்தேன். இன்னிக்கு ஈவினிங் நியூஸாச்சே.'

'சந்தோஷம் தயாளன். என்னைப்பத்தின உங்க பேட்டிக் கட்டுரையும் நல்லாவே இருந்தது. என் நன்றி..'

'அட என்ன சார் நீங்க.. எவ்வளவு பெரிய தொழிலதிபர் நீங்க.. உங்களை சந்திக்கிறதே பெரிய பாக்கியம். இதுல பேட்டி வேற கொடுத்திருக்கீங்க.. நான்தான் நன்றி சொல்லணும்.'

'ஓ.கே தாயளன். நான் அப்ப புறப்படறேன் தேங்க்யூ ஸோ மச்..'

'ஒன் மினிட் சார்.. நீங்க பார்க்க வந்தவரை பாத்துட்டீங்களா. ஏதோ பாக்க முடியலேங்கறமாதிரி ஒரு வருத்தம் தெரியும் உங்ககிட்ட..'

'ஆமாம் தயாளன். அவர் யார் என்ன ஏதுன்னு எனக்கு தெரியாது. போன தடவை ரிலாக்ஸா அருவிக்கு குளிக்க வந்துருந்தேன். அப்ப அவரும் கூட சேர்ந்து குளிச்சார். சொன்னா நம்பமாட்டீங்க..'

அந்த தொழிலதிபர் கொஞ்சம் இடைவெளி விட்டார்.

'சும்மா சொல்லுங்க சார்..'

'தண்ணிக்குள்ள அவர் குளிக்கும்போது கழுத்துல

பாம்போட பரமசிவனே குளிக்கிறமாதிர இருந்தது. நான்கூட ஏதோ பிரமைன்னு நினைச்சு அதை பெரிசா எடுத்துக்கலை.

அப்புறமா தலையை துவட்டும்போது கிட்டவந்தவர் ஒரு வாரத்துக்கு ஆகாய மார்க்கத்துல எங்கேயும் போகாதேன்னு சொல்லிட்டுப் போய்விட்டார். எனக்கு அப்ப ஒண்ணும் புரியல. ஆனா ஒரு ஃப்ளைட் ட்ரிப் எனக்கு கேன்சல் ஆனது. அதாவது டயத்துக்கு என்னால ஏர்போர்ட் போய் ஃப்ளைட்டை பிடிக்க முடியல. டிராஃபிக்ல மாட்டிக்கிட்டேன். அப்படி டிராஃபிக்ல கார் சிக்கிக்கிட்டு நின்னப்போ, சைட்ல பிளாட்ஃபாரத்துல அவர் என்னை பாத்துகிட்டே போறதையும் பார்த்தேன். அப்பதான் எனக்கு அவர் சொன்னதே ஞாபகம் வந்தது. அதுக்குள்ளே டிராஃபிக் கிளியராகி கார் கிளம்பிடிச்சு.. ஆனா பிரயோஜனமில்ல. ஆறு மணி ஃப்ளைட்டை பிடிக்க ஆறு இருபதுக்கு போனா, அது எனக்காக காத்திருக்குமா என்ன? அடடான்னு திரும்பி வீட்டுக்கு வந்து டி.வியை பார்த்தா ஒரே ஷாக். நான் எந்த ஃப்ளைட்ல போகணுமோ அது வானத்துல வெடிச்சு சிதறி.. ஓ..!'

அவர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராக சொல்லி முடிக்க, அந்த ரிப்போர்ட்டரின் முகத்திலும் தீ ஜுவாலைகளின் அருகில் நிற்கிறமாதிரி ஒரு மினுமினுப்பு.

'ஆமாம்... அவர் இங்கையா இருக்காரு?'

'ஆமாம்.. இங்கதான் அவரைப் பார்த்தேன். அதான் நன்றி சொல்றதுக்காக தேடி வந்தேன். கண்ணுல கூட

பட்டுட்டார். ஆனா நோ யூஸ். மாயமா மறைஞ்சுட்டார்.’

‘அவர் பேர் தெரியுமா?’

‘மந்திச்சித்தராமே.. அதுகூட இப்பதான் தெரியும். இதோ என் பி.ஏ குருமூர்த்திதான் சொன்னார்.’

‘ஓ.. அவரா?’

‘உங்களுக்கு தெரியுமா மிஸ்டர் தயாளன்?’

‘நிறைய அவர் பற்றி கேள்விப்பட்டிருக்கேன் சார். இந்த மலையில அவர் கால்படாத இடமே இல்லை. குறிப்பாக குரங்குகள் கிட்ட அவர் ரொம்ப பிரியாம இருப்பாராம். அதனால அவருக்கு அந்த பேராம்.’

‘பேர்ல என்ன இருக்கு? ஆனா சம்திங் அவர்கிட்ட ஏதோ சக்தி இருக்கு..’

தொழிலதிபரின் கருத்தில் நல்ல அழுத்தம். தயாளனும் அங்கீகரித்துச் சிரித்தார். அதன் பின் அந்த ஹூண்டாய் காரும் புறப்பட்டது. தயாளனும் பிணம் ஒதுங்கிக் கிடக்கும் பாறை நோக்கி நடந்தார். இருவரும் விலகிக்கொண்ட அதே இடத்தில் சீறிக்கொண்டு வந்து நின்றது ஒரு ஜீப்.

உள்ளே பிருத்வி, கண்ணன், ரகுவீர், ஜெகதீஷ் உள்ளே இருந்து யாரோ அவர்களைத் தூக்கி எறிகிறமாதிரி வெளியே வந்து விழுந்தார்கள்.

# 2

**கூ**டு விட்டு கூடு பாய்வது போல கூட காப்பதும் ஒரு அரிய செயல். அதிலும், ஒரு பருக்கை உணவில்லாமல் வெறும் காற்றாகவே சுவாசித்து ஜீவனை உடம்பில் துடிப்போடு வைத்திருக்க மனம் மிக ஒத்துழைக்க வேண்டும். மனதுக்கும் உடம்புக்கும் அப்படி ஒரு தொடர்பு இருக்கிறது. எவ்வளவு சோர்ந்த நிலையிலும் மனது துள்ளி எழ வைத்து விடும். உடம்பின் ஆதார சக்திகளை ஒருசேர தட்டி எழுப்பும் ஆற்றல் மனதுக்கு மட்டுமே உண்டு. இந்த மனது உடம்பில் எங்கிருக்கிறது? நெஞ்சுக்கூட்டுக்குள் இருக்கும் இதயத்திடமா.. இல்லை தலைக்கு பின்புறம் இருக்கிறதே மூளை.. அதனிடமா? எது மனது? ஐந்தாறு அடி உயர சரீரத்தில் அது எங்குதான் இருக்கிறது. மனம் வெறும் எண்ண அலைகளின் தொகுப்புதானே? அது எப்படி திட வடிவமான உடம்பின் சக்தி ஆதாரங்களை தட்டி எழுப்ப முடியும்? கேள்விகள் கிளைக்கின்றன. ஆனால்

மனம் என்பது பார்க்கும் இடமெங்கும் இருப்பதாக யோகிகள் கூறுகிறார்கள். எதிரில் ஒரு நண்பரைப் பார்க்கிறோம். அந்த நொடி நமது மனத்தின் வடிவம் அவர்தான். இப்படி மனதின் தன்மை பற்றி நாம் புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டால் உலகின் மற்ற விஷயங்கள் சுலபமாக புரியத் தொடங்கிவிடும். அதில் ஒன்று தான் நம் உடம்பு. நம்மோடு சதா இருந்து நம்மை தாங்கியபடி இருக்கும் உடம்புக்குள் இறைவன் பல அரிய சக்திகளை வைத்துத்தான் நம்மை இந்த பூமிக்கு அனுப்பியிருக்கிறான். அது என்ன என்று தெரிந்து அதை பயன்படுத்தக் கற்றுக்கொண்டு விட்டால் நம்மை மிஞ்ச ஆளே இல்லை. மனம் வசப்பட்ட நிலையில் 'நான் இறைவன் எனக்கு பசி, தூக்கம் இல்லை. இந்த பிரபஞ்சத்தின் எந்த சக்தியாலும் என்னை எதுவும் செய்ய முடியாது' என்று உறுதியாக நாம் நினைப்போமேயானால் உண்மையில் எதுவும் ஒருவரை எதுவும் செய்யாது. இப்படி ஒரு மனநிலைக்கு சென்றுவிட்ட பலர் ஆறேழு மாதங்கள் கூட ஒரு பருக்கை ஆகாரமும் இன்றி அமைதியாக இருக்கிறார்கள். இவர்களில் பலரை இப்பொழுதும் பொதிகை, மானஸ் பக்கம் சென்றால் பார்க்கலாம். இவர்கள் கூடு காப்பவர்களே! கூடு பாயத் தெரிந்தவர்களாக முடியும்.

நான்கு பேருக்கும் எதிரில் அருவி!

ஹோவென்று அதனிடம் இரைச்சல்.

பார்க்கப் பார்க்க அவர்களுக்குள் ஒரே குதூகலம். ரகுவீரிடம் அவனது காமிரா புத்தி உடனே வேலை செய்யத் தொடங்கிவிட்டது. மளமளவென்று ஜீப்பினுள் இருக்கும் அவனது ஹேண்ட்பேக்கில் இருந்து ஒரு சிறிய ஹேண்டி கேமராவை வெளியே எடுத்தான்.

அருவியைப் பார்த்து ஷூட் செய்ய ஆரம்பித்து விட்டான்.

உதட்டில் ஒரே பரவசக்கூச்சல்.

'ஜெகதீஷ்.. என்னா வாட்டர்டா... ஒண்டர்ஃபுல்.. பியூட்டிஃபுல்..'

'டேய்.. இப்ப இதை எடுத்து என்னப் பண்ணப்போறே, இதுக்கெல்லாம் எக்ஸைட் ஆகாதடா..' என்றான் ஜெகதீஷ் பதிலுக்கு.

நான்கு பேருமே ஏதோ பள்ளிக்கூட சிறுவர்கள் போல ஃபெர்முடாஸுக்குள் இருந்தார்கள். ஒரு சிகரெட்டையே மாறிமாறி புகைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஏதோ புதிய ஒரு உலகத்துக்கு வந்துவிட்ட மாதிரி ஒரு பரவசம் அவர்களிடம். காற்றும் சில்லென்று அதேசமயம் ஒரு சைக்கிளின் மிதமான வேக அளவுக்கு வீசிக் கொண்டிருந்தது. அப்பொழுது, 'சாமி.. புலிப்பல் வேணுமா

சாமி புலிப்பல்..’ என்று ஒரு மலைப்பளியன் அவர்கள் முன் சென்று நின்றான். அவன் இடது கையில் பாசிமணிகள். தோளுக்கு பின்னே ஒரு சிறு கூண்டு. அதில் தேவாங்கு ஒன்று. வலது கையில் பாடம் செய்த ஒரு நரியின் முகம். பார்க்கவே வித்தியாசமாக இருந்தான்.

ரகுவீருக்கு அவனையும் மிகப்பிடித்து விட்டது. காமிராவை அப்படியே அவன் முகம் நோக்கித் திருப்பினான். அவன் கூச்சமெடுத்தவன் போல முகத்தைக் கோணிக் கொண்டு சிரித்தான்.

‘உன் பேர் என்ன மேன்?’

‘பசுங்க..’

‘பசுவா... யூ மீன் கௌ?’

‘பசுவுங்க. அதுக்குமேல கேட்டா எனக்குத் தெரியாதுங்க.’

‘டேய்.. விட்றா.. இவங்கள்லாம் பின்ன என்ன அஜித், விஜய்னா வெச்சுக்குவாங்க?’ கண்ணனின் கேள்விக்கு பளியனிடம் இருந்து வேகமான பதில்.

‘சாமியோவ்... என்னா அப்படி சொல்லீட்டீங்க. என் பெரிய பையன் பேர் விஜயகுமார், சின்னவன் பேர் அஜித்குமாருங்கோ..’

அவன் பதில் நால்வரின் தலையிலும் நறுக்கென்று குட்டின மாதிரி இருந்தது.

‘ஆமா.. ஏதோ புலிப்பல்லுன்னு சொன்னியே.. எங்க?’

பிருத்வி கேட்க, அவனும் ஆவலாக தன் இடுப்பு வேட்டி மடிப்பில் இருந்த ஒரு சிறு மரப்பெட்டிபோல் ஒன்றை எடுத்து அதைத் திறந்தான். அதில் இரண்டு விளைந்தப் பற்கள். ஒருபுறம் கூர்மையாகவும், மறுமுனையில் பிடுங்கப்பட்டதற்கு அடையாளமாக கொஞ்சம்போல ரத்தத்திப்பியும் தெரிந்தது.

நன்கு கூர்மையான வளைந்த கோரைப் பற்கள். நிச்சயம் மேல் வரிசையில் கடவாயை ஒட்டித்தான் இருந்திருக்க வேண்டும். எத்தனை மிருகங்களின் சதையைப் கவ்விப் பிடித்து அதன் உயிரை துடிக்கத் துடிக்கக் கொன்று போட்டதோ? ஜெகதீஷ் பற்களைப் பார்த்தபடியே அப்படித்தான் நினைத்தான்.

‘ஆமா.. இது ஒரிஜினல் புலிப்பல்தானா?’

‘என்னா சாமி அப்படிச் சொல்லிட்டீங்க.. இன்னிக்கு காலைலதாங்க சாமி புடுங்கினேன்.’

அவன் பதிலால், அவர்கள் நெற்றியில் மீண்டும் வரிகள். கொஞ்சம் அதிர்ச்சியும் கூட.

‘யோவ்.. கதை உட்றியா?’ பிருத்தவி கைகளைப் பரபரப்பாக தேய்த்துக்கொண்டே கேட்டான்.

‘நான் ஏன் சாமி கதை உட்றேன். இது மேலகாட்டுல ஒரு புலியை பொறி வெச்சு மயக்கிப்பிடிச்சு அதுகிட்ட இருந்து புடுங்குன பல்லுங்க சாமி..’

‘அப்ப புலி எங்க?’

‘அதை பல்லை பிடுங்கிட்டு அனுப்பிடுவோம்.’

‘அடப்பாவிங்களா.. அதுக்கு அந்த புலியையே அப்படியே பிடிச்சு விக்கலாமேய்யா..’

‘அதெல்லாம் முடியாதுங்க சாமி. இப்பல்லாம் முன்ன மாதிரி கிடையாதுங்க. போலீஸ்காரங்க, பாரெஸ்ட்காரங்க தொந்தரவு தாங்கமுடியறதில்ல. எந்த பக்கம் எவ்வளவு புலிங்க இருக்குது.. எவ்வளவு யானைங்க இருக்குதுன்னு தினம் எண்ணிகிட்டே திரியறாங்க.. ஒரு மயில் பிடிக்கக் கூட முடியறதில்லீங்க..’ அவன் குரலில் அப்பட்டமான வருத்தம்.

‘சரிதான்.. இப்படி எண்ணிகிட்டு திரியும்போதே இப்படி பல்லை புடுங்கிகிட்டு வர்றியே.. இவங்கெல்லாம் எனக்கென்னன்னு இருந்தா ஒரு மிருகம்கூட மிஞ்சாது போல இருக்குதே.’

கண்ணனின் கேள்வி ஞாயத்தில் அந்த பளியன் சிரித்தான். ரகுவீரோ அந்த புலிப்பல்லை திருப்பிப் திருப்பி பார்த்துக் கொண்டிருந்தான்.

‘என்ன சார் பாக்கறீங்க… அசல் பல்லு சார். இது மட்டும் கைல இருந்தா ஒரு கெட்ட சக்தி கிட்ட வராதுங்கோ. உங்களுக்கு எதிரிங்கோ.. ரவுடிங்கோ தொந்தரவு இருந்தா அவ்வளவு பேரும் அப்படியே மடங்கிப் போயிடுவாங்கோ சார்..’

‘இது என்ன பல்லா.. இல்லை எதிரிகளை அடக்கற ஃபைட்டரா?’

‘புலிப்பல்லுன்னா சும்மாவா சார்.? அதுலையும்

உயிரோட இருக்கற புலியோட பல்லுன்னா அது சும்மா இல்ல சார்... ரொம்ப அபூர்வம்..'

'சரி.. என்ன விலை சொல்றே?'

'ஒரு பல்லு ஆயிரம் ரூபா சார்.. இரண்டு பல்லு இரண்டாயிரம் சார்..'

அவன் சொல்லி முடித்த நொடி பற்களை குறவனிடம் திரும்பத் தந்த ரகுவீர், 'ஏ அப்பா... நீ முதல்ல இடத்தை காலி பண்ணு.. ஒரு முழுப்புலியையே நீ இரண்டாயிரத்துக்கு கொடுத்தாலும் வாங்க யோசிப்போம். கேவலம் பல்லுக்கா இந்த விலை?'

'கேவலம் பல்லு இல்லை சார், இது அதிர்ஷ்டப் பல். வாங்கிப் பாருங்கோ தெரியும்.'

'இதுக்கு எதுக்குய்யா இரண்டாயிரம். நாங்களும் இந்த மலைக்காட்டை சுத்தி பார்க்கத்தான் வந்திருக்கோம். எங்க கண்ல ஒரு புலி படாதா என்ன? அப்ப அதுகிட்ட பல்லை பிடுங்கிகிட்டா போச்சு..'

'சார்.. வேணாம் சார்.. புலியை பிடிக்கறது ஒண்ணும் சாதாரண விஷயமில்ல சார்.. அதுக்கு மயக்க மருந்து தடவுனா முயல்கறி வேணும். அதை வெச்சுத்தான் பிடிக்க முடியும். அதெல்லாம் பெரிய வித்தை. நீங்க பாட்டுக்கும் போய் மாட்டிக்காதீங்க.'

அவன் எச்சரித்தான்.

'ஒரு ஆள் நீ... ஒரு புலியை பிடிச்சு பல் புடுங்குவே..

நாங்க நாலு பேர்.. எங்களால் முடியாதா?’

அவனுக்கு அந்த கேள்வி கோபத்தைத் தந்தது. முறைத்துப் பார்த்துவிட்டு திரும்பத் தொடங்கினான்.

ஜெகதீஷிற்குள் சட்டென்று ஒரு எண்ணம்

‘ஏய்.. ஏய்.. கொஞ்சம் இங்க வா!’ கூப்பிட்டான்.

அவனும் திரும்பி வந்தான்.

மற்ற மூவரும்கூட ஜெகதீஷை, போகிறவனை எதற்குக் கூப்பிட்டாய் என்கிறமாதிர பார்த்தார்கள்.

‘என்னா சார்... வேணுன்னா ஒரு நூறு ரூபா குறைச்சுக்க சார்..’ என்றான் அவன்.

‘பல்ல விடுய்யா.. ஆமா இந்த மலைக்காடு உனக்கு நல்ல பழக்கமா?’

‘எதுக்கு கேக்கறீங்க?’

‘அட சொல்லுய்யா...’

‘நல்ல பழக்கமுங்கோய்.. உச்சி வரைக்கும் தனியாகவே போய்ட்டு வருவேன்.. தெரிஞ்சுக்குங்க..’

‘ஆமா.. இந்த காட்டுல மிருகங்க மட்டும்தான் இருக்குதா.. இல்ல..’ ஜெகதீஷ் இழுத்த பிறகுதான் மற்ற மூன்று பேருக்கும் புரிந்தது.

‘டேய்.. பய பாய்ண்ட்டைப் பிடிக்கறான் பார்..’ என்று கண் சிமிட்டிக் கொண்டனர். அப்படியே மீண்டும் ஒரு

சிகரெட் மீண்டும் ஒரு வலம்.

‘ஆமா எதுக்கு கேக்கறீங்க?’

‘அது எதுக்கு உனக்கு.. என் கேள்விக்கு நீ பதில் சொல்’

‘என்ன சார் விஷயம்... கருங்குரங்கு ரத்தம் வேணுமா?’

‘கருங்குரங்கு ரத்தமா.. அது எதுக்குய்யா?’

‘அந்த குரங்கோட ரத்தமும் கறியும் ஆஸ்துமா இருந்தா ஒரு விரட்டு விரட்டிப்புடாது?’

‘ஆஸ்துமாவுக்கு கருங்குரங்கு ரத்தமா?’

‘ஆமா... நானே எத்தினி பேருக்கு குரங்கை பிடிச்சு அறுத்து ரத்தம் எடுத்து கொடுத்திருப்பேன் தெரியுமா?’

‘அடப்பாவி.. இப்படி எல்லாம்கூட பண்றீங்களா? ஆமா அதை குடிச்சா ஆஸ்த்துமா சரியாகுமா?’

‘அது யாருக்கு தெரியும்? கருங்குரங்கை பிடிச்சு தரச் சொல்லுவாங்க.. பிடிச்சுத் தருவோம். ஒரு குரங்குக்கு ரெண்டாயிரம்.’

‘எதை எடு உங்கிட்ட ரெண்டாயிரம்தானா?’

அவன் சிரித்தான். பிறகு, ‘காட்டுக்குள்ளாற வந்து பாருங்க சார்.. உசுருக்கு உத்தரவாதமே கிடையாதுங்க. அதுலையும் அட்டைப்பூச்சுங்ககிட்ட சிக்கினா அவ்வளவுதான்.’

‘ஜெகதீஷ்.. இப்ப எதுக்கு அந்த பேச்செல்லாம்.. எதுக்கு

குரங்கு ரத்தமும்.. நாமதான் இருக்கோமே..’

கண்ணன் விட் அடித்தான். மற்ற மூவரும் சிரித்தனர்.

ஆனால் அவனுக்கு விளங்கவில்லை.

‘சரிப்பா… நீ என் கேள்விக்கு பதில் சொல். இந்த காட்ல சாமியாருங்க இருக்காங்களா?’

‘ஓ… அவங்கள கேக்கறீங்களா?’ அவனிடம் ஒரு தளர்ந்த நிலை.

‘என்ன.. இருக்காங்களா?’

‘நிறைய பேர் இருக்காங்க சாமி.. ஆனா அப்பப்பதான் கண்ணுல படுவாங்க..’

‘ஏன் அப்படி?’

‘சாமியாருங்கன்னாலே அப்படித்தான்..’

‘அது சரி.. அவங்களுக்கு இந்த சிங்கம், புலி பயம்லாம் இல்லையா?’

‘அதெல்லாம் அவங்க முன்னால நாய் மாதிரி கிடக்கும் சாமி..’

‘அது எப்படி?’

‘யாருக்குத் தெரியும். நான் பாத்ததை சொல்றேன்.’

‘எங்களுக்கு காட்றியா?’

‘பார்த்து என்ன பண்ணப்போறீங்க சாமி.. உங்களுக்கு மூலிகை செடி எதாச்சும் வேணும்னா என்கிட்டையே

கேளுங்க. நான் புடுங்கிட்டு வந்து தரேன்.'

'ஒரு செடியும் வேண்டாம். நாங்க ஒரு சாமியாரைப் பார்க்கணும். அவர் கூடுவிட்டு கூடெல்லாம் பாய்வார்னு கேள்விப்பட்டுத்தான் வந்துருக்கோம்.'

'கூடு பாய்ச்சலா?' அவன் கேட்டுவிட்டு அப்படியே வாயைப் பிளந்தான்.

'ஆமாம்... அந்த சாமியாரை உனக்கு தெரியுமா? அவரைத்தான் நாங்க பார்க்கணும். உனக்கு ரெண்டாயிர்ம இல்ல... பல ஆயிரம் தரோம், என்ன சொல்றே?'

நான்கு பேரும் கோரஸாகச் சொன்னார்கள்.

'சாமீ... வேணாம் சாமீ... கூடுபாயற சாமிபத்தி மட்டும் எதுவும் பேசாதீங்க. கோடி ரூபா தந்தாலும் எனக்கு அவரைப்பத்தி தெரியாது சாமீ. ஆளை விடுங்க. வரேன்.' அவன் திரும்பி ஓடினான்.

'இந்தாப்பா நில்லு.. அட நில்லுன்னா..'

அவர்கள் கத்துவதை காதில்கூட வாங்காமல் அவன் ஓடி மறைந்தே போனான்.

அவர்களுக்குள் வியப்பு. கூடவே க்யூரியாசிட்டியின் அதிகரிப்பு.

நால்வருமே ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அந்த சாமியாரிடம் நிச்சயம் ஏதோ ஒன்று இருக்கிறது.

# 3

*ஒரு உயிரின் வாழ்க்கை என்பது இரண்டுவிதமானது. ஒன்று மனதின் வாழ்க்கை. உடம்பு தான்வாழவும் நொடிக்குநொடி தன்னுள் அழியும் செல்களை புதுப்பித்துக் கொள்ளவும் அது சதா முயன்று கொண்டேயிருக்கிறது. அதற்காக அது தண்ணீர் குடிக்கிறது. உணவு உண்கிறது. வியாதி வந்தால் மருந்து சாப்பிடுகிறது. வலித்தால் அழுகிறது. இனித்தால் சிரிக்கிறது. இதை எல்லாம் அது மனதைக்கொண்டு சாதித்துக் கொள்கிறது. உடம்பு கேட்டதை கொடுத்துவிட்டு மனது வேறு பல விஷயங்களுக்காக ஏங்குகிறது. கவலைப்படுகிறது. பட்டம் பதவிக்கு ஆசைப்படுதல். பெரிய பணக்காரனாக முயலுதல். ஆட்டிப்படைக்க விரும்புதல் என்று அதன் வாழ்க்கை ஒரு தனி ரகம். இந்த மனதில் அச்சமும் ஆத்திரம் குடி கொண்டாலோ கேட்கவே வேண்டாம். நிம்மதியே போய்விடும். மனம் ஒரு அளவுக்குமேல் நிம்மதியற்றுப் போய்விட்டால் துக்கம் தாளாமல் தற்கொலைக்கு துணிந்து உடம்பையே உதறி எறியத்தயாராகி வருவதைப் பார்க்கிறோம். இதனால் உடம்பின் சுகத்தைவிட மனதின் நிம்மதியே பெரிதென்பது விளங்கும். ஒரு*

*உயிருக்குள் இப்படி இரட்டை விஷயம் இருப்பதை யாரும் மறுக்க இயலாது. இந்த இரண்டின் வாழ்க்கையில் மனம் நிம்மதியாய் வாழ உடம்பு ஒத்துழைக்க வேண்டும் என்பது மிக முக்கியம். அதே சமயம் உடம்பில் எவ்வளவுதான் நோய் நொடி அல்லது எதிரிகளால் துன்பம் நேரிட்டாலும் அப்பொழுது அதை சகித்துக் கொண்டு மனதால் நிமிர்ந்து நிற்பவர்களும் பலர் உண்டு. இவைகளை எல்லாம் வைத்துப் பார்க்கையில் உடம்பு மனது இரண்டில் மனதே உயர்ந்து நிற்கிறது.*

*மனது நினைத்தால் உடம்பை ஆட்டிவைக்க முடியும் என்பதும் புலனாகிறது. ஆனால் என்னதான் முயன்றாலும் உடம்பால் மனதை ஒரு எல்லைக்கு மேல் திருப்திப்படுத்த முடிவதில்லை. எனவே, வல்லமை பொருந்திய மனது, உடம்பை ஆட்டிப்படைப்பத்தான் மோகம் என்கிறோம். எதையும் ஆட்டிப்படைக்கும் முன் அதைப்பற்றிய நுண்ணறிவு மிக முக்கியம். அதாவது உடம்பை ஆட்டிப் படைக்க விரும்பும் மனதுக்கு உடம்பைப் பற்றிய ஞானம் மிக முக்கியம். இந்த உடம்பு எப்படிப்பட்டது. எப்படி இயங்குகிறது? இதன் அடிப்படை ஆதாரம் எது? இந்த கேள்விகளால் உடம்பைப்பற்றி அறிய முயலும் போது ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.*

அவர்கள் நான்கு பேரும் ஜிப்ஸி ஜீப்பில்தான் வந்திருந்தனர். வாடகை ஜீப்!

டிரைவரை தவிர்த்து விட்டனர்.

காரையார் மலையில் ஒரு ஆராய்ச்சிப்பணி என்று சொல்லவும் பல டிரைவர்கள் மிடறுகட்டினார்கள். அந்தக் காட்டில் உங்களுக்கு என்ன வேலை. அங்கே ஆராய என்ன இருக்கிறது என்றெல்லாம் கேட்டுவிட்டு பெரிய கும்பிடாக போட்டுவிட்டார்கள்.

சரி என்று, அவர்களே ஜீப்பை வாடகைக்கு வாங்கிக் கொண்டு வந்துவிட்டார்கள்.

வந்த இடத்திலிருந்து டெல்லியில் உள்ள ஒருவருடன் தொடர்பு கொண்டு செல்ஃபோனிலேயே பேச ஆரம்பித்து விட்டான் ரகுவீர்.

'ஜி... இதுவரை உலகத்துல யாரும் இப்படி ஒரு ரியல் ஆச்சுவல் ஃபிலிமை எடுத்துருக்க மாட்டாங்க. நாங்க எடுத்துருக்கோம். இண்டியன் மித்தாலஜியை பத்தி எங்களுக்குள்ளேயே ஒரு கேலி இருந்தது. கிண்டல் இருந்தது. அதெல்லாம் கப்ஸா, காதுல பூங்கறமாதிரிதான் நினைச்சிகிட்டிருந்தோம். ஆனா,ஒரு எக்ஸ்பீரியன்ஸ் எங்களை டோட்டலா மாத்திடிச்சி. எங்க எக்ஸ்பீரியன்ஸை எலாபரேட்டா ஃபிலிமா பண்ணத்தான் காரையார் மலைக்காட்டுக்கு வந்திருக்கோம்.

எங்க முயற்சி மட்டும் சக்ஸஸ் ஆயிட்டா வித் இன் எ

அவர்ல நாங்க உலக அளவுல பாப்புலர் ஆயிடுவோம். அப்புறமா மீடியா பூரா எங்களைப்பத்திதான் பேசிகிட்டிருக்கும்.

ஒரு கட்சித்தலைவர் லஞ்சப்பணம் வாங்கினதை ஷூட் பண்ணி அதை டெலிகாஸ்ட் பண்ணி அதை ஒரு பெரிய சாதனையா ஃபோகஸ் பண்ணவங்கெல்லாம் எங்க முயற்சி முன்னால மண்டிபோட்டு நாக்கால நக்கி தண்ணி குடிக்கணும்.'

ரகுவீர் கித்தாப்பு காட்டிக் கொண்டிருந்தான். மற்ற மூவருக்குமேகூட அவனது பீத்தல் எரிச்சலை தந்தது. ஜெகதீஷ் எழுந்துபோய் வெடுக்கென்று அவன் பேசிக்கொண்டிருந்த செல்ஃபோனைப் பிடுங்கி,

'ஜீ... வீ வில் டாக் லேட்டர்' என்று ஆஃப் செய்தான். ரகுவீர் பார்வையாலேயே சுட்டான்.

'என்னடா பாக்கறே.. இன்னும் ஒழுங்கா பிள்ளையார் சுழிகூட போடலை. அதுக்குள்ளே காரியமே முடிஞ்சுட்ட மாதிரி போன் பண்றியேடா நீ'

ஜெகதீஷ் கண்டித்தான்.

'இல்லையா பின்னே.. காரியத்தை முடிக்கறதுக்கு முந்தியே அதைப்பத்தி பெருசா பீலா உட்ற.. ஆபத்து தெரியுமா?'

'என்ன ஆயிடும்?'

'சென்டிமெண்டலா சொல்லப்போனா உருப்படாம

போயிடும்.’

‘நத்திங் டூயிங்.. இந்த சென்டிமென்ட் எல்லாம் என்கிட்டே கிடையாது. அதெல்லாம் சும்மா கப்ஸா...’

‘நாம இந்த மாதிரி நிறைய விஷயங்களை கப்ஸான்னு சொல்லியிருக்கோம். பர்ட்டிகுலரா ஆவி, பேய், பிசாசு இதெல்லாம் மனுஷனோட சூப்பரான கற்பனைங்கறதுதான் நம்ம எண்ணமா இருந்தது. ஆனா இப்ப நம்மால அப்படி எல்லாம் நினைக்க முடியுமா?’

‘அது.. அது..’

‘பொத்து... இனிமே பீலா விடாதே.. நாம ரொம்ப பொறுமையாவும் ஜாக்கிரதையாவும் இனிமே நடந்துக்கணும்.’

‘என்னடா கண்ணா.. இப்ப நாம எங்க தப்பா அவசரப்பட்டு நடந்துட்டோம்.’

‘நோ ரகுவீர்.. நாம இதுவரை எப்படி இருந்தோம்கறதே விஷயமில்ல. இனி இப்படிதான் இருக்கணும்னு சொன்னேன். நான் சொல்றத சரியா புரிஞ்சிக்கப்பார்..’

கண்ணன் மிகுந்த பொறுப்பானவன் போலவும், ஒரு லீடரைப்போலவும் மாறி, பரபரப்பாக செயல்பட்ட ரகுவீரை அடக்கினான்.

இடையில் ஜெகதீஷின் முகத்தில் மட்டும் ஏதோ இனம்புரியாத சலனம்.

‘என்ன ஜெகதீஷ்?’

‘இல்ல.. அந்த சுடுகாட்டுல அன்னிக்கு ஷூட் பண்ண அந்த கேசட்டை நான் நம்ம ஃபிலிம் சென்டருக்கு அனுப்பியிருக்கேன். அங்க அதைப்பார்த்துட்டு என்ன பண்ணிட்டிருப்பாங்கன்னுதான் யோசிக்கறேன்.’

‘அடப்பாவி.. யாரைக்கேட்டுடா அதை அனுப்பிச்சே?’

‘ஏண்டா.. நமக்கு ஒர நல்ல ப்ரமோஷன் கிடைக்கும்னு நினைச்சுதான் அனுப்பினேன்.’

‘ஃபூல்டா நீ.. அவங்கபாட்டும் டெலிகாஸ்ட் பண்ணி பரபரப்பை ஏற்படுத்தினா இங்க நம்ம காரியம் கெட்டுப் போயிடும்டா.’

‘எப்படி?’

‘இந்த மாதிரி மித் சீக்ரஸி எல்லாம் எப்பவுமே பகிரங்கமானதே கிடையாது. அப்படி ஆனா அவ்வளவுதான்.’

‘அவ்வளவுதான்னா?’

‘ஒண்ணு அது பொய்யின்னு யாரும் நம்பாம போயிடுவாங்க.. இல்லாட்டி அதை ஷூட் பண்ண நாம அதைப்பத்தி சிந்திக்கக்கூட முடியாதபடி ஆயிடுவோம்.’

‘நீ சொல்றதே எனக்கு புரியல...’

‘உனக்கு புரியாது. நான் முதல்ல நம்ம ஃபிலிம்சென்டருக்கு போன் பண்ணி அது உண்மையான படம் கிடையாது. எல்லாம் கிராஃபிக்ஸ்னு சொல்லி

நிறுத்தறேன். இல்லாட்டி இந்த மலைல நாம மட்டும் இல்ல, நம்மளப்போல பலர் கேமராவை தூக்கிக்கிட்டு வந்து அந்த கூடுவிட்டு கூடுபாயற சாமியாரை தேட ஆரம்பிச்சிடுவாங்க.'

'ஓ... இப்படி எல்லாம்கூட சைட் எஃபெக்ட் ஏற்படும்னு நான் யோசிக்காம போய்ட்டேனே..'ரகுவீர் பரிதாபமாக நெற்றியைப் போட்டுத் தேய்த்துக் கொண்டான்.

அப்படியே ஜீப்பை ஓரம் கட்டிவிட்டு நடந்தார்கள். பொதுபொதுவென கொட்டும் அகத்தியர் அருவி ஒர பால் கொட்டாரமாட்டம்தான் இருந்தது.சென்னையில் மழைத்தூறல் என்பதே அரிதாகிவிட்டது. சேர்ந்தாற்போல ஒரு அரைமணிநேரம் மழை பெய்தால் அது அமெரிக்க ஜனாதிபதி விஜயம் அளவு முக்கியத்துவம் பெற்று விடுகிறது. யாராவது யாருக்காவது போன் செய்து பேசும்போது கூட அந்த மழைப்பற்றி எல்லாம் பேசி மகிழும் அளவுக்கு போய்விட்ட ஒரு ஊரிலிருந்து வந்திருப்பவர்களுக்கு அந்த அருவியை பார்க்க பார்க்க ஆனந்தம் பீறிட்டுக்கொண்டு கிளம்பியது.

திபுதிபுவென்று ஓடினார்கள்.அருவியிலும் அவ்வளவாய் கூட்டம் இல்லை.

ஆனால் அந்த தாடிக்கார மனிதர் இருந்தார்.

அதுவும் எப்படி தெரியுமா?

ஆடாமல் அசையாமல் ஒரு சிலையைப்போல....

# 4

இந்த உடம்பின் ஆதிமூலமான விஷயத்தைப்பற்றி யோசிக்கும்போது படு பிரமிப்பாக இருக்கிறது. ஒரு பேனா முனையால் ஒரு புள்ளி வைத்தால் அது எந்த அளவு இருக்கும். அந்த அளவுக்குள் இருந்து உருண்டு புரண்டு எழுந்தவர்கள்தான் நாம். ஆண்விந்து ஒரு புள்ளியளவு. அது கூட அதிகம். அரைப்புள்ளியளவு. பெண்விந்து ஒரு அரைப்புள்ளியளவு. இரண்டும் கலந்து ஒரு முழுப்புள்ளியளவு கருப்பைக்குள் செல்கிறது. அவ்வளவுதான் ஆரம்பமாகிவிடுகிறது அதன் உருவ வளர்ச்சி. கடுகளவுகூட இல்லாத ஆலமரத்து விதை அதன்பின் ஒரு ஊரளவுகூட பெரிதாக வளருகிறதல்லவா? அப்படித்தான் நமது தொடக்கமும். திடமா.. திரவமா.. இல்லை இரண்டும் கலந்து ஒருவகை குழம்பா.. எது நமது தொடக்கம் என்பதில் ஆரம்பமாகிறது குழப்பம். அதன்பின் கருவின் வளர்ச்சியை விஞ்ஞானம் மைக்ரான் சுத்தமாக படமே எடுத்துவிட்டது. ஜோதிட சாஸ்திரப்படி மூன்றாம் மாதம் ஓரளவு வளர்ந்துவிட்ட உடற்பிண்டத்துக்குள் ஆத்மா என்னும் உயிர் நுழைய அது சுயமாக அசைந்து இயங்கத் தொடங்குகிறது. இதிலிருந்து ஒன்று

***புலனாகிறது. ஆத்மாவுக்கு அதன் செயலாக்கத்திற்கு ஒரு உடம்பு தேவை என்பதே அது. அன்னையின் கருப்பைக்குள், பிண்டத்துக்குள் ஆன்மா நுழைவதேகூட கூடுபுகுதல்தான். இங்கே இதை அந்த ஆன்மாவனது எப்படி செயல்படுத்துகிறது என்பது முதலில் தெரியவேண்டும். அது தெரிந்தால் அது புரிந்துவிட்டால் அதன் பின் ஆத்மாவை வேறு பிண்டங்களுக்குள் எப்படிப் புகுத்தி அதை இயக்கலாம் என்பதுவரை தெளிவாகிவிடும். இதற்கும் கூட நமது உடம்பைப் பற்றிய ஞானம் மிக அவசியம். எது நமது உடம்பு?***

கதிர் டிவியின் செய்திப்பிரிவு பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

ஹெட்போனும் காதுமாய் கண்களை அலட்டிக்கொண்டு அமர்ந்திருந்தாள் விமலா.

இன்டர்நெட்டில் கண்களையே வலையாக வீசி அன்றைய செய்திகளை பரபரப்போடு பொறுக்கிக் கொண்டிருந்தாள் பத்மினி.

செல்போன் வழியே டெல்லி பார்லிமென்ட்டின் சிறிய அசைவுகளைக்கூட ஒருவன் சொல்லிக் கொண்டிருக்க அதைக்கேட்டு ‘உம்’ கொட்டிக்கொண்டிருந்தான் சீஃப் ரிப்போர்ட்டர் டொமினிக்.

ஆசரியர் குழு ஒரு வட்டமேஜைமுன் உட்கார்ந்திருந்தது.

அதில் அரசியலுக்கு ஒருவர். விளையாட்டுக்கு ஒருவர், பொதுச்செய்திகளுக்கு ஒருவர் என்று பிரிந்து அமர்ந்திருக்க, அவர்களுக்கு முன்னால் ஃபாக்ஸ் செய்யபட்ட தகவல்கள். ஈமெயிலில் தட்டி எடுத்தவை, எழுதி வைத்திருப்பவை என்று பலதரப்பட்ட செய்திகள்.

அவைகளைப்பார்த்து அதில் தங்கள் தேவைக்குரியதை பிரித்து எடுத்த அதையும் தங்கள் பாணியில் சொல்லும் விதமாக மாற்றி எழுதும் பணி நடந்து கொண்டிருந்தது.

அந்த அறையின் டிஜிட்டலில் மணி பதினொன்று! மதியச் செய்திக்குத்தான் அவர்கள் முட்டி மோதிக் கொண்டிருந்தார்கள்.

அதே நேரத்தில் ஏழு சேனல்களில் செய்திகள் வெளியாகின்றன. இருந்தாலும் கதிர் டி.வியிடம் ஒரு தனித்தன்மை இருந்தது. செய்திகளை விஷுவலாக கூறுவதில் அதை அடிக்க ஆள் கிடையாது. இதில் தினம் ஒரு புதிய ஷாக்கடிக்கும் விஷயமும் உண்டு.

ஹாட்பேக் என்று அந்த பகுதிக்கு பெயர்.

அதில் அவ்வளவு சுலபத்தில் கண்ணால் பார்க்க முடியாததை யாருக்கும் தெரியாதபடி படம் எடுத்து செய்தியோடு காட்டுவதுதான் கதிர் டிவியின் ஸ்பெஷாலிடி.

இதனால் பல அலுவலங்களில்கூட ட்யூட்டி டயத்துக்கு நடுவில் டி.வியை வைத்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நேற்றைய ஹாட்பேக்கில் ஒரு ஆர்.டி.ஓ அதிகாரி ஒரு

லாரி பர்மிட்டுக்காக பத்தாயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கியதை அப்படியே கேமராவில் வாரிச் சுருட்டிவிட்டார்கள். டி.வியில் தங்கள் மூலம் மதிய வேளையில் ஒளிபரப்பாகப்போவது லஞ்சம் கொடுத்தவருக்கும் தெரியாது. வாங்கினவருக்கும் தெரியாது.

ஒரு கொடுமை. அந்த ஆர்.டி.ஓ வே மதியம் இன்று ஹாட்பேக்கில் என்ன அதிர்ச்சியான விஷயம் என்று பார்த்துக் கொண்டிருந்ததுதான். அதில் அவரது முகமே தெரியவும் மனிதர் இருண்டு போய்விட்டார்.

மொத்த தமிழ்நாடே கதிகலங்கிப்போய் கிடக்கிறது. தப்பு என்று தெரிந்து செய்கிறவர்கள் சுற்றிச்சுற்றி பார்த்துக் கொள்வது ஒரு வழக்கமாகவே போய்விட்டது.

சின்ன வீடுகளுக்கு செல்லும் அரசியல்வாதகள் தற்காலிகமாக சின்ன வீடுகளை வெளியூர்களுக்கு டூர் அனுப்பிவிட்டார்கள்.

கதிர் டி.வி ஆபீசுக்கே வெடிகுண்டு வைத்துவிடலாமா என்றெல்லாம் யோசிக்கும் அளவிற்க்கு அந்தப் பகுதி அவ்வளவு பாப்புலர்.

அத்தனைக்கத்தனை செய்திப்பிரிவுக்கும் அந்த பகுதிதான் தலைவலியான பகுதி. ஒவ்வொரு நாளும் அதிர்ச்சிக்கும், ஆச்சரியத்துக்கும் உரிய செய்திக்காக அவர்கள் படும்பாடு கொஞ்சநஞ்சமில்லை. வண்டலூர் ஜூவில் ஒரு புலிகுட்டி போடப்போவதை உத்தேசித்து காமிராவுடன் ஒரு டீம் போய்விட்டது. அப்படியே குட்டி

வெளியே வந்து விழும்வரை ஷூட் செய்து வரவேண்டும். ஆனால் புலிக்கு பிரசவ வலி எடுத்தால்தானே?

அவர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள்.

இன்னொர பக்கம் நடிகை ஒருத்தி. நடிகர் ஒருவரோடு ஓடிப்போய் திருப்பதியில் வைத்து கல்யாணம் செய்து கொள்ள இருக்கிறாள். அவள் பின்னாலேயே ரகசியமாக ஒரு குழு அலைந்து கொண்டிருக்கிறது.

உருப்படியாக ஒரு விஷயமும் வந்தபாடில்லை.

இந்த நிலையில் சீஃப் எடிட்டரிடம் இருந்து இண்டர்காமில் அழைப்பு.

ஓடிப்போய் காதைக் கொடுத்தான் டொமினிக்.

‘டொமினிக்’

‘யெஸ் சார்..’

‘என்னப்பா இன்னிக்கு ஹாட்பேக் மேட்டர் ரெடியா?’

‘நோ சார்.. புலி இன்னிக்கு குட்டி போடாதாம். அந்த நடிகையும் இந்த நிமிஷம் வரை திருப்பதிக்கு போகலை. கரப்ஷன்லயும் யாரும் மாட்டலை. ஆனா ஒரு விஷயம் இருக்கு சார்..’

‘என்னப்பா’

‘நேற்று திருவண்ணாமலைக்கு பக்கத்துல ஒரு கிராமத்துல ஒரு பொதுக்கூட்டத்துல ஒரு பேச்சாளர் பச்சை பச்சையா பேசியிருக்காரு. அவ்வளவும் பயங்கர டேரிங்கா

இருக்கு. அதை இன்னிக்கு தட்டிவிடலாமா சார்..’

‘அட போய்யா.. தினமும் நூத்தி அறுபது பொதுக்கூட்டம் நடக்குது. அதுல நூத்தி ஐம்பது பச்சைப் பேச்சுதான்யா, அதை எல்லாம் ஹாட்பேக்குல போட்டா ஜனங்க கல்லாலையே அடிப்பாங்க.’

‘அப்ப என்ன சார் பண்றது?’

‘நம்ம டெல்லி ரிப்போர்ட்டரை பிடி.. அவன் தன்கிட்ட ஒரு மேட்டர் இருக்குன்னான். அது என்னன்னு பார்ப்போம்.’

‘யெஸ் சார்..’

சீஃப்ரிப்போர்ட்டர் டொமினிக் சீப் எடிட்டரிடம் இருந்து தற்காலிகமாக தப்பித்து டெல்லிக்கு டயல் செய்தான்.

மறுமுனையில் டெல்லி செய்தியாளன் நரேஷ் சின்கா.

‘நரேஷ்’

‘யெஸ் ஸ்பீக்கிங்.’

‘ஸ்பீக்காதே.. ஹாட்பேக்குக்கு மேட்டர் வெச்சிருக்கியா.. முதல்ல சொல்..’

‘ஆமா டொமினிக். மேட்டரை கேட்டா அசந்து போயிடுவே.’

‘ஹாட்பேக் மேட்டர்னாலே அசந்துதான்யா போகணும். அதுதானே இந்தப் பகுதிக்கு சிறப்பே. சரி.. சரி.. என்ன விஷயம் செல்.’

‘இங்க வேர்ல்ட் ஃபிலிம் சென்டர் ஒண்ணு இருக்கு. அதிசயமான விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி பண்ணி விஷுவலா அதை காட்றதுலா கில்லாடிங்க. அவ்வளவும் ஃபாரீன் மணி. ஆகையால குரூப் குரூப்பா நிறையபேர் நிறைய விஷயங்கள் ஷூட் பண்ணிகிட்டு வந்து தர்றாங்க.’

‘ஸ்ட்ரெயிட்டா விஷயத்துக்கு வா... அதுல எதாவது ஹாட்பேக்குக்கு சூட் ஆகுமா?’

‘ஆகுமாவா.. இதுதான்பா மேட்டரே! நான் அந்த பக்கம் போனப்போ டீவில ஓடிக்கிட்டிருந்தது பார்த்து வாயைப் பொளந்துட்டேன்.’

‘என்ன விஷயம் அது?’

‘செத்துப்போன ஒரு பொணம் உயிரோட எழுந்திருக்குது.’

‘என்ன கிராஃபிக்ஸ்ல எவனாவது காது குத்திட்டானா?’

‘இல்ல.. சத்யமா கிராஃபிக்ஸ் இல்ல. உங்க ஊர் மேட்டர்தான். மதுரைல ஒரு சுடுகாட்ல ஒரு குரூப் டோரா போட்டு தைரியமா ஷூட் பண்ணியிருக்காங்க. ஒரு ஆக்சிடென்ட்டான டெட்பாடி. அதை புதைச்சிட்டாங்க அதை தோண்டி எடுத்து வெளிய போட்டு அதுக்குள்ள ஒருத்தன் நுழையறான். கூடுவிட்டு கூடுபாயறதுன்னு விக்கிரமாதித்தன் கதைல்லாம் வருமே.. அந்த மாதிரி சமாச்சாரம்.’

‘என்ன நரேஷ்.. இன்னிக்கு என் காதுல பூ சுத்தறதா யார்கிட்டையாவது பந்தயம் கட்டியிருக்கியா?’

‘ஃபூல்.. அப்படின்னா நானேல்ல உனக்கு போன் பண்ணியிருப்பேன். இது உங்க ஊர் மித்துப்பா.. ஃபிலிம் சென்டரே அப்படியே அசந்துபோய் உட்காந்துகிட்டிருக்குது.’

‘சரி.. அந்த கேசட்டை ஹாட்பேக்குக்கு எப்படி த்ரூ பண்ணுவே..?’

‘டோண்ட் ஒர்ரி.. அங்க இருக்கறவங்கல்ல ஒருத்தனுக்கு அடிக்கடி பணப்பசி எடுக்கும். பர்சை திறந்துட்டா போதும். அந்த ஃபிலிம் சென்டரையேகூட எழுதிக் கொடுத்துடுவான்.’

‘அப்ப முதல்ல கேசட்டை ஃப்ளைட் மூலம் த்ரூ பண்ணு. நான் வெட்ய் பண்ணிகிட்டே இருப்பேன்.’

‘அவன் தவுசன்ஸ் கேப்பான். பரவால்லையா?’

‘ஏய்.. ஹாட்பேக் மேட்டர் ஒண்ணுக்கு பத்துலட்சம்லாம் கொடுத்துருக்கோம் தெரியுமா? நமக்கு நம்ம சேனலோட சக்சஸூம் பேரும்தான் பெருசு...’

டொமினிக் வீராப்பாக பேசியபடி கட் செய்தான். அப்படியே இன்டர்காமில் அன்சாட் ரிசீவரை கூப்பிட்டு நரேஷ் அனுப்ப உள்ள செய்திப்படம் பற்றி கூறி தயாராக இருக்கச் சொன்னான். அதன்பின் சீஃப் எடிட்டருக்கு போன் செய்தான்.

‘சார்.. ஹாட்பேக்குக்கு ஒரு வித்தியாசமான விஷயம் ரெடி!’

‘என்ன அது?’

‘செத்தவர் பிழைத்தார்.. கூடுவிட்டு கூடுபாயலாம். நம்முடைய சித்தர்கள் பற்றிய புராண தகவல்கள் உண்மை.’

‘என்னய்யா.. ஹெட்லைன் நியூஸாட்டம் சொல்றே.. யாரு கூடுவிட்டு கூடு பாய்ஞ்சது?’

‘ஒரு ஒன் அவர் வெயிட் பண்ணுங்க சார்.. இப்பதான் டீல் ஆரம்பமாகியிருக்கு. எதுக்கும் கடவுளை கும்பிட்டுக்குங்க. ஏன்னா, பழம் பாதித்தான் பழுத்திருக்கு. முழுசா பழுக்கணும்.’

‘பாத்தியா.. முடிச்சுட்டு சொல்லாம.. பாதில டபாய்க்கறே..’

‘டபாய்க்கல.. இதுதான் நிலைமை. அதான் சொன்னேன்.’

‘கூடுவிட்டு கூடுபாயறதுங்கறே.. எவனாவது மோடிமஸ்தானோட கண்கட்டு வித்தையா இருக்கப் போகுது.’

‘அதெல்லாம் நான் கேட்காம இருப்பேனா? டெல்லி வேர்ல்ட் ஃபிலிம் சென்டர்காரங்க என்ன அவ்வளவு தூரத்துக்கு அண்டா பார்ட்டிங்களா என்ன?’

‘ஓ.. ஃபிலிம் சென்டர் ரிசர்ச் மேட்டரா?’

‘ஆமாம்.. அதுலையும் பர்ட்டிகுலரா நம்ம ஊர் மேட்டர்.’

‘எந்த ஊர்ல நடந்த மேட்டராம்?’

‘நமக்குதான் அது மேட்டர். மத்தபடி அது அபூர்வ சம்பவம். பொறுமையா இருங்க. கொஞ்ச நேரத்துல

தெரிஞ்சிடும்.’

டொமினிக் சீஃப் எடிட்டரையும் தற்காலிகமாக காக்க வைத்துவிட்டு டெல்லி விமானத்துக்காக காத்திருக்க ஆரம்பித்தான்.

# 5

*உடம்பாகிய விஞ்ஞானப் பார்வையே வேறு. நமது உடம்பு விட்டமின் சக்திப் பொருள்களால் இயங்குகிறது என்கிறது அது. கண்ணுக்கு விட்டமின் ஏ வும் தலைமுடிக்கு புரோட்டீனும் பற்கள் எலும்புகளுக்கு என்று பிரத்யேக சக்தியும் தேவைப்படுவதாகவும் அதை உணவுப் பொருள்களில் இருந்து கணையமானது அழகாய் பிரித்து எடுத்து சேமித்து வைத்துக்கொள்கிறது என்கிறது அது. அதுமட்டுமல்ல. உடம்பில் உள்ள எல்லா உறுப்புகளுக்கும் அது பெயரிட்டிருக்கிறது. இதயம், சிறுநீரகம், கல்லீரல், சிறுகுடல், பெருங்குடல், சுரப்பிகள், ஸ்பைனல் கார்ட் சிஸ்டம், என்றும் முதுகெலும்பு, மூட்டு எலும்பு, விரல்கள், நகங்கள், உள்ளே நரம்புகள், இதில் ரத்தக்குழாய்களின் நீளம் மட்டும் பலநூறு கிலோ மீட்டர்கள் இருபது லிட்டருக்கு குறையாத ரத்தம்*

என்று நமது உடம்பைப்பற்றிய தகவல்களை அது அள்ளி அள்ளி வழங்குகிறது. நம்முடைய உறுப்புகளை நாமே ஒரு டிவி திரையிலும் பார்க்கலாம். சதா ஒரு தண்ணீர் மோட்டார் போல இதயம் ரத்தத்தை பம்ப் செய்வதில் இருந்து அனைத்தையும் நாம் பார்க்கலாம். விஞ்ஞான மருத்துவம் இன்று எங்கேயோ போய் விட்டது.

இதே உடம்பைப் பற்றிய சித்தர்களின் பார்வையே வேறு. 'காயமே இது பொய்யடா.. வெறும் காற்றடைத்த பையடா.. என்கின்றனர். எந்த உணவுப் பொருளும் இன்றி அதன் விட்டமின் தயவுகளும் இன்றி காற்றை மட்டுமே சுவாசித்து ஜீவிக்கலாம் என்கின்றனர். ஜீவித்தும் காட்டுகின்றனர். பிராணாயாமம் ஒன்று போதும். காற்றிலே தான் எல்லாமே இருக்கிறது என்கின்றனர் இவர்கள். பௌதிக விதிப்படி உடலானது திடப்பொருளாகும். இது நீரில் மூழ்கி விடக்கூடியது. மூச்சற்றுப் போனபிறகே இது நீரில் மிதக்கும். ஆனால் அதையே மாற்றி உயிருடன் நீரில் மிதப்பது, அந்தரத்தில் மிதப்பது என்று பல சாகசங்களை இவர்கள் செய்யும்போது, விஞ்ஞானம் அதை எல்லாம் 'தந்திரம்' என்று சொல்லி வேடிக்கைதான் பார்க்கிறது. இல்லையில்லை.. இது தந்திரமே இல்லை. மூச்சுதான் உடம்போடு புறத்தில் இருந்து

***கொள்ளும் தொடர்பு. அதுதான் பிராணன். அந்த பிராணன் உடம்பின் அவ்வளவு நாடிகளிலும் இயங்கியபடி உள்ளது. அதை ஒருமுகமாக கட்டி இதயத்திற்கு இட்டுச்சென்று அங்குள்ள சூட்சும நாடியை அடைந்து அங்கிருந்து மெல்ல நழுவக்கற்றுக் கொள்வதே ஒரு மனிதன் தன் உடலைவிட்டு வெளியேறும் செயல்பாடாகும். இதை உணர முதலில் யோகப்பயிற்சி புரிய வேண்டும். யோகத்தால் உடம்பு சொற்படி கேட்கத் தொடங்கும். அப்பொழுது புரியும் என்கிறார்கள் சித்தர்கள். அப்பொழுது மட்டும் புரியுமா? இப்பொழுது ஏன் அது புரியவில்லை முடியாததாகவே உள்ளதே?***

கொட்டும் அருவிக்குள் சிலைபோல நிற்கும் அந்த மனிதரைப் பார்த்து நான்கு பேருமே விதிர்த்துவிட்டனர்.

ஒரு வினாடி அவர் உண்மையில் மனிதர்தானா இல்லை ஏதாவது சிலையா என்றெல்லாம் சந்தேகம்கூட அவர்களுக்கு ஏற்பட்டது. 'பதறாதீர்கள்.. நான் மனிதன்தான்' என்கிற மாதிரி அவரும் கண்களைத் திறந்தார். அப்படியே வாயை கொப்புளித்தார். பின் விரல்களை வாயினுள் விட்டு பல் விளக்குவதுபோல ஏதோ செய்தவர் அப்படியே கையை முழுவதுமாய் விட்டார். முழங்கை முழுவதும் அவர் வயிற்றுக்குள்போய் பார்த்துக்கொண்டிருந்த அவர்களை ஒரு மிரட்டு மிரட்டியது. அப்படி உள்ளே விட்ட கையை அவர்

வெளியே எடுத்த போது அவரது விரல் நுனியில் ஒரு ஒண்ணரை அங்குல நீள மீன் ஒன்று இருந்தது. வயிற்றுக்குள் தவறி விழுந்ததை திரும்பப் பிடித்து வெளியே விடுவது போல இருந்தது அவர் செயல். நால்வருக்கும் அந்த நொடியே அவர் ஒரு அசாத்திய மனிதர் என்பது விளங்கிவிட்டது.

ரகுவீர் வேகமாக அருவியைவிட்டு விலகி ஓடினான். அருவிக்குவரும் பாதைமேல் ஒரு ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த அவர்களின் ஜிப்ஸி ஜீப்பில் இருந்து காமிராவை எடுத்துக் கொண்டு ஈரம் சொட்டச்சொட்ட ஓடிவந்தான். மற்ற மூவரும் அவனைப் பார்த்தபடி அருவிக்கு புறத்தில் நின்று கொண்டிருந்தனர்.

‘எங்கடா. அந்த ஆள்?’

‘அதான் நாங்களே தேடிக்கிட்டிருக்கோம்.’

‘எப்படிடா.. எப்படி?’

‘எப்படின்னா.. யாருக்கு தெரியும்?’

ரகுவீர் முகத்தில் திகைப்பு பொங்கி வழிந்தது. காமிரா தோளில் கனத்தது.

‘அது என்ன மாயாஜாலமோ.. இன்னும் மலைக் காட்டுக்குள்ளேயே நுலையல.. அதுக்குள்றயே இங்க நடக்கறத எல்லாம் பார்த்தா ஒரே பிரமிப்பா இருக்கு.’

கண்ணன் முகத்து நீரை வழித்து சொட்ட விட்டபடியே சொன்ன கருத்துக்கு மற்ற மூவரிடமும் மௌனமான

அங்கீகாரம்!

அடர்ந்த அந்த மலைக்காட்டை ஒரு பூஜையறையாக கருதி சாம்பிராணி போட்டதுபோல மேகக்கூட்டங்கள்.

அடர்ந்த மருத மரங்களுக்கு நடுவில் இருந்தது அந்தக் கட்டிடம்.

வீட்டுமுன் காக்கி அரைடிராயரும், ஒரு முழுக்கை பனியனும் தரித்த நிலையில் சென்ட்ரி போலீஸ்காரர் ஒருவர்.

ஒரு சிறு பெயர்ப்பலகை ஒன்றில் 'வாலாடிமலை அரசினர் மாளிகை' என்று இருந்தது.

வெளியே நிற்கும ஜீப் மற்றும் கார்களை வைத்துப் பார்க்கும் போது யாரோ மந்திரியோ, இல்லை உயர் அதிகாரியோ தங்கியிருக்க வேண்டும்போல் தோன்றியது.

அவரைப் பார்க்க அந்த வனச்சரகத்து ஃபாரஸ்டரும் ஒரு ஜீப்பில் வந்து குதித்தவராக விறுவிறுவென்று அந்த கட்டிடத்துக்குள் நுழைந்தார். சென்ட்ரி அவரைப் பார்த்து சல்யூட்டுக்கு மாறியவராக 'மினிஸ்டர் வந்துருக்குறாங்க..' என்றான்.

அதைக்கேட்டபடியே உள்ளே நுழைந்த ஃபாரெஸ்டரும் உள்ளே மினிஸ்டரைப் பார்த்தபடி பல்லிளிக்க ஆரம்பித்தார்.

'வாய்யா.. நீதானே வடிவேலுங்கறது.'

'ஆமாங்க..'

'உக்காரு..'

‘இருக்கட்டுங்..’

‘சும்மா உக்காருய்யா..’

அவரும் உட்கார்ந்தார். மந்திர மட்டும் கால்மேல் கால் போட்டு அதையும் லகுவாக ஆட்டியபடியே பேச்சை வளர்த்தினார்.

‘இந்த காட்டுக்கு வந்து எத்தனை வருஷமாகுது?’

‘வர்ற அக்டோபர் வந்தா மூணு வருஷங்க..’

‘மூணு வருஷம்தான் ஆகுதா?’

‘ஆமாங்க.. ஏங்க..?’

‘இல்ல.. இந்த மூணு வருஷத்துல முப்பது வருஷத்துக்கு சம்பாதிச்சுட்டமாதிரி கேள்விப்பட்டேன்..’

ஃபாரெஸ்டர் முகம் ஷணத்தில் மாறியது.

மந்திரியும் கொஞ்சம் இடைவெளி விட்டார்.

‘சரி.. இந்த காட்டைப்பத்தி கொஞ்சம் சொல்லு கேப்போம்.’

மந்திரி காட்டின் சரித்திரத்தை கேட்க தயாரானார்.

‘மொத்தமா தொண்ணூறு மைல் பரப்பளவுங்க.. நடுவுல கரடிமடின்னு ஒரு மலை. அதுமட்டும் நாலாயிரத்து நாப்பது அடி உயரம். ஆவரேஜா மூவாயிரத்து ஐநூறு அடி உயரம். வருஷத்துல முன்னூறு சென்டிமீட்டருக்கு மழை பெஞ்சுகிட்டு இருந்திச்சு.. ஒரு நாலைஞ்சு வருஷமா பாதித்தான்

பெய்யுது.’

ஃபாரெஸ்டர் கொஞ்சம் இடைவெளிவிட, மந்திரி முகத்தில் ஒரு கேலிச்சிரிப்பு. கூடவே குத்தல் பேச்சு.

‘அதான் மரத்துல பாதியை வெட்டிப்புட்டியே.. மழையும் பாதிதானே பெய்யும்..’

‘அது.. அது..’

‘ம்ம்.. மேற்கொண்டு சொல்லு.’

‘மத்தபடி தேக்கு, தோதகத்தி, பலா, மிளகுன்னு நல்ல விளைச்சல் கொடுக்கற காடுங்க. ஏழு இடத்துல குட்டி குட்டியா அருவிங்க இருக்குது. அதுல மந்தி அருவின்னு ஒரு அருவில வருஷம் பூரா தண்ணி விழும்.’

‘ஆனா அதுலையும் இந்த வருஷம் தண்ணி விழலை. அப்படித்தானே.’

‘அது.. அது..’

‘நல்லா மென்னு துப்பு.. சரி மிருகங்களோட எண்ணிக்கை தெரியுமா?’

‘குத்துமதிப்பா தெரியுங்க.’

‘சொல்லு..’

‘முப்பத்தி நாலு யானைங்க இருக்குது. ஒரு அறுபது மிளாமானுங்க, நூத்திப்பத்து புள்ளிமானுங்க..’

‘வேங்கப்புலி இருக்கா..’

‘இருக்குங்க..’

‘எத்தினி?’

‘ஒண்ணே ஒண்ணுதாங்க.. எனக்கு தெரிஞ்சி இருக்கறது..’

‘ஒண்ணுதானா.. நிஜமாவா?’

‘ஆமாங்க..’

‘சரி.. வரிப்புலிங்க இருக்குதா?’

‘அது ஒரு ஏழெட்டு இருக்குதுங்க..’

‘சிங்கம்..’

‘துப்பரவா இல்லீங்க..’

‘வேற..’

‘தேவாங்கு இங்க அதிகங்க.. அதே மாதிரி கருங்குரங்குகளும் அதிகம்.’

‘இந்த லிஸ்ட்டை செகரட்டரியேட்டுக்கு அனுப்பியாச்சா?’

‘போன வருஷம் அனுப்புனதுதான்.. இந்த வருஷம் இன்னும் கணக்கெடுக்கல.’

‘மலைஜாதிக்காரங்க இருக்காங்களா?

‘பளியனுங்க ஒரு நூறு குடும்பம் இருக்குதுங்க..’

‘அவங்க என்ன பண்றானுங்க.. வேட்டைதானா?

‘இல்லீங்க.. தேன் பிழிவாங்க.. ஜாதிக்கா, மாசிக்கா

பொறுக்கி வந்து விப்பாங்க. பெரும்பாலும் பண்டமாத்துதானுங்க.’

‘சரி.. இன்னும் இந்த மலையை பத்தி ஏதாவது புள்ளி விபரம் இருக்குதா?

‘ரெக்கார்டுல இருக்கறது இவ்வளவுதாங்க..’

‘இல்லாதது..?’

‘அது.. அது..’

‘சும்மா.. சொல்லு’

‘இந்த மலைல சில சாமியாருங்க சுத்திக்கிட்டிருக்காங்க.’

‘சாமியாருங்கன்னா?’

‘சாமியாருங்கன்னா சாமியாருங்கதான்..’

‘விவரமா சொல்லு... ஜெயில்ல இருந்து தப்பிச்சு ஓடி வந்த நாயிங்கல்லாம் இப்ப சாமியார் வேஷம் போடறதுதான் வழக்கம்.’

‘இவங்க அப்படி இல்லீங்க. நெசமாலுமே சாமியாருங்க..’

‘அது எப்படி அவங்க நெசமான சாமியாருங்கன்னு உனக்கு தெரியும்.’

‘சொன்னா நம்பமாட்டீங்க..’

‘பரவால்ல.. சும்மா சொல்லு கேப்போம்.’

‘ஒரு தடவை ஜீப்ல காட்டை சுத்தி வரும்போது ஜீப் பிரேக் டவுனாயிடுச்சிங்க.. அப்பப்பார்த்து வரிப்புலி ஒண்ணு

அந்த பக்கமா வந்து என்னைப் பார்த்து துரத்த ஆரம்பிச்சிச்சு.. நானும் உசுரை கைல பிடிச்சிக்கிட்டு ஓடினேன். அப்பன்னு பார்த்து கைல துப்பாக்கி வேற இல்ல.'

'பொறவு..'

'நல்லவேளை.. அப்பதான் எதிர்க்க ஒரு சாமியார் வந்துகிட்டிருந்தார். அவர்மேலதான் மோதினேன். அவரும் என்னை தாங்கிப்பிடிச்சார்.. அந்த புலியும் என்னையும் அவரையும் பார்க்கவும் அப்படியே நின்னுடுச்சி. அவர் அதை ஒரு பார்வைதான் பார்த்தார். அப்படியே திரும்பிப் போயிடுச்சி.'

'அதனால அவர் நிஜசாமியார்னு முடிவு பண்ணிட்டியா?'

'நான் அப்படித்தான் நினைக்கறேன். பல மலைஜாதிக் காரங்களுக்கு, சில சாமியார்களும் எவ்வளவோ உதவி எல்லாம் பண்ணியிருக்காங்க.. ஒரு சமயம் ஒருத்தன் தேன் பிழியும்போது மரத்துல இருந்து விழுந்து கால் எலும்பு இரண்டா முறிஞ்சிபோச்சு.. வலி பொறுக்க முடியாம கத்தினான். தலைல வேற அடிப்பட்டு ரத்தமா போய்கிட்டு இருக்கு. டாக்டர்கிட்ட கூட்டிகிட்டு போகனும்னா மேல இருந்து கீழ போக எப்படியும் அரை நாள் ஆயிடும். ஏன்னா முறையான பாதை கிடையாது.'

'அப்புறம்?'

'அதை எல்லாம் பார்த்துகிட்டிருந்த ஒரு சாமியார் பத்து நிமிஷத்துல டாக்டர் ஒருத்தரை கூட்டிக்கிட்டு மேலயே

வந்துட்டாரு....'

'பத்து நிமிஷத்துலையா.. என்ன கெடிகாரம் வெச்சு பார்த்துகிட்டிருந்தையா?

'ஆமாங்க.. பத்துன்னா பத்து நிமிஷந்தாங்க..'

'அந்த டாக்டர் இங்கையே எங்கையாவது இருந்துருப்பான்.'

'அதான் இல்லீங்க.. அந்த டாக்டரே நான் எப்படி இவ்வளவு சீக்கிரம் இங்க வந்தேன்னு தெரியலைன்னார் என்கிட்ட..'

'மந்திரி முகத்தில் உடனேயே சிரிப்பு.. அவர் ஃபாரெஸ்டர் பேசுவதை துளிகூட நம்பவில்லை. என்பது நன்றாக தெரிந்தது.

'சரி.. மேல சொல்லு..'

'சொல்ல என்ன இருக்குது.. இப்படி நிறைய சித்துவேலை செய்யற சாமியாருங்க நிறையபேர் இருக்காங்க.'

'அவங்க எப்படி உன்னை மட்டும் மரத்த வெட்ட விட்டாங்க.'

ஃபாரெஸ்டரிடம் மௌனம்.

'கேக்கறேன்ல..'

'அது... அதுவந்து..'

'எது வந்து..?'

‘மேல இருந்து லெட்டரோட வந்துதான் கேட்டாங்க.. நான் கண்டுக்கல. அவ்வளவுதான்.’

‘அதுக்கு எவ்வளவு தந்தாங்க..’

‘கொடுக்கறத வாங்கிக்கிட்டேன். இவ்வளவுன்னு ப்ளாக்மெயில் பண்ணலீங்க..’

‘அனுப்பினது யார். நிதி இலாகாவா, வன இலாகாவா?’

‘ரெண்டு பேரும்தாங்க...’

‘ம்.. சரி.. இப்ப நான் ஒரு உதவி உன்கிட்ட கேட்கப் போறேன்..’

‘என்னங்க?’

‘எனக்கு மரமெல்லாம் வேணாம். மழை இல்லாமதான் ஊரே நாறிகிட்டு கிடக்குதே..’

‘அப்படீன்னா..?’

அவரும் என்ன வேண்டும் என்று சொல்லி விட.. ஃபாரெஸ்டர் அப்படியே ஸ்தம்பித்து விட்டார்.’

# 6

***உப்பு, புளி, காரம், துவர்ப்பு, கசப்பு, இனிப்பு, என்கிற ஆறு சுவைகள் கொண்டதுதான் மனிதன் சமைத்து உண்ணும் உணவு. இந்த உணவுக்கு அடிமையான மனிதன் உணர்வுகளுக்கும்***

அடிமையானவன். உப்பு ரோஷ உணர்வைத் தூண்டுவதில் முக்கி பங்காற்றுகிறது. புளி பொறாமை உணர்வுக்கு களம் அமைத்து தருகிறது. காரம் கோபத்துக்கு உற்றதுணை. துவர்ப்பு சகிப்புத்தன்மையை கூட்டும். கசப்பு பொறுமையை வளர்க்கும். இனிப்போ கர்வத்தை கொடுக்கும். இந்த உணவுகளின் கலவையால் உடம்பு கட்டுப்படுத்தப்பட்டு மனிதனின் மனம் தன் சக்தியை உணராமல் போய்விடுகிறது. அதனால் தான் இல்லற வாழ்க்கையில் உள்ள மனிதர்களால் துறவிகள் போல செயலாற்ற முடிவதில்லை. உடம்பும் மனிதனை ஆட்டிப் படைக்கிறது. இந்தச் சுவைகளில் எதாவது ஒரு சுவைக்கு ஒவ்வொரு மனிதனும் அடிமையாகிக் கிடக்கிறான்.அந்த சுவைக்கேற்ற குணமும் அவனை வழி நடத்தியபடி இருக்கும். உடம்பின் பிடியில் இயங்கும் மனிதனால் எதையும் சாதிக்க முடியாது எந்த பிரபஞ்ச ரகசியங்களையும் உணர முடியாது. எனவேதான் உடம்பைக் கட்டுப்படுத்த விரதங் களை உருவாக்கி அவைகளை அனுஷ்டிக்கும் வழக்கத்தையும் ஏற்படுத்தினர். கூடவே சில யோகப் பயிற்சிகளையும், உடற் பயிற்சிகளையும் ஏற்படுத்தித் தந்தனர்.

பெண்களைப் பொறுத்தவரையில் கோலம் போடுவது, இடுப்பில் தண்ணீர்குடம் சுமப்பது,

*அதிகாலை எழுந்து சாணிக் கரைத்து தண்ணீர் தெளிப்பது, வீடு கூட்டுவது, பாட்டுப்பாடி தொட்டில் ஆட்டுவது, குழந்தையை குளிப் பாட்டுவது, காய்கறி நறுக்கி சமையல் செய்வது, துணி துவைப்பது என்று அவர்களுக்கான பணியிலேயே யோக அம்சங்கள் ஒளிந்துள்ளன. அவை அவர்களை வழிநடத்தவும் செய்கின்றன.*

*ஆண்களுக்கு தனியே யோகப் பயிற்சிகள் உள்ளன. அவைகளுக்கு உடலை உள்ளாக்கும் போதுதான் உடம்பு என்றால் என்ன என்பதே விளங்கும். அது பஞ்சைப்போல லேசாகி வானத்தில் மிதப்பது போலெல்லாம் பயிற்சிகளின் இடையில் நாம் உணரலாம். உடம்பை யோகப்பயிற்சிகளின் போது தான் முழுமையாக உணரமுடியும். அப்படி உணரத்தொடங்கி விட்டால் பல ரகசியங்களும் அப்பொழுது தெரிய வரும். சூரியனை மேகம் மூடி யிருந்தமாதிரி மனதை மறைத்திருந்த அறியாமை யோகத்தில் விலகும். உடம்பின் சூரியனாய் சுடர்விடும். அப்பொழுது உடம்பின் நாடிகள் பற்றிய ஞானம் மெல்ல ஏற்படும். உயிரானது உடம்பில் எங்கு எப்படி உள்ளது என்பதில் இருந்து ஒவ்வொன்றும் எவரும் எதையும் எடுத்துக் கூறாமலே நமக்குள் உதயமாகும்.!*

**ச**ரியாக ஆறுமணிக்கு அந்த விமானம் சென்னை விமான நிலையத்தை அடைந்தது. அதில் இருந்து இறங்கிய ஒருவர் மூலம், கேசட் டொமினிக்கை அடைந்தது. ஆறு நாற்பத்தைந்துக்கு ஸ்டுடியோவிற்குள் வந்து கேசட்டைப் போட்டுப் பார்த்தபோது டொமினிக்கால் நம்பவே முடிய வில்லை.

சரியாக ஏழு பத்துக்கு சீஃப் எடிட்டரும் கதிர் டி.வியின் எம்.டி.யும் வந்து டொமினிக் போட்டுக் காட்டிய அந்த அதியத்தைப் பார்த்தனர். பார்த்து முடித்துவிட்டு, ‘வாட் எ ஒண்டர்.. இது எப்படி சாத்தியம்.. எதாவது கேமரா டிரிக்கா, இல்ல ரியலாவேவா..? என்றெல்லாம் கேட்டுக் கொண்டனர்.

‘சார்.... இதுல நீங்க பார்த்த அந்த பொண்ணு மதுரைலதான் இருக்கா.. அந்த பொண்ணை கண்டு பிடிச்சா உண்மை தெரிஞ்சிட்டுப் போகுது.’

‘நாம என்ன கண்டு பிடிக்கிறது நியூசை ஹாட்பேக் டெலிகாஸ்ட் ஆனபிறகு அந்த பெண்பத்தி தானா செய்தி வரும் பாருங்க..’

‘ஆமாம் சார்... நானும் அப்படித்தான் நினைக்கிறேன். இதோட ரைட் அப்பை ரெடி பண்ணிட்டேன். படிக்கட்டுமா சார்..’

‘கமான்.. காமான்.. க்விக்.’ சீஃப் எடிட்டர் துரிதப்படுத்த எம்.டி.யும் காதை விடைத்துக் கொண்டு செய்தியை கேட்க தயாராக, டொமினிக் ஒரு தெரிந்த செய்தி வாசிப்பாளன்

போல வாசிக்க ஆரம்பித்தான்.

‘வணக்கம்.

இன்றைய ஹாட்பேக் நிகழ்ச்சியில் ஒரு அதிரடி சம்பவம் இடம் பெறுகிறது.

ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டவர் வருவதுண்டோ? என்பது கேள்வி.

எவ்வளவோ தூரத்திற்கு வளர்ந்துவிட்ட விஞ்ஞானம்கூட இறந்தவர்களை பிழைக்க வைக்க முடியவில்லை என்பதுதான் நிதர்சனம்.

ஆனாலும் நம்முடையை இந்துமத நம்பிக்கைபடி பார்த்தால் பல புராண கதைகளில் எவ்வளவோ பேர் இறந்து விட்ட நிலையியில் மீண்டும் பிழைத்திருக்கிறார்கள்.

அவைகள் புனைக்கதைகள், படிப்பதற்கு சுலபமானவை என்றுதான் கருதி வந்தோம். ஆனால் கதையல்ல. உண்மைதான் என்பதுபோல ஓர் அதிசய சம்பவம் மதுரை மயானம் ஒன்றில் நடைபெற்றுள்ளது.

புதுடெல்லியிலுள்ள உலக அதிசய சம்பவங்களை படமாக்கி விநியோகிக்கும் ஒரு அமைப்பின் சார்பில்.. மயானம் என்பது பயந்து நடுங்க வேண்டிய இடமல்ல. அங்கே பேய் பிசாசு போன்றவைகள் நடமாடுவதாக காட்டுவது பொய் என்பதை நிரூபிப்பதற்காக நான்கு இளைஞர்கள் ஒன்றுகூடி, அந்த மாயானத்திற்கு சென்று ஒருநாள் முழுவதும் தங்கியிருந்து அங்கே நடைபெற்ற பிணம்

எரிப்பு மற்றும் சடங்குகளை படம் பிடித்துள்ளனர். அப்பொழுதுதான் ஒரு புதைக்கப்பட்ட விபத்துக்குள்ளான பிணம் ஒன்றை ஒருவர் ஆக்கிரமித்து எழுப்பிய அதிசய சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்த சம்பவம் நடைபெற்றபோது அங்கு ஒரு சிறுமியும் அவருடன் இருவரும் இருந்துள்ளனர். கூடுவிட்டு கூடுபாய்ந்த நிலையில் இருக்கும் நீ இந்த ரகசியம் பற்றி யாரிடமும் பேசக் கூடாது என்று கூறியதையும் கேட்க முடிகிறது. அதை வைத்துப் பார்க்கும்போது இது ஒரு கூடுவிட்டு கூடுபாய்ந்த சம்பவம் என்று தெரியவருகிறது.

அரிய இந்த காட்சியை மிகுந்த சிரமத்திற்கு இடையில் நேயர்களுக்கென ஒளிபரப்புகிறோம்.

செய்தியை டொமினிக் படித்து முடிக்க எடிட்டர் பலமாக கைதட்டி ஆமோதித்தார்.

'சரியா இரண்டு நிமிஷம் வருது உன் ரைட் அப். குட்.. இம்மீடியட்டா நியூஸ் கேசட்ல இம்போர்ட் பண்ணு.. போ.. கமான்!' என்றார்.

எம்.டி முகத்தில் பலத்த பரவசம்.

'எதுவா இருந்தா என்ன சார்.. உண்மையா இருந்தா அதை உலகத்துக்கு சொன்ன முதல் சேனல்ங்கற பெருமை நமக்கு. பொய்யா இருந்தா ஒரு கண்கட்டு வித்தையை உலகத்துக்குக்காட்டி எச்சரிக்கை செய்த பெருமையும் நமக்குத்தான்' என்று எம்.டியிடம் மார்பை நிமிர்த்தினார்

எடிட்டர்.

'யூ ஆர் ரைட்.. ஒண்ணு மட்டும் உறுதி. இந்த நியூஸ் ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தப்போவது உறுதி..' என்றார் எம்.டி..

அப்படித்தான் ஆனது!

எட்டு ஐம்பதில் இருந்து ஒன்பது மணி வரையிலான அந்த பத்துநிமிட நேரத்தில் தான் ஹாட்பேக் ஒளிபரப்பானது.

அது ஒளிபரப்பாகும் போது கண்ணன், ரகுவீர், ஜெகதீஷ், பிருத்வி நால்வரும் காரையார் மலையின் விருந்தினர் மாளிகையில் இருந்தனர். அதுவும் அவர்கள் பிடித்தி நிகழ்ச்சியை அவர்களே பார்த்துக் கொண்டு..

அவர்கள் முகத்தில் சொல்ல முடியாத அளவு அதிர்ச்சி. ஜெகதீஷ் கிட்டத்தட்ட நொறுங்கிப் போயிருந்தான். மற்ற மூன்று பேரும் அவனையே முறைத்துப் பார்த்தனர்.

'ஏண்டா... அப்படிப் பார்க்கறீங்க?'

'பார்க்காம.. ஊருக்கு முந்தி நீ கேசட்டை அனுப்பி வெச்சுட்டே.. அது பார். இப்ப டிவி.ல ஒரு பரபரப்பான நியூசா வந்து நிக்கறது..'

'இதை.. இதை நான் துளிகூட எதிர்பார்க்கலைடா...'

'இட்ஸ் ஓ.கே.. ஒரு விதத்துல இது நல்லதுக்குத்தான் நம்ம உழைப்பை.. அன்னைக்கு பணம் பூரா பாத்துருப்பாங்க.'

'உழைப்பை விடுடா.. இதுக்குன்னு ஒரு விலை

கிடைச்சிருக்குமே அது போச்சே..'

'எங்கேயும் போகலை... அஞ்சு கோடி கேட்டு, டிவிய கோர்ட்டுக்கு இழுப்போம். .போதுமா?'

'குட் ஐடியா... சேம் டைம் இந்த காட்டுக்குள்ள அந்த வித்தை தெரிஞ்ச சாமியாரை சந்திச்சு அது எப்படிங் கறதையும் ஷூட் பண்ணிடலாம். அப்படி பண்ணதை உலக அளவுல சேல் பண்ணுவோம். நாம சொல்றதுதான் விலை..'

'ஒரு மில்லியன் டாலர் போகுமா?'

'ஆசையப்பாரு முதல்ல அந்த சாமியாரைத் தேடுவோம்.. கண்டுபிடிப்போம் என்ன?'

'ஆமாம். நாம முந்தணும். இந்த நியூச பாத்துட்டு நாளைல இருந்து எவ்வளவு பேர் இந்த காட்டுக்கு வரப் போறாங்களோ.. அதுவேற..!'

'உண்மைதான்.. முந்தணும்.. வேகமா முந்தணும்.. இல்லேன்னா அவ்வளவுதான்.'

ரகுவீர் சொல்லிக்கொண்டே ஒரு சிகரெட்டை பற்ற வைத்தான். புகை சற்று வெளியே செல்லட்டும் என்பதற்காக ஜன்னல் கதவைத் திறந்தான். பகீர் என்றது!

ஜன்னலுக்கு அப்பால் அவர்களையே பார்த்துக் கொண்டு அந்த தாடிக்கார மனிதர், பகல் பொழுதில் தொழிலதிபர் முதல் எல்லோருக்கும் தண்ணி காண்பித்தவர்.

ஆடாமல் அசையாமல் ஒரு சிலைபோல நின்று

கொண்டு அவர் பார்க்கும்விதமே படுபயங்கரமாக இருந்தது.

‘ஜெகதீஷ், கண்ணா, பிருத்வி..’

அலறினான் ரகுவீர்.. மற்ற மூவரும் ஓடிவந்து ரகுவீரை போலவே ஜன்னல் வழியே பார்த்தான். பக்கென்றது.

இதய பாகத்தில் எறும்பு ஊருகிறமாதிரி, மரங்கொத்தி கொத்துகிறமாதிரி பலவித உணர்ச்சிகள்.

அவர்களது அச்சம் அதிகரிக்கிறமாதிரி அவர் கழுத்தில் ஒரு நல்லபாம்பு சிவன் கழுத்தில் வளைத்துக்கொண்டு படம் எடுப்பதுபோல எடுத்துக் கொண்டும் நிமிர்ந்தது.

‘டேய்.. என்னடா இது?’

‘ஏய்.. யார் மேன் நீ.. எதுக்கு இப்படி இந்த ராத்திரில இங்க வந்து எங்கள பார்த்துகிட்டு இருக்கே?’

அவரிடம் பதிலில்லை. அவர்களுக்கோ அச்சம் அதிகரித்தது. ரகுவீர் பட்டென்று ஜன்னல் கதவை மூடினான்.

அறைக்கதவு மூடித்தான் இருந்தது.

‘என்னடா இது. அந்த ஆளைப் பார்த்தா பயமா இருக்கு. எதுக்குடா வந்துருப்பான்...’

‘கழுத்துல வேற பாம்பு. நிச்சயம் அந்த நபர் இந்த மலைல இருக்கற சித்தர்கள்ல ஒருத்தராத்தான் இருக்கணும்.’

‘அது சரி.. வாயைத் திறந்து பேசலாம்ல. முறைச்சு பார்த்தா என்ன அர்த்தம்?’

'நீ எதுக்குடா இப்ப போய் ஜன்னல் கதவை மூடினே. எங்க இப்ப திறந்துபார்.. இருக்கானா போய்ட்டானான்னு.'

கண்ணன் ஆர்வத்தைத் தூண்ட ஜெகதீஷ் மெல்ல கதவைத் திறந்து பார்க்கத் தயாரானான். மெல்ல.. மெல்ல மிகமிக மெல்ல.. சிறிய ஜன்னல் கதவு திறந்துகொள்ள எதிரே தெரியும் வெளிப்புறத்தைப் பார்த்தபோது பகீரென்றது.

அங்கே அவரைக் காணவில்லை.

'டேய் இல்லடா... போய்ட்டான் போல இருக்கு!'

என்றபடியே திரும்பிய போது பகீரென்றது.

அறையின் ஒரு ஓரத்தில் கிடந்த சோபாவில் அவர்.

'நீ... நீ... நீங்களா?'

அவரிடம் இமையை அசைத்த ஆமோதிப்பு.

'எ.. எ.. எப்படி உள்ள வந்தீங்க?'

பதிலுக்கு ஒரு ஏளனச் சிரிப்பு.

'இப்படி வாயைத் திறந்து பேசாம அழிச்சாட்டியம் பண்ணினா எப்படி?'

'என்ன பேசணும்?' அவர் மெல்ல இதழ்களைப் பிரித்தார்.

'அப்பாடா.. பேசிட்டீங்க.. ஆமா உங்க கழுத்துல ஒரு பாம்பு இருந்ததே.. அது எங்க?'

கண்ணன் பயத்துடன் கேட்ட அந்த கேள்விக்கு பதிலாக

அவர் அண்ணாந்து கூரையைப் பார்த்தார். அதில் ஒரு இடத்தில் படுத்தபடி தலையை மட்டும் உயர்த்திப் பார்த்தது அந்த பாம்பு.

அவர்கள் நான்கு பேருமே ஒரு க்ஷணம் உறைந்து போனார்கள்.

'நீ.. நீங்க எப்படி உள்ள வந்தீங்க?' ரகுவீர் திணறலோடு கேட்டான்.

'உள்ள, வெளிய எல்லாம் உங்களுக்குத்தான். எனக்கு எல்லா இடமும் ஒண்ணுதான்..'

'அதான் எப்படி?'

'வாசனை எப்படி எல்லா இடத்துலயும் பரவுது. அப்படி!'

'அது காத்துல கலந்து பரவுது.. அப்ப நீங்களும் காத்துல கலந்து..' ஜெகதீஷிற்கு முழுவதுமாக சொல்லத் தெரியவில்லை. அவரோ, 'ஆமாம்.. அப்படித்தான். காத்துதான் எல்லாத்துக்கும் மூலம்.' என்றார்

'அப்ப நீங்க சித்தரா..'

'சொல்லலாம்..'

'சித்தர்னா என்ன அர்த்தம்?'

'சித்தம்னா எண்ணம்னு ஒரு பொருள். அதாவது எண்ணங்களைப்போல வாழ்பவர்கள்னு ஒரு பொருள். சித்துங்கற மாய வேலை செய்யறவங்கன்னும் ஒரு பொருள் உண்டு.'

‘ஆனா உங்களப் பார்த்தா அப்படித் தெரியலியே’

‘எப்படித் தெரியணும்..?’

‘சினிமாவுல் வர்ற மாதிரி தாடி, மீசை, காவி, நெற்றியில் பட்டை, கழுத்துல கொட்டை இதெல்லாம் ஏதும் இல்லையே.. வெறும் தாடி மீசையோடதானே இருக்கீங்க..’

பதிலுக்கு சிரித்தார் அவர்.

‘உங்க பேர்..?’

‘மந்திச்சித்தர்னு சொல்வாங்க.’

‘வேடிக்கையான பேரா இருக்கே..’

‘அர்த்தமுள்ள பேரும்கூட.. மந்தி எப்படி ஒரு இடத்துல இருந்து இன்னொரு இடத்துக்கு தாவுமோ அப்படி இப்ப நானும் தாவி இங்க வந்ததைப் பார்த்திருப்பீங்களே..’

‘ஓ.. காரணப் பெயரா?’

‘இருக்கலாம்..’

‘ஆமாம்.. ஏன் எங்களை அருவியில் பாத்துட்டு மறைஞ்சு போனீங்க..’

‘அதான் இப்ப நானா தேடிகிட்டு வந்துட்டனே..’

‘அப்ப எங்களைப்பற்றி உங்களுக்கு தெரியுமா?’

‘ஏதோ கொஞ்சம்..’

‘யார் சொன்னாங்க..?’

‘யாரும் சொல்ல வேண்டாம். பார்த்தா போதாதா?’

‘அது எப்படி பார்த்தே ஒருத்தரை பத்தி தெரிஞ்சிக்க முடியும்?’

‘யோகம் பழகுங்க எல்லாம் தெரியவரும்..’

‘சரி.. எங்களப்பத்தி உங்களுக்கு என்ன தெரியும்?’

‘விளையாட்டுப் பிள்ளைங்க, விஞ்ஞான நம்பிக்கை அதிகம். புலன்களை நம்பற அளவு புவனத்தை நம்பாதவங்க...’

‘அப்படின்னா?’

‘எதையும் கண்ணால பாத்து, காதால கேட்டு, வாயல பேசி, தீர அலசி ஆராய்ச்சி செய்து நிறைய சந்தேகப்பட்டு அப்புறம் நம்பற ஜாதி...’

‘ரொம்ப சரி.. ரொம்ப சரி.. ஆனா எங்களாலேயே எங்க அறிவைக் கொண்டு எவ்வளவு யோசிச்சும் புரிஞ்சுக்க முடியாத ஒரு விஷயம் இருக்கு. அதை நாங்க..’

‘தெரியும்.. திருட்டுத்தனமா படம் எடுத்தீங்க.. உங்க கிட்ட இருந்து இன்னொருத்தன் அதை திருடிட்டான். இப்ப இந்த நொடி ஊர் பூரா அது பத்திதான் பேச்சே..’

‘ஆமாம்.. ஆமாம்.. நாங்க அந்த சுடுகாட்டுல பார்த்த காட்சி எந்த அளவு உண்மைன்னு எங்களுக்கு தெரியல கூடுவிட்டு கூடுபாயறதுன்னு அங்க ஒருத்தர் சொன்னார். அதைப்பத்தி தெரிஞ்ச சித்தர் இங்க.. இந்த மலைல

இருக்கறதா பேசிக்கிட்டாங்க.. அதான் இங்க வந்துருக்கோம்.'

'அந்த வித்தைபத்தி தெரியணுமா?'

'ஆமாம்.. தெரியணும்.. அது மட்டும் தெரிஞ்சா அதை வெச்சு உலகத்தையே திரும்பிப்பார்க்க வெச்சுடுவோம். இந்தியாவோட பெருமையை உலகறியச் செய்துடுவோம்.'

ரகுவீர் உற்சாகமாக கூவினான். மற்றவர்கள் அவரை சுற்றி வளைத்து நின்று கொண்டனர். அவர் கண்களில் அதன் எதிரொலியான இனம் காணமுடியாத ஒரு வித உணர்ச்சி. அப்படியே அமைதியாக அவர்களை வெறித்துப் பார்த்தார். அவர்களுக்கும் அவர் அப்படிப் பார்ப்பதில் ஏதோ விஷயம் இருப்பது போல தோன்றியது.

'என்ன யோசிக்கறீங்க?' என்று குத்திவிட்டான் கண்ணன்.

'இல்ல.. கூடுவிட்டு கூடுபாயறது ஒரு அதியமா.. அதுக்கு இப்படி ஒரு எதிர்பார்ப்பான்னு ஆச்சரியப்படறேன்.'

'என்னது.. கூடுவிட்டு கூடுபாயறது ஆச்சரியமில்லையா? அது உங்களுக்கு ஒர சாதாரண விஷயமா?'

'இந்த உலகத்துல எதுவுமே பெரியா விஷயம் இல்ல தம்பி... எப்படி பார்க்கறோம்கறதுலதான் எல்லாமே இருக்கு..'

'என்னஙக நீங்க.. கூடுவிட்டு கூடுபாயறது எவ்வளவு பெரிய விஷயம். அதை சாதாரணமா சொல்றீங்களே.. அப்ப உங்களுக்கு அதைப்பத்தி தெரியுமா?'

‘தெரியாமதான் கதவு மூடியிருக்கும்போது நான் உள்ள வந்தேனா?’

‘அட ஆமாம் இல்ல… எப்படி.. இப்படி உங்களால வரமுடிஞ்சது..’

‘எப்படி… எப்படி..?’

அந்த அறைக்குள் அவர்கள் கேள்விகளாக அடுக்கினர். கைகளை பரபரப்பாக தேய்த்து விட்டுக்கொண்டனர். ரகுவீர் கேமராவை ஆன் செய்து அந்த உரையாடலை அப்படியே ஷூட் செய்ய ஆரம்பித்து விட்டான். தலைக்கு மேல் சுழன்று கொண்டிருந்தது மின்விசிறி. சுழற்சியை பார்க்க முடிந்தது. சித்தர் எழுந்து சென்று அதை அதிகபட்ச வேகத்திற்கு மாற்றினார். அதன் சுழற்சி இறகுகளை அதன் பின் பார்க்கமுடியவில்லை. கண்ணுக்கே அது தெரியவில்லை. ஃபேன் சுற்றும் பகுதிக்கு மேலான கூரை நன்றாக கண்ணுக்கு தெரிந்தது.

‘இப்ப இங்க மின்விசிறி இருக்கா?’ அவர் கேட்டார்.

‘ஏன் இல்லாம… நீங்கதானே ஸ்பீடை கூட்டினீங்க..’

‘அப்ப அது ஏன் கண்ணுக்கு தெரியல..’

‘அது.. அது.. வேகம் அதிகமானா எப்படி அதை பார்க்க முடியும்.’

‘அப்ப நீயும் இதே அளவு வேகத்துல இங்க சுழலும் போது கண்ணுக்குத் தெரியாம போயிடுவியா?’

அவர் எதையோ உணர்த்த தொடங்கிவிட்டது போல இருந்தது.

அவர்கள் நான்கு பேருமே கூர்மைக்கு மாறினர்.

‘இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு..?’ அவரே திருப்பி கேட்டார். திருதிருவென்று விழித்தனர்.

இப்படித்தான் எல்லா விஷயங்களும். புரியறவரைதான் அது பெரிய விஷயம். புரிஞ்சுட்டா.. ஒண்ணுமில்ல. அல்பம். ரொம்ப அல்பம். ஆகாய விமானத்தையே எடுத்துக்கோ.. அது எவ்வளவு பெரிசு? எவ்வளவு கனமானது? சாதாரண காகிதத்தாலகூட அது ஆகாயத்துல பறக்கற அளவு பறக்க முடியாது. அவ்வளவு பாரமான ஒரு உலோகம் ஆகாயத்துல பறக்க முடியும். அதுவும் ஆயிரக்கணக்கான பேரை சுமந்துகிட்டுன்னு முதன்முதல்ல ஒருத்தன் சொன்னப்போ அவரை பைத்தியம்னு சொன்னவங்க எத்தனை பேர்..? ஒரு உமியளவாவது யாராவது நம்பியிருப்பாங்களா?’

அவரது கேள்வியின் விளாசலில் அவர்களிடம் திக்கு முக்காடல்.’

‘உண்மைதான்... நீங்க என்ன சொல்லப் போறீங்கன்னு எங்களுக்கு நல்லாப் புரியுது. இந்த கூடுவிட்டு கூடுபாயற சமாச்சாரமும் அப்படித்தான் நம்ப முடியாத ஒண்ணா இருந்து நடைமுறைல செயல்படுத்தப்படும்போது சாதாரணமாயிடும்னு சொல்ல வர்றீங்க.. அப்படித்தானே?’

‘ஆமாம்...’

‘ஆனா ஏன் இது ரகசியமாகவே இருக்கு... இதை ஏன் எல்லோராலையும் தெரிஞ்சுக்க முடியலை..’

‘ஏன் தெரிஞ்சுக்கணும்?’

‘தெரிஞ்சுகிட்டா அதுல எவ்வளவு த்ரில் இருக்கு தெரியுமா?’

‘த்ரில்லா.. ஆபத்தா?’

‘ஆபத்தா... எப்படி?’

‘ரகுவீர் இப்படி கேள்வி கேக்கறதெல்லாம் அப்புறம். அந்த வித்தை பத்தி கேப்போம். அதை முதல்ல ரெக்கார்ட் பண்ணுவோம்.’

‘இதோ பாருங்க... தலை ஒட்டிப்பிறந்த இரண்டு குழந்தைகளை பிரிக்கற முயற்சியில் டாக்டர்கள் தோத்துட்டாங்க.. அவங்க இறந்து போயிட்டாங்க.. உலகமே அதுக்காக கண்ணீர்விட்டு அழுதிச்சு.. இப்ப அந்த இரண்டு பேருக்கு மட்டும் கூடுவிட்டு கூடுபாயற வித்தை தெரிஞ்சிருந்தா எதாவது ஒரு உடம்பு பூந்து அவங்க வாழலாம்தானே?’

‘உங்களுக்கு இப்ப அந்த வித்தைபத்தி தெரியணும் அவ்வளவுதானே?’

‘ஆமாம்.. அது எப்படின்னு நாங்க படமும் பிடிச்சிக்க விரும்பறோம். அதை பார்த்து உலகமே மூக்கு மேல விரலை வைக்கணும். இந்த அமெரிக்காகாரரங்களுக்கு தாங்கதான் பெரிய மேதைங்கன்னு நினைப்பு. அவங்களுக்கு மேல இந்த

ஜப்பான் நாட்டுக்காரங்க... அவங்கல்லாம் நம்ம நாட்டோட இந்த வித்தையை பார்த்து அப்படியே வெலவெலத்துப் போகணும்.'

'அப்ப உலகத்தை திரும்பி பரவசப்படுத்தி திரும்பிப் பார்க்க வைக்கறதுதான் உங்க நோக்கமா?'

'அதுமட்டுமல்ல.. டெலிகாஸ்ட் ரைட்ஸ்லயே நாங்க பல தலைமுறைக்கு சொத்து சேர்த்துடுவோம். உங்களுக்கும் பங்கு தரோம். நீங்க இப்படி அழுக்கு வேட்டி சட்டைன்னு இந்த மலைக்காட்டுல கஷ்டப்பட வேண்டாம். ஆமாம்.. நீங்க மட்டும் நாங்க சொல்றமாதிரி கேட்டீங்கன்னா நீங்கதான் உலகத்தோட சூப்பர் மோஸ்ட் இம்பார்ட்டன்ட் பர்சனா மாறுவீங்க.. பின்லேடன், ஜார்ஜ் புஷ், சதாம் உசேன், நம்ம முஷாரஃப், பில்கேட்ஸ்னு எல்லோரும் ஓவர் நைட்ல காணாம போயிடுவாங்க.. டைம் மேகசின் அட்டைப் படத்து லேர்ந்து அயல் கிரகங்களுக்கு உங்களை ராக்கெட்ல மேல அனுப்பறதுவரை போய்டுவாங்க.. நாங்களும் இந்த விஷயத்தை கண்டுபிடிச்சு கொடுத்த பெருமைல மஞ்ச குளிப்போம். என்ன சொல்றீங்க..?'

ஜெகதீஷ் கண்கள் மெர்க்குரி விளக்காட்டம் மின்ன, அவரைப் பார்த்து கேட்க, அவரிடம் மீண்டும் வெறித்தபார்வை.

'அடிக்கடி நீங்க இப்படி பாக்கறது எங்களை குழப்புது. நாங்க சொல்றதுல என்ன தப்பு.. கொஞ்சம் யோசிச்சு பாருங்க..'

அவர் உடனே கெச்சலாக கொஞ்சம்போல் சிரித்தார். பின், ‘கண்ணுக்குமேல புருவம்னு ஒண்ணு இருக்கே எதுக்கு தெரியுமா?’ என்று கேட்டார். அவர்களிடம் உடனே குழப்பம். கொஞ்சம் ஆத்திரமும்கூட!

‘நாங்க ஒண்ணு கேட்டா நீங்க ஒண்ணு சொல்றீங்களே!’

‘என் கேள்விக்கு முதல்ல பதில் சொல்லுங்க...’

‘தெரியல..’

‘சரி.. புருவம் இல்லேன்னா முகம் நல்லா இருக்குமா?’

‘அதையெல்லாம் யோசிச்சே பார்த்ததில்லை.’

‘சரி.. கண்ணுக்கு எதுக்கு இமை.. கைக்கு எதுக்கு நகம்.. தலைக்கு எதுக்கு முடி..’

‘எல்லாம் ஒரு சேஃப்ட்டி ப்ர்ப்பஸுக்குதான். இது என்ன கேள்வி.’

‘இதெல்லாம் மாறி இருந்தா நல்லா இருக்குமா?’

‘ஐய்யய்யோ.. நீங்க எங்க கேள்விக்கு வாங்க..’

‘உங்க கேள்விக்குதான் வரேன்.. அட்டமாசித்துங்கறது ஒண்ணும் பெரிய விஷயம் கிடையாது... யாருக்கு..?’

‘யாருக்கு..?’

‘ஆசையே இல்லாத மனுஷங்களுக்கு..’

‘அப்படின்னா...?’

‘ஆசை உள்ள மனிதர்கள் கைல அதோட சூத்ரங்களும்

அடிப்படைகளும் வசப்பட்டா அவ்வளவுதான்..'

'என்ன ஆகும்..?'

'என்ன ஆகாது.. அதை கற்பனை செய்து பார்க்கக்கூட உங்களால முடியாது..'

'பெரியவரே... நீங்க என்ன சொல்றீங்க.. இப்ப எங்களுக்கு அதைப்பத்தி சொல்வீங்களா மாட்டீங்களா?'

கொஞ்சம் மிரட்டுவது போலவே கேட்டான் ஜெகதீஷ்.

'அவசியம் சொல்லப் போறேன். என் குரு சம்பங்கிநாதர் எனக்கு கத்துக்கொடுத்துட்டு இப்ப அவர் மகாசமாதியில உட்கார்ந்துட்டாரு.. சொல்லக்கூடாத ஒருத்தனுக்கு சொல்லிக் கொடுத்ததன் விளைவையும் அனுபவிச்சு முடிச்சிட்டாரு. அதோட எதிரொலிதான் நீங்க இங்க வரவே காரணம். உங்களால ஊர் முழிச்சிடுச்சி. அப்படி முழிச்சுகிட்ட ஊரை உங்களைக்கொண்டே அடக்கறதுதான் என் நோக்கம்.'

அவர் பேச்சில் இரட்டைப் பொருள். ஆனால் அது அவர்களுக்கு புரியவில்லை.

'சரி என்கூட வாங்க..'

'எங்க..?'

'என் குருநாதர் சமாதி ஆயிட்ட கோவிலுக்கு. முதல்ல அங்கபோய் குருவணக்கம் செய்து அவர் ஆசிகளை வாங்கணும். பிறகுதான் கூடுபாயறதுன்னா என்னங்கற பயிற்சி..'

‘ஆமா.. அந்த பயிற்சி எடுக்க எவ்வளவு நாளாகும்.’

‘எத்தனை ஜென்மம் தேவைன்னு கேட்டா நீ எத்தனை நாளாகும்னு கேக்கறியேப்பா..’

கேலியாகச் சிரித்தார் மந்திச்சித்தர் என்கிற அவர்.

‘இதுக்கு எதுக்கு ஜென்மங்கள்..? நான் கார் ஓட்டவே ஒரு நாள்ல கத்துகிட்டேன் தெரியுமா.. எதுலையும் ஈடுபாடுதான் முக்கியம். நாங்கல்லாம் எதையும் ரொம்ப சீக்கிரம் கத்துக்குவோம்.’

கித்தாப்பு அவர்களிடம் கொடிகட்டிப் பறந்தது. அதைப் பார்த்த மந்திச்சித்தர் முகத்தில் ஏனோ அவர்கள்மேல் ஒரு பரிதாப உணர்ச்சி!

# 7

*உயிர் பற்றிய ஞானமே துளியும் இல்லாமல் அதை தற்கொலை மூலம் துறக்க நினைப்பவர்கள். அதேபோல் உடல் நலிந்துபோய் ஆரோக்கியம்கெட்டு மனசுடைந்து உயிர் விடுபவர்கள். இவர்களின் பிணங்களுக்கும்.. உயிர் பற்றிய ஞானமுடன் அதை பிராணக்காற்று என்று அறிந்து அதை சுவாசப்பயிற்சிகளின் தளங்களில் நின்று புரிந்து கொண்டு, அதன்மூலம், சுவாசிக்கும் காற்றின் அளவை கூட்டியும், குறைத்தும் பின் மார்பை காற்றில் நிரப்பி மூச்சினைக்கூட்டி*

ஆண்டும், உடம்பின் நாடிகளில் அதன் துடிப்பை கூட்டிக் குறைத்தும் சுவாசப்பயிற்சியுடன் குண்டலினியோகம் வாசியோகம் போன்றவைகளையும் அறிந்து மனதை எண்ணங்களற்ற நிலையில் ஒருமுகப்படுத்தி தேர்ந்த யோகக் கலைஞனாக உள்ள ஒருவன், தன் பிராணக் காற்றை நீக்கிய உடம்புக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. முந்தைய பிணத்திடம் பிரபஞ்ச அலைத்தொடர்பு முற்றிலும் அறுந்திருக்கும். குறிப்பாக, ஒன்பது கோள்களில் உயிர் பிரிக்கக் காரணமான மாரகாதிபதியின் கோள் கதிர்கள் அந்த உடம்பைவிட்டு நீங்கியிருக்கும். ஆனால் யோகத்தால் பிராணனை அடக்கியவர் உடலில் அல்லது அந்தக்கோள் கதிர் தொடர்புடன் இருக்கும் மற்ற கோள்களின் கதிர்களும் பிரபஞ்ச மைய விசைக்கதிரும் தொடர்பிலேயே இருக்கும். அதன் மூலமாகத்தான் மீண்டும் பிராணக்காற்றை உள் செலுத்தி பிரேதமாகிவிட்ட உடம்பை இயக்கவும் செல்கள் முடங்கிவிடாமல் காக்கவும் முடியும். அதனாலேயே கூடுவிட்டு கூடுபாய்பவர்கள் தங்கள் சரீரங்களை பாதுகாப்பான மலைக்குகைகளுக்கு சென்று படுத்த நிலையில் பிராணனை உதிர்த்து வெளியேறுவர். அந்த பிரேதமும் பாதுகாப்புடன் இருக்கும். அப்படியும் அந்த குகைகளில் அடையவரும்

*மிருகங்கள் அந்த பிரேதத்தை உணவாக உட்கொண்டு விடுவதுமுண்டு. இதனால் உடம்பை இழந்த பலர் பிறிதொரு உடலைத்தேடியும், கிடைத்த உடம்புக்குள் நுழைந்து கொண்டும் வாழ்ந்த கதைகள் நிறைய உண்டு. ஆதிசங்கரரே மரணம்பற்றி அறிய சமணா ஒருத்தியின் இறந்துவிட்ட கணவன் உடம்பில் புகுந்து அந்த பெண்ணுடன் கலந்து காமம்பற்றி அறிந்து பின் உடம்பை உதிர்த்து ஆத்மாவை வெளியேற்றி திரும்பவும் தனது உடலில் புகுந்து கொண்டு மறுநாள் நிகழ்ந்த வாதப்போரில் காமம் பற்றியும், இல்லறம் பற்றியும் ஆதிசங்கரர் அனுபவித்தறிந்தவர் போல பேசி அந்தப் பெண்ணை வென்றதாக கதைகள் கூறுகின்றன. யோகமறிந்தவருக்கு குறிப்பாக அட்டமாசித்துகளை அறிந்தவர்க்கு கூடுபாய்தல் என்பது ஒரு சாதாரண உடல் சார்ந்த பயிற்சி வித்தை!*

அந்த வன இலாகா அலுவலகத்தின் முன் ஜீப் காத்துக் கொண்டிருந்தது. வெளியே சென்ட்ரியின் காவல் அவன் யாரையோ எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தான்.

அதற்கு ஏற்ப நன்கு கட்டை, குட்டையாய் ஒருவனும், ஒரு மலைப்பளியனும் கறுப்புப் போர்வைக்குள் தங்கள் உடம்பை மூடி தலைப்பாகை எல்லாம் தரித்த நிலையில் அந்த அலுவலகம் நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

நிதானமான நடை.

ஒருசேர நடந்துவரும் தோரணையிலேயே ஒருவித அழுத்தம். அமைதியான மலைக்காட்டில் அந்த மண்பாதையில் அவர்கள் வரும் விதமே அலாதியாக இருந்தது. யாராவது பார்த்தால் அச்சம் கொள்ளும் விதத்தில் இருந்தது. அவர்களைப் பார்க்கவும் சென்ட்ரி உள்ளே ஓடினான். சீட்டில் அமர்ந்திருக்கும் ஃபாரெஸ்டரிடம்...

‘சார்.. காளப்பனும், கந்தையனும் வந்துகிட்டிருக்காங்க..’ என்றான்.

அவர் உடனே நிமிர்ந்தார். பரபரப்பானார்.

அவர்களும் உள்ளே நுழைந்தனர். பணிவாக ஃபாரெஸ்டருக்கு வணக்கம் சொல்லிவிட்டு வாயைத் திறந்தனர்.

‘கூப்ட்டு விட்டீங்களாமே.?’

‘ஆமாம்.. முக்கியமான விஷயம்..’

‘என்ன.. நாங்க இந்த மலைக்காட்டுல ஒளிஞ்சிருக்கறத போலீஸ்க்கு சொல்லிட்டாங்களா?’

‘அந்த இருவரில் பளியனான காளப்பன்தான் அப்படி கேட்டான்.

‘அதெல்லாம் இல்ல காளப்பா.. நான் இந்த காட்டுல இருக்கற வரை உங்கமேல் யாரும் கைவைக்க முடியாது. அதை நீ நல்லா ஞாபகம் வெச்சுக்கோ..’

‘அப்படீன்னா இப்ப அவசரமா கூப்ட காரணம்..’

‘இருக்கு.. மந்திரி மகா குருசாமி நேத்து வந்திருந்தார்.’

‘தெரியும்... அதான் அஞ்சாறு முயல், இரண்டு பன்னின்னு உங்க டிபார்ட்மென்ட்டே துப்பாக்கியும் கையுமா அலைஞ்சிச்சே?’

‘பரவால்லியே... எல்லாம் தெரிஞ்சு வெச்சிருக்கியே...’

‘இந்த காட்டு மேல எப்பவும் எங்களுக்கு கண்ணு உண்டு தெரிஞ்சுக்கங்க.’

‘சரி.. இப்ப நான் சொல்றத நல்லா கேட்டு காரியத்த கச்சிதமா முடிச்சு குடுக்கணும் நீங்க...’

‘சொல்லுங்க..’

‘நம்ம மந்திரிக்கு நாலு புலிங்க உயிரோட வேணுமாம்.’

‘அட்றா சக்கைன்னானாம்.. இப்பல்லாம் சந்தனம், ஜவ்வாதுன்னு மரமெல்லாம் சிறுசாயிடிச்சாக்கும்.’

‘அப்படித்தான் வெச்சுக்கையேன்.. மேலிடத்து விஷயம்.. நமக்கு எதுக்கு அதைப்பத்தின வீணான ஆராய்ச்சியெல்லாம்...’

‘அது சரி.. ஒரு புலியைப் பார்த்து புடிக்கறதே பெரும்பாடு.. இதுல நாலு புலிங்க.. அதுவும் உசுரோட வேற... ஆமா என்ன பண்ணப் போறாராம்?’

‘ஏதோ யாகம் பண்ணப் போறாராம். அதுக்குதான்..’

‘யாகத்துக்கு எதுக்கு புலி?’

‘அதெல்லாம் தெரியாது.. மேலிடத்து விஷயம்னு சொன்னேன்ல.. ரொம்ப நோண்டாதே..’

‘சரி... எங்களுக்கு என்ன தருவாராம்..?’

‘போலி பாஸ்போர்ட் விசாவுல நீங்க விரும்பற நாட்டுக்கு உங்களை அனுப்பி வைப்பாரு.. அங்க நீங்க ஜென்ம தண்டனை கைதியா இல்லாம சுதந்திரப் பறவைகளா சுத்தி வரலாம்..’

‘நம்பலாமா..?’

‘நான் உறுதி தரேன்.’

‘அவர் தருவாரா?’

‘செல்ஃபோன்ல நம்பர் கேட்டு தரேன். பேசறீங்களா?’

‘கொடுங்க..’

அடுத்த இரண்டாவது நிமிடமே அந்த மந்திரி அவர்கள் காதுகளில் பாய்ந்தார்.

‘காரியத்தை கச்சிதமா முடிச்சு கொடுங்க. இப்ப சாதாரண மந்திரியா இருக்கற நான் முதல் மந்திரியாவே மாறிடுவேன். அப்புறமென்ன.. நீங்க கேட்டத செஞ்சு கொடுக்கறேன்..’

‘நல்லதுங்க.. உங்க வார்த்தையை நம்பறோம். ஒரு வாரம் அவகாசம் கொடுங்க.. ஒவ்வொரு புலியாத்தான் புடிக்க முடியும். முக்கியமான இடங்கள்ல கூண்டுவெச்சு அதுல

வெள்ளாட்டை உள்ள நிறுத்தித்தான் அதை மடக்கிப் பிடிக்கணும். ஆட்டைப் பார்த்துட்டு வேகமா கூண்டுக்குள்ள வரும். அப்ப ஒரே அமுக்கு அமுக்கி பொறவு மயக்க மருந்து தோட்ட உள்ள துப்பாக்கியால சுட்டு அதை வெளியே எடுக்கணும். அப்புறமா நீங்க சொல்ற இடத்துக்கு அதுங்கள தூக்கிட்டு வரணும்.'

'ஜாக்ரதையா செயல்படணும். இந்த விஷயம் யாருக்கும் தெரிஞ்சுடக்கூடாது. அதுலையும் பத்திரிகைக்காரங்க மோப்பம் பிடிசுட்டா அவ்வளவுதான்... ஏதோ உலகத்தையே அழிக்க யாகம் பண்றதா குண்டாங்குதுரையா எழுத ஆரம்பிச்சிடுவாங்க.'

'அந்த கவலை எல்லாம் உங்களுக்குதாங்க... எங்க கோரிக்கையை நீங்க நிறைவேத்தலன்னாதான் நாங்க பத்திரிகைகாரங்களுக்கு சொல்வோம்.'

காளப்பனுக்கு மந்திரியை மிரட்டக்கூட தெரிந்திருந்தது.

'என்னய்யா... எனக்கே செக் வைக்கிறியா?'

'எப்படி வேணும்னா வெச்சுக்குங்க. நாங்க உயிரைப் பணயம் வெச்சுல்ல புலிங்ககிட்ட போகணும்.'

'சரி.. சரி.. காரியத்தை முடிச்சுட்ட தகவல் கொடுங்க..'

மந்திரியோடு அவர்களின் பேச்சு ஒரு முடிவுக்கு வந்தது. செப்ஃபோனை ஃபாரெஸ்டரிடம் கொடுத்தனர்.

'பாத்துய்யா.. நூல் பிசகாதபடி காரியத்தை முடிக்கணும்.'

‘அதைப்பத்தி உங்களுக்கென்னங்க கவலை.. இனி எங்க பாடு.. வரோம்.’

அவர்களும் விடைபெற்றுக் கொண்டனர்.

அந்த மலைச்சரிவு முழுக்க உயரமாய் ஒரு மரம்கூட இல்லை. இருந்ததை எல்லாம் அப்படியே பவர் ஆக்சாவால் தரையோடு தரையாக அறுத்து எடுத்துச் சென்றுவிட்டது. துண்டுபட்ட அடிப்பரப்பை பார்ப்பதன் மூலம் தெரிந்து கொள்ள முடிந்தது.

மந்திச்சித்தர் அவைகளைக் காட்டியபடியே அந்த நான்கு பேரையும் அழைத்துச் சென்றபடி இருந்தார்.

‘அடேயப்பா.. எவ்வளவு மரங்களை அறுத்துறுக்காங்க..’

‘முடிஞ்சா எண்ணிப்பாருங்க கிட்டத்தட்ட மூவாயிரம் மரங்க..!’

‘எல்லாம் யாரோட வேலை? வீரப்பனை மாதிரி இங்கையும் ஆட்கள் இருக்காங்களா?’

‘எங்கெல்லாம் சந்தனமரங்களும் தேக்கும் இருக்கோ எங்கெல்லாம் அதோட மதிப்பும் தெரிஞ்ச மனிதன் இருக்கானோ? அங்கெல்லாம் இப்படித்தான் இருக்கு..’

‘இதை எல்லாம் உங்களால தடுக்க முடியாதா?’

‘நானா..?’ அவர் அவர்களை பார்த்து அழுத்தமாய் மார்பில் கைவைத்தபடி கேட்டார்.

‘ஆமாம்.. ஏன் உங்களால முடியாதா?’

‘நான் ஒரு தனி மனுஷன். ஒரு அரசாங்கத்தாலையே முடியலை. என்னால் எப்படி முடியும்..?’

‘அரசாங்கமும் நீங்களும் ஒண்ணா?’

‘அப்படின்னா நான் அரசாங்கத்தைவிட மேலானவனா?’

‘இல்லையா பின்னே? அரசாங்கம்கறது எங்களை போல சராசரி மனுஷங்களால ஆனது. ஆனா நீங்க அப்படியா? உங்ககிட்ட இருக்கற அந்த மாயமா மறையற ஒரு வித்தை போதுமே..’

‘அதைக்கொண்டு நான் மாயமா வேணும்னா மறையலாம் இந்த மரம் வெட்டிகளை எப்படி திருத்த முடியும்?’

‘அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. நாங்க மட்டும் உங்க இடத்துல இருந்தா மிரட்டியே அவங்களைக் கொன்னுடுவோம்.’

‘அப்படியா?’

‘என்ன சந்தேகமா, நீங்க எங்களுக்கு அந்த வித்தையை மட்டும் முதல்ல எப்படின்னு சொல்லிக் கொடுங்க.. அப்புறம் பாருங்க..’

‘அப்ப வித்தை தெரிஞ்சா காட்டை பாதுகாப்பேன்னு சொல்றீங்களா?’

‘நாங்க மட்டும் இல்ல... இன்னிக்கு மெட்ராஸ் வந்து நீங்க யாரை வேணும்னா கூப்ட்டு கேட்டுப்பாருங்க. அவங்க உயிரைக்கூட தருவேன்னு சொல்வாங்க. ஏன்னா

தண்ணியில்லாம அவ்வளவு கஷ்டப்படறோம். ஒரு லிட்டர் தண்ணி விலை இருபது ரூபாய். அதுலயும் கூட ஏராளமான போலிங்க..'

'அப்ப நீங்க மலையோட அருமை தெரிஞ்சவங்கன்னு சொல்லுங்க..'

'நிச்சயமா.. வீரப்பன் விவகாரம் ஒண்ணு போதும். நாம எவ்வளவு மெத்தனமா இருந்துட்டோம்கறத சொல்றதுக்கு. நாங்க அமெரிக்கா போயிருந்தப்ப அவங்கல்லாம் கேட்டுக் கேட்டு சிரிச்சாங்க.. ஒரே அவமானமா போச்சு..'

'அப்படியா..?' அவர் ஏதோ கதை கேட்கறமாதிரிதான் கேட்டார். ஆனால் அவர்களோ மிக உணர்ச்சிவசப்பட்டு பேசுகிற மாதிரிதான் இருந்தது.'

திடீரென்று எதிரில் ஒரு ஒற்றை யானை.

ஒற்றைக்காலை முன்தூக்கியபடி, தும்பிக்கையால் வானம் பார்த்து ஒரு பிளிறல் பிளிறியது. அப்படியே நான்கு பேரும் ஒரு கூண்டுக்குள் அடைக்கப்பட்ட மாதிரி ஒருவரோடு ஒருவர் ஒட்டிக்கொண்டனர். மந்திச்சித்தர் என்கிற அவர் அந்த யானையைப் பார்த்து மந்தகாசமாய் சிரித்தார்.

தைரியமாய் அதன் அருகில் சென்றார்.

'என்னப்பா.. எப்படி இருக்கு உடம்பு?' என்று ஏதோ ஒரு மனிதனிடம் கேட்கிறமாதிரி கேட்டு அப்படியே அந்த யானையை ஒரு சுற்று சுற்றி வந்தார்.

உடம்பில் அங்கங்கே சிராய்ப்புகள்.

காலில் கூட ஒரு பெரிய முள் தைத்திருந்தது.

அதையும் பிடுங்கி எறிந்தார்.

அந்த யானையின் கண்களில் இருந்து கண்ணீர் புரண்டு வந்தது.

'எதுக்கு இப்ப அழறே.. இப்படி எல்லாம் நடக்கும்னுதான் நான் உனக்கு அந்த வித்தையை கத்துத் தரமாட்டேன்னு சொன்னேன். ஆனா நீ கேக்கல. இப்ப அனுபவிக்கறே?'

அவர் சொல்லி முடித்த மறுநொடி அந்த யானை அப்படியே அவர் முன் மண்டியிட்டது. பக்கத்தில் ஒரு பூச்செடி வளர்ந்திருந்தது. அப்படியே தும்பிக்கையை அந்த பூச்செடியில் இருந்து ஒரு பெரிய பூவை பறித்து அதை மந்திச்சித்தர் காலடியிலும் வைத்தது.

'இப்படி எனக்கு பூஜை பண்றதுல பிரயோஜனமே இல்ல. பொறுமையா இரு. காட்டுல யாராவது சாகாமலா போவாங்க. அப்பப்பார்த்து உள்ள நுழைஞ்சிரு... அதுவரை காத்திருந்துதான் தீரணும்.'

அவர் அந்த யானையை தட்டிக்கொடுத்து வருடிக் கொடுத்தும் பேசியதெல்லாம் அந்த நான்கு பேரையும் திருதிருவென விழிக்க வைத்துவிட்டது.

'ஆமா.. என்ன நீங்க இந்த யானையை என்னமோ மனுஷன்மாதிரி நினைச்சு பேசிக்கிட்டிருக்கீங்க..'

அவரோ பதிலுக்கு சிரித்தார்.

‘நடங்க... சமாதி கோவில் பக்கத்துலதான் இருக்கு..’ என்றார்.

‘எங்க கேள்விக்கு பதில் சொல்லுங்க..’

‘சொல்றேன்.. இப்ப முதல்ல நீங்க செய்யவேண்டியது குருவணக்கம்.’

‘அப்ப அதுக்கு பிறகு விளக்கமா சொல்வீங்களா?’

‘நிச்சயமா, சொன்னாதானே உங்களுக்கும் அது பயன்படும்.’

அடர்வான காட்டுக்குள் மந்தை மந்தையாய் தழைத்திருக்கும் புதர்க்கூட்டங்களை விலக்கிக்கொண்டே அவர் நடந்தார்.’

ரகுவீர் அவர் நடப்பதை அப்படியே கேமராவில் வாரிச்சுருட்டத் தொடங்கி விட்டான். நடுநடுவே பியூட்டிஃபுல்.. ஒண்டர்ஃபுல்.. என்றபடி இடைபடும் மேகத்திண்டுகளையும் வண்ணத்துப்பூச்சி கூட்டத்தையும் கூட படமெடுத்துக் கொண்டான்.

ஒரு இடத்தில் ஒரு மரம் எரிக்கப்பட்டு கருகிக்கிடந்தது. அதைப்பார்த்த மந்திச்சித்தர் திரும்பி நான்கு பேரையும் பார்த்தார்.

‘எரிச்சாதானே இந்த மரம் பயன்படாது.’

‘புரியல சாமி...’

‘இந்த மரத்தோட பட்டை மருந்துக்கு பயன்படக் கூடியது.

அதை சுலபமா உரிக்க முதல்ல மரத்துக்கு தீ வெச்சுடுவாங்க. பிறகு தண்ணிய விட்டு அணைச்சு அப்படியே உரிச்சு எடுத்துகிட்டு போயிடுவாங்க..'

'அடக்கொடுமையே.. இப்படிகூடவா நடக்கும்.?'

'நடந்திருக்கே?'

'ஃபாரெஸ்ட் டிபார்ட்மெண்ட் என்ன பண்ணிகிட்டிருக்கு...?

'அது என்ன பண்ணும் பாவம்!'

'பாவமா,காட்டை காப்பாத்தறதுதானே அவங்க வேலை?'

'அதை கொஞ்சம் தப்பா புரிஞ்சுகிட்டு தங்களோட பதவியைன்னு அவங்க நினைச்சுட்டாங்க போல இருக்கு.'

அவருக்கும் கிண்டல் இலகுவாக வந்தது. கூடவே கொஞ்சம் துர்நாற்றமும் வீசியது. அந்த நாற்றம் ஒரு பள்ளத்தில் இருந்துதான் வந்தது. எட்டிப் பார்க்கவும் கண்கள் விரிந்தன. உள்ளே வெட்டிக் கூறு போடப்பட்ட ஒரு யானையின் சடலம்.

ரத்தம் உறைந்துபோய் காட்டு ஈக்கள் கும்மாளமடித்துக் கொண்டிருந்தன.

'மை காட்! ரகு, கண்ணா, ஜெகா, கொடுமையை எட்டிப் பாருங்க தெரியும்.' என்று மூக்கைச் சுளித்தான் பிருத்வி.

அவர்களும் எட்டிப்பார்த்தனர். முகத்தைச்சுழித்தனர். வேகமாக அந்த இடத்தைவிட்டே விலகிச்சென்று நின்றனர்.

‘ஓ.. எவ்வளவு பெரிய கொடுமை?’ என்று பரிதாபத்தின் உச்சிக்கே போனான் கண்ணன்.

‘பரவால்லியே உங்களுக்கு பரிதாபப்படக்கூட தெரியுதே.’ அவர் சீண்டுவதுபோல் பேச்சைவிட்டார்.

‘என்ன நீங்க.. எங்களை என்ன இதயமே இல்லாதவங்கன்னு நினைச்சுட்டீங்களா?’

கோபம் கொப்பளித்தது ரகுவீரிடம்.

அவரோ அசமந்தமாய் சிரித்தார்.

‘அது என்னன்னு தெரியல.. இந்த சாமியார், சித்தர் இவங்களுக்கெல்லாம் இந்த மாதிரி சிரிக்கறது ஒரு வழக்கமா இருக்கு..’ இது ஜெகதீஷ்.

‘இந்த சிரிப்புக்குக் காரணம் உங்ககிட்ட நான் பாக்கற முரண்பாடு..’

‘முரண்பாடா... எங்ககிட்டையா?

‘ஆமா... நிறைய...’

‘எப்படி?’

‘காட்டுல நடக்கற அக்கிரமங்களைப் பார்த்து ஐயோன்னு பரிதாபப்படற நீங்க, அந்த அக்கிரமங்களுக்கு துணைபோற மாதிரிதானே நடந்துக்கறீங்க..’

‘என்ன சொல்றீங்க நீங்க.. நாங்க என்ன மரம் வெட்டினோமா காட்ட எரிச்சோமா, மிருகத்தை கொன்னோமா?’

‘இதை எல்லாம்விட பெரிய பிழையை பண்ணீட்டிங்களே..’

‘புரியும்படி பேசறீங்களா?’

‘நகரம் பிடிக்கலை... அங்கே ஒரே விஷப்புகைன்னு தானே என்னை போன்ற சன்யாசத்துக்கு ஆசைப்படறவங்க காட்டுப்பக்கம் வர்றோம்.’

‘சரி, அதுக்கென்ன?’

‘இங்கேயும் எங்களை நிம்மதியா இருக்கவிடலைன்னா எப்படி?’

‘திரும்பவும் சொல்றேன். நீங்க பேசறதே புரியல..’

‘ஒளிஞ்சிருந்து டி.வி படம்லாம் எடுத்தீங்கபோல இருக்கே.’

‘அது.. அது.. உங்களுக்கு எப்படி தெரியும்?’

‘அதான் டி.வி.யிலையே வந்துடுச்சே.’

‘அதனால என்ன? இது ஒரு உலக அதிசயமாகவே இதை வெச்சுத்தானே உங்களையே நாங்க உலக அளவுல பெரிய ஆளா ஆக்கப்போறோம் சொன்னோம்.’

‘நானும் நீங்களும் பெரியவங்களா ஆக இந்த காடுதானா கிடைச்சது..?’

அவர்கள் நான்கு பேருக்கும் மீண்டும் குழப்பமாகவே இருந்தது.

'ஐயா... நீங்க புரியற மாதிரியே பேசமாட்டீங்களா?'

'இன்னுமா புரியல... கூடுவிட்டு கூடுபாயறது சஞ்சீவி மூலிகையால காலத்துக்கும் உயிர் வாழறது. உடம்பு வியாதியை ஜெயிக்கறதுன்னு பல விஷயங்கள் அந்த டி.வி மூலமா இப்ப பேசப்படற விஷயம் ஆயிடிச்சு. ஏற்கனவே இந்த காட்டை சுயநலத்துக்காக சுரண்டற கூட்டம் ஒரு பக்கம். இப்ப இதை பார்த்துட்டு உலகம் முழுக்க இருந்து ஆராய்ச்சி தேடல்னு ஒரு கூட்டம் வரப்போகுதே.. என்ன பண்ணப்போறீங்க..?'

'வரட்டும்... நல்லதுதானே?'

'யாருக்கு நல்லது... வர்றவங்களுக்கா.. இல்ல காட்டுக்கா?'

'அப்ப இதெல்லாம் ரகசியமாத்தான் இருக்கணுமா?'

'அப்படி நான் எப்ப சொன்னேன்.?'

'நீங்க சொல்றதோட அர்த்தம் அதுதானே?'

'அது நீ புரிஞ்சுக்கற லட்சணத்தை பொறுத்தது.'

'எப்படி புரிஞ்சுக்கணும்... அதையாவது சொல்லுங்க..'

'ஒரு விஷயம் காலகாலத்துக்கும் சிரஞ்சீவியா இருக்கணும்னா அது நம்பிக்கை. அவநம்பிக்கை இரண்டுக்கும் நடுவுல இருக்கணும். நேத்துவரை இருந்த இந்த காடோட நிலை வேற, இனி இதோட நிலை வேற. ஆசையுள்ள மனிதன் கைல சிரஞ்சீவி எல்லாம் கிடைச்சா

என்னாகும்னு யோசிச்சு பாருங்க..’

‘அவ்வளவுதான்... இப்ப நான் இல்ல.. அப்புறம் அவனும் என்னைமாதிரி ஆகி அலைய வேண்டியதுதான்.’

பதில் ஒரு மரத்தின் மேலிருந்து வந்தது. நால்வருக்குமே தூக்கிவாரிப்போட்டது. யாரது என்று அண்ணாந்து பார்த்தனர். ஒருவரும் இல்லை. ஒரு கிளி மட்டும் அமர்ந்திருந்தது. அந்தக் கிளியா பேசிற்று?

அவர்கள் கேள்விக்குள் விழ, அது பறந்து வந்து மந்திச் சித்தர் நீட்டிய கைவிரல்கள் மேல் அமர்ந்தது.

‘என்னா பூவாயி... நீ இங்க இருக்கியா?’

‘ஆமாம் சாமி.. ஆமாம்.. யாரு இவங்க?’

‘உன்னைப் போலதான்...’

‘என்னைப் போலதான்னா..’

‘நம்ம சம்மங்கிச்சித்தர் சன்னதிக்கு வந்துகிட்டு இருக்காங்க. கூடுவிட்டு கூடுமாறும் விஷயத்தைப்பத்தி தெரிஞ்சுக்கணுமாம்...’

‘வேண்டாம்... வேண்டாம்... வேண்டாம்...’

அந்த கிளி சிறகுகள் படபடக்க அலறியது.

ரகுவீர் காமிராவில் அது பேசுவதை பதிவு செய்ய விரும்பியவன் போல, அதற்காக காமிராவை எடுக்க விருந்தினர் மாளிகைநோக்கி ஓடத்தொடங்கினான்.

‘நில்லு...’ பெரிய குரலில் மந்திச்சித்தர் அவனை தடுத்தார். அவனும் நின்றான்.

‘எங்க போற?’

‘கேமரா... கேமரா எடுக்க?’

‘இனி நீ அதை தொடவே கூடாது..’

‘ஐயோ.. ஒரு கிளி பேசுது.. எவ்வளவு பெரிய விஷயம். இதை படம் பிடிக்க வேண்டாம்?’

‘வேண்டாம். அது பெரிய விஷயம் இல்ல. ரொம்ப சாதாரண விஷயம்.’

‘அது சரி, ஏன் வேண்டாம்... வேண்டாம்.. வேண்டாம்னு மூணுதடவை கத்தினிச்சு..’

‘நானே சொல்றேன்.. சராசரி மனுஷங்க அதுக்குண்டான ஆசாபாசங்களோட இருந்துடறதுதான் நல்லது. அதிக ஆசைப்பட்டா அப்புறம் என்னை மாதிரிதான்.’

‘உன்ன மாதிரிதான்னா?’

‘இந்த கிளிக்குள்ள இருக்கற பூவாயி உங்களப்போல ஆசைப்பட்ட ஒரு மானிடப்பெண். சம்பங்கிநாதர்க்கு தினமும் பூப்போட்டு அர்ச்சனையே பண்றவ. அவர் ஒரு முறை ஏகாந்தமா இருந்தப்ப ‘என்ன வரம் வேணும் கேளுன்னார்.’ ‘எதுவேணும்னாலும் தருவீங்களான்னு மடக்கினவ நல்லா மாட்டிக்கிட்டா..’

‘மாட்டிக்கிட்டான்னா... எப்படி?’

‘அவர்கிட்ட கூடுவிட்டு கூடுமாற்றும் பயிற்சியை சொல்லி கொடுக்கச் சொன்னா.. வாக்கு தவறிட்டோம்னு யாரும் தன்னை சொல்லிக் கூடாதுன்னு அவரும் சொல்லிக் கொடுத்தார். அதை பரீட்சை செய்து பார்க்க ஒரு அடிபட்டு கிடந்த கிளி உடம்புல நுழைஞ்சா, அந்த சமயத்துல அவ உடம்பை இந்த காட்டுல திரியற வேங்கைப்புலி ஒண்ணு விழுங்கிடிச்சு.. அன்னிலேர்ந்து தனக்கேத்த உடம்பு கிடைக்காம அலைஞ்சுகிட்டேயிருக்கா..’

மந்திச்சித்தர் சொல்லச் சொல்ல அவர்களுக்கு ஏதோ சிறுவர் கதை கேட்டமாதிரிதான் இருந்தது.

ஆனாலும் இந்த நிஜங்களுக்குதான் என்ன ஒரு சக்தி.

அந்தக்கிளி விசும்பி விசும்பி அழுதது.

‘அழாதே.. உனக்கு விமோசனம் பொறக்கும். நான் இருக்கேன்ல..’ அவர் தேற்றினார்.

அதுவும் அடுத்த நொடி அவர் பிடியில் இருந்து எகிறி வானத்தில் பறக்க ஆரம்பித்தது!

நால்வர் முகத்திலும் ஈயாடவில்லை!

நள்ளிரவு!

வானில் ஜரிகையைத் தூவினாற்போல நட்சத்திரப் புள்ளிகள். நிலவு ஒரு பறக்கும் தட்டு நழுவிச் சரிகிற மாதிரி வானில் ஒரு பக்கம் சரிந்தபடி இருந்தது.

நல்ல தண்ணொளி ரேடியம் வெளிச்சத்தை நீரில்

கரைத்து ஸ்ப்ரே செய்தமாதிரி அந்தரம் முழுக்க ஒருவித வெளிர்நீலம். பட்சிகள் ஓரளவு அடங்கிவிட்டிருந்தன. ஆயினும் சில பூச்சி இனங்களுக்கு சும்மா இருக்க பிடிக்கவில்லை. 'ம்ம்ம்ம்...என்று ஹார்மோனியம் வாசித்துக் கொண்டிருந்தன.

சில பூனைகள் இரைதேடி மரக்கிளைகளில் தாவிக் கொண்டிருக்க அவைகளின் கண்களை ஒரு வெளிச்சக் கொளப்புள்ளியாய் நன்றாகவே உணர முடிந்தது.

அந்த நள்ளிரவில் 'ம்மே..' என்று ஒரு ஆட்டுக் குட்டியின் அவலக்குரல். குளிர்தாளாத முனகல் குரலாககூட அது இருந்தது.

பனிப்பொழிவும் அந்த வேளைக்கு அதிகம்தான். மனிதக் கண்களுக்கு மட்டும்தான் ரம்மியம்.

நடுநடுவே சில இடங்களில் தரைவாட்டத்தில் புதர்களிடையே சலசலப்பு. இரண்டு பேர் தலைமுதல் கால்வரை உடம்பை மூடிக்கொண்டு கையில் ஒரு வேல் கம்புடன் சுற்றிச்சுற்றி பார்த்தபடி நடந்து கொண்டிருந்தனர். காளப்பனும், கந்தையனும்தான் அவர்கள். அவர்களில் ஒருவன் தோளில் ஒரு சாக்கு மூட்டை. அதில் உள்ளே ஒரு கருங்குரங்குக்குட்டி அகப்பட்டு குதித்துக்கொண்டே இருந்தது.

பற்களால் முடிந்தவரை சாக்கைக் கடித்துக் குதறி தப்பி ஓட அது எல்லா முயற்சியும் செய்வதை அவர்கள் அவ்வப்போது கையில் உள்ள வேல்கம்பால் அடித்து அதை

தடுத்தனர். அதுவும் பயந்துகொண்டே அவர்களுடன் பிரயாணப்பட்டது.

ஒரு வழிப்பாதைபோல போன அந்த மலைப்பாதை சரிவில் அவர்களின் பழகிய கால்கள் சகஜமாக இயங்கியது.

சொத்தென்று ஒரு மலைப்பாம்பு அவர்கள் தோல் மேல் விழுந்து அச்சமூட்ட முயன்றாலும் அவர்கள் பெரிதாய் பதறாமல் அதை ஏதோ ஒரு குத்துச்சண்டை வீரன் பிடிபோட்டு வளைப்பதாய்க் கருதி அத்துடன் போராடி அதை உடம்பை விட்டு தூக்கியும் எறிந்தனர்.

நடுநடுவே ‘ம்மே.. ம்மே..’ என்கிற குட்டி ஆட்டுக்குரல் மட்டும் கேட்கத் தவறவில்லை.

ஒரு கட்டத்தில் ஆட்டுக்குட்டி தொடர்ச்சியாக அலறியது. குரலும் அப்படியே தேய்ந்து அடங்கியது.

அவர்கள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

‘மாட்டிக்கிச்சு... வசமா மாட்டிக்கிச்சு..’ என்றவர்கள் சட்டென்று வேல்கம்பு நுனியில் இடையைச் சுற்றி கட்டி வந்திருந்த எண்ணெயில் ஊறிய துணியைச் சுற்றி அதை உரசிய தீக்குச்சியிடம் கொண்டு சென்றனர்.

அதுவும் பக்கென்று பிடித்துக் கொண்டது. சுற்றிலும் உள்ள காட்டுப்பகுதியும் தாவரங்களும் கண்ணில் பளிச்சென்று தென்பட்டன. ஒரு சரிவில் சந்திரக்கொடி வெளிப்படையாக பரவியிருந்தது. தீச்சுடர் வெளிச்சம் படவும்

போலீஸைக் கண்ட திருடன் போல அப்படியே மண்ணுக்குள் இழுத்துக் கொண்டது. இருந்தும் அதைப் பறிக்க கந்தையன் முயன்றதில் அதன் நுனிக்கொடி பாகம்தான் கையில் சிக்கியது.

'தின்னவேலில ஒரு வைத்யர் இந்த சந்திரக்கொடிக்கு ஒரு அடிக்கு பத்தாயிரம்கூட தரேன். பார்த்தா பறிச்சிக்கிட்டு வான்னார். ஆனா அதுவோ மிருகம்மாதிரி ஒளிஞ்சிகிச்சு பார்..' என்ற கந்தையன் கையிலகப்பட்ட அந்த மூலிகைக் கொடியை பார்த்து ஒரு சிரிப்பு சிரித்தான்.

தீப்பந்தத்துடன் ஆட்டின் குரல் வந்த ஒரு மரத்தின் பக்கம் சென்று பார்த்தனர். பகலில் அவர்கள் அங்கே உருவாக்கிய நல்ல உறுதியான மூங்கில் கூண்டு. உள்ளே ஆட்டுக்குட்டியின் குரல்வளையைப் பிடித்து ரத்தத்தை ஏதோ சூப் குடிப்பதுபோல குடித்துக் கொண்டிருந்தது வரிப்புலி ஒன்று!

அது தீச்சுடரைப் பார்த்து கவ்விய ஆட்டுக்குட்டியை விட்டு எழுந்து பாயப்பார்த்தது. ஆனால் கூண்டு மூங்கில்கள் அதன் பாய்ச்சலுக்கு தடை போட்டன.

'மந்திரி அதிர்ஷ்டசாலி... அவருக்கு தேவையான நாலுல ஒண்ணு மாட்டிக்கிச்சு..' என்றான் கந்தையன்.

சாக்குப் பையிலிருந்த கருங்குரங்கு தலையை எப்படியோ வெளியே நீட்டிப் பார்த்தது.

நொட் என்று அதன் தலைமேல் ஒரு அடி அடிக்கவும்

உள் இழுத்துக்கொண்டது. திடீரென்று ஒரு மிளாமான் புதர் ஒன்றிலிருந்து அவர்கள் எதிரில் தலைதெறிக்க ஓடத் தொடங்கியது.

இதெல்லாம் இரவு வேட்டையில் சகஜமான காட்சிகள்.

'விட்டுட்டோமே...விட்டுட்டோமே..' என்று அந்த மானுக்காக கைகளைக்குத்தி பிசைந்து கொண்டான் காளப்பன்.

***

சம்பங்கிநாதர் சமாதிக் கோயில்!

சூரிய உதயத்தில் பளிச்சென்று தெரிய சரிவில் மேலேறும் நிலையில் சுட்டிக்காட்டினார் மந்திச்சித்தர்.

'விடிய விடிய நடந்ததுல கோவில் வந்துடுச்சி பாருங்க.' என்றார்.

அவர்களும் பார்த்தார்கள்.

'கன்னத்துல போட்டுக்குங்க..'

அவர்கள் சிரித்தனர்.

'உம்... உங்க படிச்ச திமிரை இங்க காட்ட வேண்டாம். குரு அனுக்கிரகம் இல்லேன்னா எந்த வித்தையும் வசப்படாது.' அவர் மிரட்டினார்.

அவர்களும் அசட்டையாக கன்னத்தில் போட்டுக் கொண்டனர். கோவில் காப்பாளர் நம்பிராஜன் கோவிலைச் சுற்றி வளர்ந்திருக்கும் பூச்செடிகளில் பூ பறித்தபடி இருந்தார்.

நால்வரோடு மந்திச்சித்தர் வருவதைப் பார்க்கவும் சிரித்தார்.

அவர்களும் நெருங்கினார்கள்.

‘வாங்க சாமி..’

‘வந்தேன்.. வந்தேன்..’

‘இந்த ஜீவர்கள்லாம் யார்..?’ நம்பிராஜன் கேட்டவிதமே வித்தியாசமாக இருந்தது.

‘நாலுபேரும் நாலு வேதம் மாதிரி.. அந்த தத்தாத்ரேய ஸ்வாமி நாலு நாயோட சுத்தினமாதிரி நான் இவங்களோட சுத்திகிட்டு இருக்கேன்...’

‘அப்ப இவங்க பரம சிஷ்யர்கள்னு சொல்லுங்க..’

மந்திச்சாமி சிரித்தார்.

நால்வரையும் பார்த்து, ‘நான் நில்லுன்னு சொல்றவரை நிக்காம இந்த கோவிலைச்சுற்றி பிரதட்சணமா வரணும்..’ என்றார்.

அவர்கள் முதலில் மறுப்பாக பார்த்தனர். பிறகு மறுத்தால் ஏதாவது சொல்வார் என்று பயந்து சரி என்று சம்மதித்தனர்.

‘முதல்ல போய் அதோ அந்த அருவிப்பாதைல குளிச்சுட்டு வாங்க பாப்போம்..’

அவர்களும் ஓடினர்.. குளித்தனர்.

‘உச்சாந்தலை நனையனும். அப்பதான் சப்தநாடியில் ஒரு

வேகம் கிடைக்கும்..'

அவர்களும் உச்சந்தலை நனைய ஓடும் நீரில் மூழ்கி எழுந்தனர். அப்படியே ஈரம் சொட்ட சொட்ட ஓடிவந்தனர்.

'உம்.. நிக்கக்கூடாது... குருவே நமஹ.. குருவே நமஹ.. குருவே நமஹன்னு சொல்லிகிட்டே ஓடுங்க பார்ப்போம்..'

அவர்களும் மறுக்கவில்லை.

'குருவே நமஹ...'

'குருவே நமஹ...'

'குருவே நமஹ...'

'குருவே நமஹ...'

என்று மேடும் பள்ளமுமுள்ள சமாதிக்கோவில் நிலப்பரப்பில் ஓடத்தொடங்கினர். மந்திச்சித்தர் முகத்தில் ஒரு மந்தகாசச் சிரிப்பு.

'சாமி.. யார் இவங்க.. எதுக்கு இந்த சோதனை?' நம்பி ராஜன் பக்குவமாக விசாரித்தார்.

'சோதனை இல்ல நம்பி.. இது இவங்களுக்கு தண்டனை.'

'இவங்க பண்ணின குத்தம்?'

'ஒரு காலத்துல நீங்க பண்ணினதுதான்.'

'அப்படின்னா?'

'இந்த காட்டயே உலகத்துக்கு காட்டிக் கொடுத் துட்டாங்க.'

‘ஐய்யய்யோ.. இனி என்ன பண்ணப்போறாங்க..’

‘காட்டிக் கொடுத்த பாவத்துக்கு காவல் காக்கப் போறாங்க..’

‘எப்படி சாமி...’

‘பாத்துகிட்டே இருங்க.. போகப்போக விளங்கும்.’

மந்திச்சித்தர் நம்பிராஜனை ஒருவரி பதிலால் தவிர்த்து விட்டு நேராக சம்பங்கிச்சித்தர் சமாதிமுன் சென்று அமர்ந்தார்.

கைகளை கூப்பி நமஸ்கரித்தார்.

அப்படியே திரும்பிப் பார்த்தார்.

அவர்கள் ஓடிக்கொண்டே இருந்தார்கள்!

## 8

***உலகின் தலைசிறந்த அறிவாளிகள் என்று போற்றப் படுபவர்கள்கூட அவரவர் மூளையின் மொத்த திறனில் பத்தில் ஒரு பங்கைத்தான் உபயோகித்துக் கொள்ள முடிகிறது. மீதமுள்ள ஒன்பது பங்கு வீணே முடங்கிக் கிடக்கிறது. ஓரளவு மூளைத் திறனைக் கொண்டே மனிதன் இவ்வளவு மகத்தான செயல்களைச் செய்ய முடிகிறது என்றால் முழுஅளவு மூளையையும் பயன்படுத்திக் கொள்ள முடியுமானால் மனிதனால்***

*செய்ய இயலாத விஷயங்கள் என்று எதுவுமே இல்லாமல் போய்விடும்! இந்த பிரபஞ்ச ரகசியங்கள் அனைத்தையும் அறிந்து கொள்ள முடியுமல்லவா..! இப்படி இயங்காத மூளையின் பகுதிகளை இயக்க வைப்பதற்கு பெயர்தான் குண்டலினி யோகமாகும். இந்த பிரபஞ்சம் முழுவதும் இயங்குவதற்கு ஆதாரமான சக்தியைத்தான் குண்டலினி சக்தி என்கிறோம். இதையே பிராணன் என்றும் கொள்ளலாம். விஞ்ஞானிகள் நம் உடல் இயக்கங்களெல்லாம் ஒருவகை உயிர்ப்புள்ள மின் சக்தியால்தான் நடைபெறுகிறது என்கிறார்கள். ஆனால் நம் முன்னோர்கள் சித்தர்களும் யோகிகளும் நம் உடல் சக்தி, குண்டலினி சக்தியின் சிறு துளியினால் இயங்குகிறது என்று கூறுகிறார்கள். அடிப்படையில் அதுவும் இதுவும் ஒன்றுதான் என்று புரிகிறதல்லவா.. பதஞ்சலி முனிவரும் திருமூலநாயனாரும் குண்டலினியோகம் பற்றி தெளிவாக விளக்கியுள்ளனர். இதை கடை பிடித்ததனால்தான் சித்தர்களும் தவயோகிகளும் நெடுங்காலம் நோய் நொடியின்றி வாழ்ந்தனர். திரிகால ஞானமும் தெய்வீக ஆற்றல்களுடன் அஷ்டமா சித்துக்களும் பெற்றிருந்தனர். அதை தேவைப்படுவோருக்கு உபதேசிக்கும் குருவருளும் பெற்றிருந்தனர். சித்துக்களை ஒருவருக்கு ஒரு*

***கணத்தில் கூட கற்றுத்தரும் வல்லமை பெற்ற பல சித்த புருஷர்கள் இன்றும் உள்ளனர்.***

ஆறு மாதங்களுக்குப் பிறகு....

கிரீச்சிட்டு நின்ற காரில் இருந்து கதிர் டி.வியின் சீஃப் ரிப்போர்ட்டர்களில் ஒருவனான டொமினிக் இறங்கினான். இடத்துக்கு பக்கத்திலேயே 'காரையார் மலைத்தளம் உங்களை வரவேற்கிறது' என்று ஒரு பெரிய போர்டு. அதைப் பார்த்தபடியே செக்போஸ்ட் நோக்கி நடந்தான். நான்கைந்து ஆபிசர்கள், போலீஸ் அதிகாரிகள் கண்ணில் பட்டனர். டொமினிக் அவர்களிடம் சென்று தன் ஐ.டி.கார்டை காட்டினான்.

'ஓ... ரிப்போர்ட்டரா.. உங்களுக்கு இப்ப என்ன வேணும்?' கேட்டனர்.

'இந்த மலைக்காட்டுக்குள்ற ஃபாரெஸ்ட் டிபார்ட்மெண்ட் ஆட்களாலையே போக முடியலையாமே.. எப்படி?'

'பேட்டி எடுக்க வந்துருக்கீங்களா?'

'ஆமாம்.. புலிகளோட தொந்தரவு அதிகமா இருக்குன்னு கேள்விப்பட்டேன். இதுவரை பதினாலு வெளிநாட்டுக்காரங்க, இருபத்திமூணு உள்நாட்டு ஆட்கள். அதுல மந்திரில இருந்து ஃபாரெஸ்டர் வரை பலரை அதுங்க அடிச்சு கொன்னுருக்காமே... அதை உங்களால வேட்டையாட முடியலியா?'

‘சாரி... உங்க கேள்விக்கெல்லாம் பதில் சொல்ற நிலைல நாங்க இல்ல.. இன்னிக்கு மத்திய புலனாய்வுத்துறையில இருந்து வர்றாங்க, நீங்க நாளைக்கு வாங்க விரிவா பேசலாம்.’

‘அவங்க வந்து என்ன பண்ணப்போறாங்க. அந்த புலிகளை எப்படி சுட்டுக்கொல்றதுன்னு பேசப் போறீங்களா?’

‘இப்ப எந்த கேள்விக்கும் என்னால பதில் கூறமுடியாது. நீங்க கிளம்புங்க.’ அதிகாரிகள் கத்தரித்தனர்.

‘நீங்க வேற சும்மா இல்லாம, உங்க டி.வியில வேற இந்த மலைல சாமியாருங்க இருக்காங்க, அவங்க இருக்காங்க, இவங்க இருக்காங்க, கூடுவிட்டு கூடுபாயறாங்க அப்படி இப்படின்னு என்னத்தையோல்லாம் ஒளிபரப்பிட்டீங்க.. அதால எங்களுக்கு எவ்வளவு இடைஞ்சல் தெரியுமா?’

அந்த அதிகாரிகளில் ஒருவர் பெரிய அளவில் வருத்தப் பட்டுக் கொண்டார்.

‘அரிய விஷயங்களை சொல்றதுதானே மீடியாவோட வேலை..?’ அவனும் திருப்பி கேட்டான்.

‘ஆனா.. அதனால இங்க எவ்வளவு பேர் வந்து இறந்து போய்ட்டாங்க தெரியுமா?’

‘அது எப்படி இவ்வளவு நாளா இல்லாம, இப்ப மட்டும் இப்படி புலிங்க தாக்குதல் நடத்துது.’

‘திரும்ப உங்க பேட்டிய ஆரம்பிச்சிடாதீங்க.. கிளம்புங்க. அப்புறம் நாங்க அதைச் சொன்னோம், இதைச்

சொன்னோம்னு, அதுல வேற எதாவது சிக்கல் வரப்போகுது.' அவர் பயப்படவும் செய்தார். டொமினிக்குக்கு ஏமாற்றமாக இருந்தது. காரை நோக்கி திரும்பி நடந்தான். கார் அருகே அந்த பளியர் இனத்தைச் சேர்ந்த பசு நின்று கொண்டிருந்தான்.

'சாமி..'

'என்னப்பா... என்ன வேணும் உனக்கு?'

'வாங்க தெரியும்...'

'எங்க?'

'அட.. வாங்க சொல்றேன்...'

'இல்ல, நீ யார்.. உனக்கு என்ன வேணும் சொல்லு முதல்ல.. அப்புறம் வரேன்..'

'எனக்கு எதுவும் வேணாங்க.. உங்களுக்குதான் இந்த மலைல என்ன நடக்குதுன்னு தெரியணும். அதுலையும் குறிப்பா புலிங்களோட வேட்டைக்கு காரணம் தெரியணும்ல.'

அவன் சரியான இடத்தில் வளைத்துப்பிடிக்க டொமினிக்குக்கு முதுகெலும்பில் ஊசி ஏறியதுபோல நிமிர்ந்தான். தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அவன் பின்னே நடந்தான். அவன் ஒரு ஒற்றையடிப்பாதை வழியாக மலைமேல் ஏறினான்.

'வாங்க... பயப்படாம வாங்க..' என்று அழைத்தபடியே முன்னால் சென்றான்.

வெகுதூரம் நடக்க வேண்டியிருந்தது. மூச்சிரைத்தது. வியர்வை ஆறாக ஓடிவந்து, கண்களை இருட்டித் தள்ளியது. நடுவில் திரும்பிவிட டொமினிக் முயன்றபோதெல்லாம், ‘வாங்க.. பெரிய விஷயம் தெரியணும்னா பெரிய அளவுல கஷ்டப்பட்டுத்தான் தீரணும்’ என்று சமாதானப்படுத்தி இழுத்துச் சென்றான். ஒருவழியாக ஒரு பள்ளத்தாக்கு போன்ற இடம் வந்தது. அதில் ஒரு மூங்கில் குடிசை. குடிசையை ஒட்டி சங்கீதச் சப்தத்துடன் மலை அருவியின் பாய்ச்சல். பார்க்க ரம்மியமாக இருந்தது. அதில் ஒரு மணல் திடல். அந்த திடலில் நான்கு புலிகள், ஏதோ நான்கு நாய்கள் ஒன்னுடன் ஒன்று கட்டித்தழுவி விளையாடிக் கொண்டிருக்கிறமாதிரி விளையாடிக் கொண்டிருக்க அருகில் காட்டில் பாறை ஒன்றின் மேல் மந்திச்சித்தர்.

டொமினிக்க்கும், பசுவும் வரவும் நிமிர்ந்தார். அந்த நான்கு புலிகளும்கூட டொமினிக்கை பார்த்துவிட்டு ஒரே பாய்ச்சலாக அவனை நோக்கி ஓடிச்சென்றன. அவர் உடனே ‘ரகுவீர்.. கண்ணா.. போ பின்னாலே.. ஜெகதீஷ்... பிருத்வி நீங்க அப்படியே அங்கையே நிக்கணும்.’ என்றார். அந்த புலிகளும் அப்படியே நின்றன. டொமினிக்குக்கு பலத்த ஆச்சரியம்.

‘வாப்பா...’ மந்திச்சித்தர் வரவேற்றார்.

‘நீங்க..’

‘என் பேர் மந்திச்சித்தன்பாங்க..’

‘என்னை எதுக்கு கூட்டிகிட்டு வரச்சொன்னீங்க..’

‘நீதானே டி.வி. நியூஸ் ரிப்போர்ட்டர்.’

‘ஆமாம்..’

‘உனக்கு தகவல் தரத்தான் வரச்சொன்னேன்.’

‘என்ன தகவல்..?’

‘போய் உங்க செய்தியில சொல்லு.. இந்த மலைய பத்தி இதுக்கு முந்தி நான் ஒளிபரப்பின தகவலெல்லாம் பொய். இங்க எந்த சாமியாரும் இல்லை. கூடுவிட்டு கூடுபாயற வித்தையும் நடக்கலை.’ அவரை டொமினிக் ஒருமாதிரி பார்த்தான்.

‘என்ன பாக்கறே?’

‘இல்ல.. நீங்க சொல்றத பார்த்தா இங்க எல்லாம் உண்மைல இருக்குங்கற மாதிரிதான் எனக்கு தோணுது.’

‘நீ தனிப்பட்ட முறையில நினைக்கறத பத்தி கவலையே இல்ல. ஊர் அப்படி நினைக்கக் கூடாது.’

‘அதவிடுங்க.. இப்பிடி ஊர் நினைக்கக்கூடாதுன்னு நீங்க சொல்லக்காரணம்..’ அவர் உடனே, அந்த நான்கு புலிகளையும் பார்த்தார். ‘இந்த புலிங்க இந்த காட்டுல சுதந்திரமா சுத்திகிட்டிருந்துச்சு.. அந்த மந்திரி இதுகளை பிடிச்சிகிட்டு போய் ஏதோ மாயமந்திர பூஜை செய்ய ஆசைப்பட்டான். இப்படி பல உபத்திரவங்க இந்த மிருகங்களுக்கு மட்டுமில்ல, இந்த காட்டுக்கும்தான்..’

‘ஓ.. அதனாலதான் அவர் இப்ப உயிரோட

இல்லையோ?'

'அவர் மட்டுமில்ல.. கடமையை ஒழுங்கா செய்யாத ஃபாரெஸ்ட்டர்ல இருந்து, காட்டுக்குள் சுயநலத்தோட வந்த ஒருத்தர்கூட இப்ப உயிரோட இல்ல.. இனியும் இருக்க மாட்டாங்க.. இருக்க இதோ இவங்க விடமாட்டாங்க..'

'அப்ப நீங்கதான் இந்த புலிகளை வெச்சிகிட்டு அந்த கொலைகளை செய்தவரா?'

'அப்படியும் சொல்லலாம்..'

'இது ஒருவித கிரிமினல் குற்றம்ங்கறது உங்களுக்குத் தெரியுமா?'

'நான் உன்னைப்போல சமுதாய மனிதனில்லை. இந்த காடும் உங்க மனித சமுதாயம் வாழற இடமில்ல. உங்க சட்ட திட்டங்களை இங்க பேசாதே..'

'என்ன மிரட்றீங்களா?'

'எப்படி வேணா எடுத்துக்கோ..'

'இதை அப்படியே நான் நியூஸ்ல சொல்லவா?'

'தாராளமா.. அதுக்கு முந்தி இவங்க சொல்றத கேள்..' அவர் புலிகளை பார்த்தார். அதில் ஒன்று பேசியது.

'மிஸ்டர் டொமினிக். நீங்க டெலிகாஸ்ட் பண்ணின கூடுவிட்டு கூடுமாறுவது பத்தின கேசட் எங்களோடதுதான். அது நாங்க எடுத்தது தான்! அதைத் தொடர்ந்து இந்த காட்டுக்கு வந்த நாங்க இந்த காட்டுல நடந்த பல

அநியாயங்களால இப்படி ஆயிட்டோம். கூடுவிட்டு கூடுமாறும் பயிற்சி எடுத்த நாங்க மந்திரி தனக்கு தேவைன்னு பிடிச்சுகிட்டு வரச்சொன்ன மயங்கின புலிகளப் பார்த்து அதுக்குள்ற பூந்து எங்க பயிற்சியை பரிசோதிச்சோம்.' இப்ப நாங்க வெளியவரத் தெரிஞ்சாலும், எங்க உடம்புகளை இவர் ஒளிச்சு வெச்சுருக்கறதால வரமுடியாம தவிச்சுகிட்டிருக்கோம். அதே சமயம் நீங்க ஒளிபரப்பின செய்தியால இந்த காட்டுக்கு ஏற்பட இருந்த பாதிப்புகளையும் ஏற்கனவே மந்திரி, ஃபாரெஸ்டர் இவங்களால ஏற்பட இருந்த பாதிப்புகளையும் நீக்கிட்டோம். இனியும் இப்படி நினைச்சு யார் வந்தாலும் அழிவாங்க.. அதேசமயம் நாங்க திரும்ப மனிதர்களா மாறி வரணும்னா அது இந்த காடு பழைய நிலைக்கு திரும்பறதுலதான் இருக்கு.. பரபரப்பா செய்தி போட்டு நீங்க எங்களை காலமெல்லாம் புலியாவே இருக்கும்படி செய்துடாதீங்க.. அதேசமயம் இவர் காட்டை காப்பாத்த நினைக்கறத கொச்சைப்படுத்திடாதீங்க.. பரபரப்புக்கும், காசு பணத்துக்கும் ஆசைப்பட்டுத்தான் நாங்க இப்ப இப்படி ஆயிட்டோம் நீங்களும் ஆயிடாதீங்க..'

டொமினிக் புலியில் ஒருவனாக திகழும் ரகுவீரின் பேச்சைக் கேட்டு ஸ்தம்பித்திருந்தான். அவனிடம் பேச்சு மூச்சில்லை. காண்பது கனவா, நனவா என்கிற சந்தேகம் வேறு...!

முற்றும்

மின்நூல் கூடம்

DIGITAL LIBRARY



Do you enjoy reading but can't get to your local library?

Then let us bring the library to **YOU**!

மின்நூல் ஆக்கம் : தமிழ் நேசன்